C. THIAGARAJAH.
HEAD WARDEN, A.R.P.
MANIPAY.

N. Velauthampillai A.R.P.
Navaly South
Manipay.

# ஆகாயத் தாக்கற் பாதுகாப்பு விதி.

## (ஏ. ஆர். பி. விதி.)

## இது ஒவ்வொருவரும் கைக்கொள்ளுதற் குரியது.

இலங்கை ஸிவில் பாதுகாப்புக் கொம்மிஷன
ருடைய கட்டளையின்படி
வெளியிடப்பட்டது.

PRINTED AT THE
CEYLON GOVERNMENT PRESS,
COLOMBO.

1942.

C. THIAGARAJAH.
HEAD WARDEN, A. R. P.
MANIPAY.

# முகவுரை.

இந்த முகவுரையுடன் நேரம் போக்காமல் இப்புத்தகத்திலுள்ள விஷயத்திற்கே நேரே செல்லுங்கள்.

பிரசைகளாகத் தங்கள் தங்கள் வேலையைச் செவ்வனே செய்தற்குத் தங்களைத் தகுதியுடையராக்கிக்கொள்ளுதல் ஒவ்வொருவரையும் பொறுத்த கடனாகும். ஆகாயத் தாக்குதலின்போது உங்கள் அறியாமையினாலேனும் சோம்பலினாலேனும் உங்களுக்குக் காயம் ஏற்படும்படி இடங்கொடுப்பீர்களேயானால், அதனாலே உங்களுக்கேயன்றி உங்கள் நாட்டிலுள்ளோர் யாவருக்கும் அநியாயம் செய்தவராவீர்கள்.

ஆகையினாலே நீங்கள் இன்னது செய்யவேண்டுமென்பதை இந்தப் புத்தகத்திலிருந்து கற்றுக்கொள்ளுங்கள். கற்ற விதிகளை நீங்களும் உங்கள் வீட்டிலுள்ளவர்களும் கிரமமாக அப்பியாசம் செய்து பழகிக்கொள்ளுங்கள். அப்படிச் செய்து வந்தால் எப்போதாயினும் ஆபத்து நேரிட்டவேளையிலே இந்தப் பாதுகாப்பு முறைகளைக் கைக்கொள்ளுதல் உங்கள் யாவருக்கும் இலகுவாயிருக்கும்.

அ. கோல்டிகற்.

1942 ம் ஸூ மார்ச்சுமீ 8 ம் உ.

C. THIAGARAJAH.
HEAD WARDEN, A. R. P.
MANIPAY.

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

2—J. N. 4855—10,000 (3/42)

## கொழும்பு மேயர் விடுத்த செய்தி.

ஒவ்வொரு பிரசையும் அறிந்துகொள்ளவேண்டியது இன்னது, செய்யவேண்டியது இன்னது, அதைச் செய்யும் விதம் இப்படியாம் என்னும் விஷயங்களை உங்களுக்குத் தெளிவான இலகுவான நடையிலே இந்தப் புத்தகம் கூறுகின்றது. இப்பொழுது இவைகளை நன்ருய் வாசித்தறிந்துகொள்ளுதல் உங்களொவ்வொருவரையும் பொறுத்த கடனுகும். ஏனென்ருல் நீங்கள் இவைகளை வாசித்து விளங்கியிருந்தால், அவசியம் நேருங்காலத்திலே நீங்களாகவே ஆகவேண்டிய காரியங்களைச் செய்துகொள்ளுவீர்கள்.

நாங்கள் இப்பொழுது முன்னணியிலிருக்கினேரும். ஜனநாயக சுதந்தரத்தை அழிய விடாமற் பாதுகாப்பதற்கும், அதனை மேன்மேலும் வளர்த்து உலகத்துக்குப் பயன் படும்படி செய்வதற்குமே நாங்கள் போராடுகின்ருேம். சமயத்துறையிலே நிர்வாணம், மோக்ஷம், பரலோகம் என்பன எவ்வாறு மனிதர் அடையவேண்டிய மேலான பதவி யாய் விளங்குகின்றனவோ, அவ்வாறே தேசியத்துறையிலே ஜனநாயக சுதந்தரம் மேலான இலட்சியமாய் விளங்குகின்றது.

இப்போது நடைபெறுவது " பூரண யுத்தம். " இதிலே போர் வீரரேயன்றிப் பொது ஜனங்களொவ்வொருவருமே வெற்றியின் பொருட்டுச் செய்யவேண்டிய கடமையும் தியாகமும் ஒவ்வொன்று உண்டு.

பொதுஜன பாதுகாப்பு, ஏ. ஆர். பி. என்னுமிவைகளின் நோக்கங்களாவன—

(i.) யுத்தத்திஞல் ஏற்படக்கூடிய ஆபத்துகளினின்றும் உங்களையும் உங்கள் சொத்துக்களையும் காப்பாற்றிக்கொள்ளும் வழிவகைகளை உங்களுக்குக் கற்பித் துக்கொள்ளுதலும், அவ்வாறே உங்கள் அயலவர்களுடைய பாதுகாப்புக்கு இவ்வழிவகைகளை அவர்களுக்கு நீங்கள் கற்பிக்கத்தகுந்தபடி உங்களை ஆற்ற லுள்ளவர்களாக்கி அக்கடமையைச் செய்ய உங்களுக்குத் துணைசெய்தலும்,

(ii.) வெற்றிக்காக நீங்களொவ்வொருவரும் உங்களுங்கள் கடமையை மிகுந்த திறமையுடன் செய்வதற்கும், உங்களெல்லோருடைய மனப்பூர்வமான கிரமமான முயற்சியினலே உங்களெல்லோருக்குமே மிகுந்த பலன் விளையும் படி செய்வதற்கும் ஏற்றபடி உங்களை ஆற்றலுடையவர்களாக்குதற்கு உங்கள் கடமைகளை ஒழுங்குபடுத்திக் கட்டுப்பாட்டுடன் செலுத்துதலுமேயாம்.

எங்கள் பொதுஜன பாதுகாப்பிலும் ஏ. ஆர். பி. ஸ்தாபனத்திலும் நிரம்பியிருக்கிற உங்கள் உற்சாகத்திலும் ஒழுக்கத்திலும் சகோதர பாசமே ததும்புகின்றது. இங்கே எல்லோரும் சேவிப்பதற்கே இருக்கின்றனர் ; சேவிக்கப்படுவதற்கு ஒருவருமில்லை. பூரண சேவைக்கு ஒவ்வொருவருடைய தியாகமும் அவசியம் தேவை. சேவையிலே எல்லோரும் சமமானவரே. தன் கடமையை அசட்டைபண்ணுகிற மேயரிலும் பார்க்கத் தன் கடமையைத் திறம்படச்செய்கிற தோட்டி மிகவும் மேலானவனுகின்ருன். எங்கள் பொதுஜன பாதுகாப்பு ஏ. ஆர். பி. ஸ்தாபனத்தை உங்களுடையதாக்குவதும் அதில் உங்கள் செயலே ஒங்கும்படி செய்வதும் இப்பொழுது உங்களைப் பொறுத்திருக்கிறது.

எங்களொவ்வொருவருக்கும் சோதனைக்காலம் வந்துவிட்டது. எங்கள் போராட்டத் தின் நோக்கம் பரிசுத்தமானது. அதிலே சிறுமையொன்றுக்கும் இடமில்லை. மேலான காரியத்துக்குத் தியாகம்பண்ணுதலினலேயே நாடுகள் வாழுகின்றன என்பதை எங்கள் முன்னேருடைய சரித்திரங்களிலும் எங்கள் மகான்களுடைய சரித்திரங்களிலும் காண் கிருேம். அந்தத் தியாக வாழ்க்கையை அவர்களுடைய வழித்தோன்றல்களாகிய நீங்கள் ஒருபோதும் கைவிடமாட்டீர்கள் என்பதே நமது திடநம்பிக்கை.

நகர மண்டபம்,
கொழும்பு, 1942 ம் ஸு மார்ச்சுமீ 20 ம் உ.

ஆர். சரவணமுத்து, M.B.,
கொழும்பு மேயர்.

## ஆகாயத் தாக்கற் பாதுகாப்பு விதி,

### பொருளடக்கம்.

| | பக்கம். |
|---|---|
| முகவுரை .. .. .. .. | i. |
| கொழும்பு மேயர் விடுத்த செய்தி .. .. .. | ii. |
| வாசகருக்கு .. .. .. .. | v. |
| விமானப்படையெடுப்பும் அதன் விளைவும் .. .. .. | 1 |
| எச்சரிக்கை .. .. .. .. | 9 |
| வீட்டில் ஒதுக்கிடம் .. .. .. .. | 13 |
| எரிகுண்டு .. .. .. .. | 22 |
| படையெடுப்பின் பின்பு செய்யவேண்டியன .. .. .. | 28 |
| இலகுவான முதலுதவிச் சிகிச்சை .. .. .. | 30 |
| கொழும்பு ஏ. ஆர். பி. ஸ்தாபனம் .. .. .. | 39 |
| கொழும்பு ஏ. ஆர். பி. திட்டமும் தல விபரமும் .. .. | 45 |

# வாசகருக்கு.

சத்துரு விமானப்படை இலங்கையின்மீது படையெடுத்து வரமாட்டாதென்றே நாங்கள் எண்ணுகிறோம். ஆனால் எப்போதாயினும் படையெடுப்பு நடந்தால் எங்களைக் காப்பாற்றிக்கொள்ளுகிறதற்காக நாங்கள் பாதுகாப்பு முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். மிகவும் முக்கியமான பாதுகாப்பு முறைகளைப் பிரசைகளே கைக்கொள்ளவேண்டும். ஆகையினாலே தவிர்க்கக்கூடிய சேதத்தையும் சீவ மோசத்தையும் எவ்விதம் தவிர்த்துக்கொள்ளலாம் என்பதை ஒவ்வொரு பிரசையும் அவசியம் அறிந்திருத்தல் வேண்டும். அந்த வழிவகைகளையே இந்தப் புத்தகம் அவர்களுக்குச் சுருக்கமாய் அறிவுறுத்துகின்றது. உங்கள் உங்கள் வீடுகளின் பாதுகாப்புக்கு நீங்களே பொறுப்பாளிகளாய்க் கரிசனை கொள்ளவேண்டியவர்களாதலினாலே, வீட்டுக்காரர் என்ற முறையில் இவ்வார்த்தையை உங்களுக்கு நேரே சொல்லுகிறோம். ஏ. ஆர். பி. (ஆகாயத் தாக்கற் பாதுகாப்பு) ஸேவை உங்களுக்கு உதவி செய்தற்காகவே ஏற்பட்டிருக்கிறது. ஆனால் உங்களையும் உங்கள் வீட்டிலுள்ளோரையும் பாதுகாக்கிறதற்கு உங்களுக்கு நீங்களே உதவிசெய்துகொள்ள வேண்டியது உங்களது முதற்கடமையாகும். என்ன செய்யவேண்டும் என்பதை முதலிலே கற்றுக்கொள்ள வேண்டும். பிற நாடுகளின் அனுபவத்தைக்கொண்டு உங்களுக்கு அவசியம் தேவையான மூலாதாரமான அறிவையே இந்தப் புத்தகம் கூறுகின்றது. மேலும் மேலும் புதிய விஷயங்களை நாங்கள் அறியும்பொழுது, கைக்கொள்ள வேண்டிய முறைகளும் மாற்றம் அடைதல் கூடும். சத்துருக்கள் காலத்துக்குக்காலம் புதிய தந்திரங்களைக் கையாளுகிறபடியால், நாங்களும் எங்களுடைய உபாயங்களைப் புதிய ஆபத்துக்கேற்றபடி மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும். இப்போதைக்கு இதிலுள்ள விதிகளின்படி கவனமாக நடவுங்கள்.

இன்ன விஷயமாக இன்ன காரியத்தை இன்ன விதமாகச் செய்யவேண்டுமென்பதை எடுத்தவுடனே இலகுவாக நீங்கள் கண்டறியும்பொருட்டு இந்தப் புத்தகம் அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதலாம் அத்தியாயத்திலே பலவகைக் குண்டுகளும் அவைகளின் விளைவுகளும் விரிவாகக் கூறப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். விமானப் படையெடுப்பின்போது இன்ன காரியம் நடக்கிறது, இன்ன காரணத்திற்காக இன்னதைச் செய்யவேண்டும் என்னும் விஷயங்களை அது கூறுகின்றது. எச்சரிக்கையைப்பற்றியும் படையெடுப்பு நடந்தவுடன் நீங்கள் செய்யவேண்டியதென்ன என்பதைப்பற்றியும் இரண்டாவது அத்தியாயம் கூறுகின்றது. உங்கள் வீட்டிலுள்ளவர்களுக்கு ஒதுக்கிடம் அமைத்தற்குரிய விதிகளை மூன்றாவது அத்தியாயம் கூறுகின்றது. இதுவரையிலே நீங்கள் ஒதுக்கிடம் அமைத்துக்கொள்ளாவிட்டால், நாளை நாளையென்னாது இன்றைக்கே, இப்பொழுதே அமைத்துக்கொள்ளுங்கள். எரிகுண்டுகளைச் சமாளிக்கும் விதம் நாலாம் அத்தியாயத்திலும் படையெடுப்புக்குப் பின் இன்னது செய்யவேண்டுமென்பது ஐந்தாம் அத்தியாயத்திலும், இலகுவான முதலுதவிச் சிகிச்சையைப்பற்றிய குறிப்புகள் ஆறாம் அத்தியாயத்திலும் கூறப்பட்டிருக்கின்றன. கடைசி யிரண்டு அத்தியாயங்களிலும் ஸிவில் (பொதுஜன) பாதுகாப்பு ஸ்தாபனத்தைப்பற்றியும் கொழும்பு ஏ. ஆர். பி. உத்தியோகஸ்தர்களைப்பற்றியும் விபரம் கூறப்பட்டிருக்கிறது.

அத்தியாயம் 1.

# விமானப் படையெடுப்பும் அதன் விளைவும்.

இப்பொழுது நடக்கிற யுத்தத்திலே பொதுஜனங்கள்மீது வேண்டுமென்றே குண்டு வீசப்பட்டுவருகிறது. குண்டை இராணுவப் பொருட்கள்மீது மாத்திரமே குறி பார்த்து வீசினாலும், இலக்குத் தவறாமல் வீசிக்கொள்ளுவது இலகுவில் முடியாது. குண்டானது ஆகாயத்திலே அதிக உயரத்திற் பறக்கும்பொழுது வீசப்படுவதனாலே, பார்த்த இலக்கு எள்ளளவாவது பிசகினால் அந்தக் குண்டு குறித்த இலக்கிலிருந்து எத்தனையோ மைலுக்கு அப்பாலே போய்விழும். அல்லாமலும் சத்துரு குறியைத் தப்பிதமாக எண்ணி வேறு பொருள்மீது குண்டை வீசுதலும் கூடும். சில வேளையிலே, இன்ன பொருள்மீது குண்டு வீசுவது என்றெண்ணி வந்தும் அந்தப்பொருளைக் கண்டு பிடிக்க முடியாமற்போனால், கொண்டுவந்த குண்டை மீளவும் சுமந்துசெல்ல விரும்பா மல், இன்ன பொருளை அழிக்கலாம் என்று மனம் ஏவிய பிரகாரம் அகப்பட்ட பொருள் மீதும் சத்துரு குண்டு வீசுவதுண்டு. ஒரு குண்டு வீச்சு விமானத்தைப் போர் விமானம் துரத்திச்சென்றால், அல்லது அதை எதிர்ப்புப் பீரங்கிகள் கடுமையாகச் சுட்டுக் கஷ்டப் படுத்தினால், அல்லது அதன் இயந்திரத்திலே எதாவது கோளாறு ஏற்பட்டால், அந்த விதமான வேளைகளில் அக்குண்டுவீச்சு விமானம் தனது பாரத்தைக் குறைத்து இலேசாக்கி விரைந்தோடித் தப்பிக்கொள்ள எண்ணித் தன்னிடமுள்ள குண்டுகளை எங்கேயானாலும்சரி வீசிவிட்டுப் பறப்பதுமுண்டு. சிலவேளையிலே அந்தக் குண்டு விமானமே சுட்டு வீழ்த்தப்பட்டால், அதனால் அவ்விமானத்திலுள்ள குண்டுகளும் வெடிப்பதுண்டு. ஆதலால் இந்தக் காரணங்களினாலே, சத்துரு விமானம் இராணுவப் பொருட்கள்மீதுதான் குறிவைத்துக் குண்டு வீசினபோதிலும், பொதுஜனங்கள் பாதுகாப்பு முறைகளைக் கட்டாயம் கைக்கொள்ள வேண்டியேயிருக்கிறது.

உண்மையை ஆராய்ந்து பார்க்கிறபொழுது, பகைவர் பொதுஜனங்கள்மீது வேண்டு மென்றே குண்டு வீசுகிறார்கள் என்று எண்ணவேண்டியிருக்கிறது. பிரான்ஸிலே ஜெர்மனியர் பொதுஜனங்களுக்கு வீட்டைவிட்டு வெளியே தெருவீதிகளுக்கு ஓடும்படி பயமுண்டாக்கினார்கள். அந்த ஜனங்கள் தெருவுக்கு ஓடிப்போனவுடனே பகைவர் அவர்கள்மீது குண்டுவீசி இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகமும்செய்து அந்த வீதிகளிலே பிரெஞ்சு இராணுவமே போய்க்கொள்ள முடியாதபடி பெருந்தடை யேற்படுத்திவிட்டார் கள். ஜெர்மனியருக்கு அங்கே கிடைத்த வெற்றிக்கு இதுவும் ஒருகாரணமாகும். பிலிப்பைன் தீவுகளிலே மணில்லா நகரத்தை அதிகாரிகள் பாதுகாப்பற்ற நகரமென்று பிரகடனம்செய்து அவ்வாறே அதன் பாதுகாப்புக்களையும் அகற்றியிருந்தனர். அப்படி யிருந்தும் அந்த நகரத்தின்மீது ஜப்பானியர் குண்டு வீசலாயினர். மலேயாவிலும் பர்மாவிலும் அவர்கள் இராணுவப்பொருளொன்றுமில்லாத நகரங்கள்மீதும் கிரா மங்கள்மீதும் குண்டுவீசலாயினர். பொது ஜனங்களைப் பகைவர் இப்படி மோசமாகத் தாக்குவதெல்லாம் அவர்களுக்குப் பயமுண்டாக்குதற்காகவேயன்றி அவர்களைக் கொல் லுதற்கன்று. ஜனங்கள் பீதிகொண்டு வெளியே தட்டுத்தடுமாறி ஓடித்திரிந்தால் வீதிகளிலே முக்கியமான ஸேவைகளுக்குத் தடையேற்பட்டுவிடும். அப்படித் தடை யேற்பட வேண்டுமென்பதுதான் பகைவருடைய நோக்கம். விசேஷமாக ஜனங்கள் தெருவீதிகளிலே கும்பலாய்க்கூடி அல்லோல கல்லோலப்படுவதுதான் அவ்வீதிகளில் நடைபெறவேண்டிய இராணுவ சேவைகளைச் சிதறப்பண்ணிவிடும். இதற்காகத்தான்

ஜெர்மனியர் காதடைக்கும்படி கீச்சிடுகிற குண்டுகளையும் ஜப்பானியர் ஆள்தாக்கிக் குண்டுகளையும் உபயோகிக்கலாயினர். இந்தக் குண்டுகள் மற்றக் குண்டுகளிலும் பார்க்க அதிகம் ஆபத்து விளைவிக்கக்கூடியவையல்ல. சுருங்கச் சொல்லுமிடத்து, ஜனங்கள் பயந்து வெளியேயோடிச் சேதமடைந்து உயிரிழந்து எஞ்சிய பிறருக்கும் பயமதிகரிக்கும்படி செய்வதே இவைகளைப் பகைவர் வீசுவதன் நோக்கமாகும்.

ஆகையினாலே எப்போதாயினும் ஜப்பானியர் இலங்கைமீது குண்டுவீசுவாராயின் நாங்கள் சகல பாதுகாப்பு முறைகளையும் செய்து எச்சரிக்கையுடனிருத்தல் வேண்டும். இராணுவப் பொருளொன்றுமில்லாத இடங்களுட்பட நாடு முழுவதும் தயாராயிருத்தல் வேண்டும். இதற்கு இரண்டு காரணங்களுண்டு. ஒன்று எங்கள் உயிரையும் எங்கள் இனசனத்தவர்களுடைய உயிரையும் காப்பாற்றுவது ; மற்றது பகைவருடைய நோக்கம் கைகூடாதபடி அவர்களைத் தோல்வியுறச் செய்வது. குண்டுவீசுதலினாலே நாங்கள் பயந்தோட அதனாலே முக்கியமான ஸேவைகள் தடைபட்டுப் பாதுகாப்புச் சேவைகளும் பாதிக்கப்படுமெனக் கண்டால், அவர்கள் எங்கள் நாடுமுற்றாய் முறிந்து ஒன்றுஞ்செய்ய முடியாமற் சோர்வடைந்து தங்களுக்கு இலகுவிலே இரையாகும்வரைக்கும் எங்கள்மீது குண்டுவீசிக்கொண்டே யிருப்பார்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய வெருட்டுதலுக்கு நாங்கள் பயப்படவில்லை யென்பதைக் கண்டுகொண்டால் எங்கள்மீது குண்டுவீசாமல் இலகுவான வேறு இலக்குகள்மீது குறிபார்க்க ஆரம்பித்துவிடுவார்கள். லண்டன் பட்டினத்தை ஜெர்மனிய விமானங்கள் எவ்வளவு பலமாகத் தாக்கிப்பார்த்தன. லண்டன் வாசிகள் பாதுகாப்புமுறைகளைக் கைக்கொண்டு எள்ளளவேனும் பயப்படாமலிருந்தார்கள். அதனாலே பகைவருடைய எண்ணம் பலிக்காமற்போயிற்று. போகவே அவர்கள் பலமாகத் தாக்குதலை நிறுத்திக்கொள்ளவேண்டியவராயினர். பின்னர் அவர்கள் சிறிய நகரங்களைத் தாக்கிப்பார்த்தனர். அங்கும் அவர்கள் கண்ட பலன் இதுதான். பிரித்தானியா, தனக்கும்பகைநாட்டுக்குமிடையே கிடப்பது 21 மைல் அகலமுள்ள கால்வாயேயானாலும், மாரிக்காலத்தைப் பகைவருடைய பெருந்தாக்குதலுக்கு ஆளாகாமற் கழித்துக்கொள்ளலாயிற்று. ஜனங்கள் அச்சங்கொள்ளாமலிருந்தது முக்கியமான காரணங்களுள் ஒன்றுமேயன்றித் தானேயொரு தனிக்காரணமாயிருக்கவில்லை. ஜப்பானியர் எங்களைத் தாக்குவரேயானால், நாங்களும் பிரித்தானியரைப் போலவேயிருத்தல் வேண்டும். எங்களைத் தாக்குவதாற் பிரயோசனமில்லையென்றும் தங்கள் கஷ்டத்துக்கேற்ற பலனில்லையென்றும் பகைவர் மனஞ்சலிக்கும்வண்ணம் நாங்கள் பாதுகாப்பு முறைகளைச் செவ்வனே கைக்கொள்ளவேண்டும்.

எங்களைக் காப்பாற்றிக்கொள்ளுகிறதற்கு, நாங்கள் எங்களுக்கு என்ன நேரிடக்கூடும் என்பதை அறிந்திருத்தல் வேண்டும். உண்மையாகவே குண்டுவீச்சு நடக்கப்போகிறதாம் என்று முன்னுக்கே தொடங்கி எண்ணிக்கொண்டிருந்தால் அந்த முன்னெண்ணமே உண்மையான குண்டுவீச்சிலும் பார்க்கப் பெருங்கெடுதியாகும். குண்டுவீச்சினும் பார்க்கக் குண்டுவீச்சைப்பற்றிய பேச்சு அதிகம் பீதியை உண்டுபண்ணுவதாகும். பிறவிடங்களிலே நடந்த விமானப்படையெடுப்பின் அனுபவமுள்ளவர்களுக்கு இது நன்றாய்த் தெரியும். தகுந்த பாதுகாப்பைத் தமக்கு ஏற்படுத்திக்கொண்டவர் நேரடியாக வந்து மோதுகின்ற குண்டைத்தவிர மற்றக் குண்டுகளால் ஒருபோதும் காயமடைவதுமில்லை ; கொல்லப்படுவதுமில்லை. நேரடியாகக் குண்டு மோதுவது அபூர்வமாய்த்தானிருக்கும். பெரிய விமானப்படையேயானாலும் அது சிறு தொகையான குண்டுகளையே சுமந்து செல்லும். இந்தக் குண்டுகளுள் அநேகம் பெரும்பாலும் சேதம் விளையக்கூடிய இடங்களில் விழுவதில்லை. ஜனங்கள் தகுந்த பாதுகாப்பு முறைகளைச் செவ்வனே

கையாண்டிருந்தால், கட்டிடங்களை மோததத்தவறுகிற குண்டுகளாலும் கட்டிடங்களுக்குச் சமீபமாக விழத் தவறுகிற குண்டுகளாலும் அவர்களுக்கு ஒருபோதும் சேதம் உண்டாக மாட்டாது.

**மும்முரமான மூச்சுள்ள வெடிகுண்டி**னலேதான் உயிருக்கும் உடலுக்கும் மோசமான ஆபத்து ஏற்படுவதுண்டு. இந்தக் குண்டிலே ஒரு உலோகத்தினற் செய்த கூட்டிலே வெடிமருந்து திணிக்கப்பட்டிருக்கிறது. அதை வெடிக்கப்பண்ணுவதற்கு அதனேடு ஒருவிதமான கருவியும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குண்டின் நிறை 2 றுத்தல் முதல் 4,000 றுத்தலுக்கு மேற்படவும் இருக்கும். இது மோதுப்பட்டவுடனே வெடிக்கினும் வெடிக்கும்; கட்டிடத்தையோ நிலத்தையோ சிறிது தூரம் துளைத்துச்சென்றபின் வெடிக்கினும் வெடிக்கும்; அல்லது காலம் தாழ்ந்தபின் வெடிக்கினும் வெடிக்கும். **பொதுநாசக்குண்டே** மிகவும் சாதாரணமாக உபயோகிக்கப்பட்டு வருகின்ற மூச்சுள்ள வெடிகுண்டாகும். இதன் நிறை 500 றுத்தல். இது ஏதாவதொரு பொருளுடன் மோதுப்பட்டவுடனே வெடித்துவிடும். இதனுள்ளிருக்கும் வெடிமருந்து வெடித்தவுடனே மிகவும் பலமான அமுக்கத்தோடு கூடிய வாயுவாக மாறி 25 அடி தூரத்துக்குத் திடீரென்று பரந்துவிடும். அது அப்படி வெடித்துப் பரக்கிறபொழுது அதைப்பொதிந்திருந்த உலோகக்கூடு 5,000 சிறு துண்டுகளாக அல்லது "சிதறு துண்டுகளாக" வெடித்துச் சிதறும்.

இந்தக் குண்டுவெடிக்கு 25 அடிக்குள்ளே யாராவது அகப்பட்டால் அவரை இந்தக் குண்டு நேரடியாக மோதிவிட்டது என்கிறேம். இவ்வளவு தூரத்தினுள் அகப்பட்டவர் அநேகர் இலேசான காயத்தோடு தப்பிப் பிழைத்துமிருக்கிறர்கள். அன்றியும் ஒரு கட்டிடத்தின்மீது குண்டு விழுந்தால் அக்குண்டு அக்கட்டிடத்தினுள்ளிருப்போரைக் கட்டாயம் கொன்றுவிடுமென்றே காயப்படுத்திவிடுமென்றே சொல்வதற்கில்லை. என்றலும் நேரடியான மோதுதலுக்குச் சிறிதேனும் அகப்படாமலிருக்கவேண்டுமானல் ஆகக்கூடி ஒரேயொரு வழிதானுண்டு. அது என்னவென்றல் நிலத்தின் கீழே 80 அடி ஆழத்திலே ஒதுங்கியிருத்தலாம். ஆனல் அதிலுமொரு சங்கடமுண்டு. அதன் வாயில்கள் சிலவேளைகளிலே அடைபட்டுப்போதல் கூடும். மற்றும்படிக்கு நேரடியான மோதுதலுக்கு வேறு உபாயங்களினலே பூரணமான பாதுகாப்பளித்தலென்பது முடியாத காரியமாகும். நேரடியாக மோதுதல் அற்பமாய் அபூர்வமாயிருத்தலினலே ஜனங்கள் அதற்கு அஞ்சவில்லை. மறைமுகமாக வருகிற விளைவுகளினின்றும் அவர்களைக் காப்பாற்றிக்கொண்டால் அவர்களுக்குத் திருப்தியுண்டு. இந்தக் காரணத்தினலே தான் லண்டனிலே ஆரம்பத்திலே நிலத்தின்கீழே றெயிற் சுரங்கங்களிலே ஒதுங்கிவந்தவர்கள் நாளடைவிலே அப்படிச்செய்வதைக் கைவிட்டுவிட்டுத் தங்கள் வீடுகளிலேயே இராப்பொழுதைக் கழிக்கலாயினர்.

மறைமுகமாய் வருகிற விளைவுகளாவன சிதறு துண்டுகள், வெடியதிர்ச்சித் தாக்குதல், இடிந்து சிதறிவிழுகிற கஞ்சல்குப்பை என்பனவாம். இவைகளினின்றும் தக்கவாறு காப்பாற்றிக்கொள்ளமுடியும்.

சிதறு துண்டுகள் எனப்படுவை குண்டிலிருக்கும் கூடு வெடித்தலினற் பறக்கிற துண்டுகளாம். வெடித்த இடத்திலிருந்து பறக்கும்பொழுது அவை மணித்தியாலம் ஒன்றுக்கு 5,000 மைல் வேகத்திலே செல்லும். தூரம் செல்லச் செல்ல அவைகளின் வேகம் மிகவும் விரைவிலே குறைந்துவிடும். சில துண்டுகள் நிலமட்டத்தோடு செல்லும். சில உயரச்சென்று கீழேவிழும். 150 யார் தூரத்திற்குள் உள்ள பொருட்களை அவை பாதிக்கும். ஆனல் அவைகளை நியாயமான உறுதியான தடைகளினலே தடுத்துவிடலாம்.

வெடியதிர்ச்சியானது மருந்து வெடித்துத் திடீரென்று வாயுவாக விசாலித்துப் பறத்தலினுலே அவ்விடத்திலிருந்த காற்றில் உண்டான அமுக்க அலைகளால் ஆயது குண்டு வெடித்த இடத்திற்கருகே அதனுடைய அமுக்கம் வெகு பெலமாயிருக்கும். அந்த இடத்தில் அகப்படுவோரை அது கொன்றுவிடும். பலஹீனமான தடைகளைத் தள்ளிவிழுத்தவேனும் இழுத்துவிழுத்தவேனும் அதற்கு ஆற்றலுண்டு. அதன் பலம் திடீரென்று கூடினதுபோலவே வெகு சடுதியாய்க் குறைந்தும்விடும். சிதறுதுண்டுகளி னின்றும் காப்பாற்றக்கூடிய தடைகளுக்கு வெடியதிர்ச்சியினின்றும் காப்பாற்றக்கூடிய ஆற்றலுண்டு.

இடிந்து சிதறுகிற கஞ்சல் குப்பை என்பது கட்டிடத்திலேனும், கல் நிலத்திலேனும், தெரு முதலிய கடினமான பூமியிலேனும் நேரடியாக மோதுகிற குண்டினுல் அவ் விடங்களிலிருந்து இடிந்து விழும் பொருட்களேயாம். பாரமான குண்டு நிலத்தி னுள்ளே சிறிது தூரம் துளைத்துக்கொண்டுபோனுல், அது வெடிக்க முன்பு பக்கத்தி லுள்ள பூமி முழுவதும் பூகம்பமுண்டான வேளையில் நடுங்குவதுபோல நடுங்கும். அப்படி நடுங்கவே கிட்டடியிலுள்ள கட்டடங்களும் நடுங்கியாடும். ஆடவே, பெலமில்லாத சுவர்களும், ஓடு முதலிய கனத்த சாமான்களும் விழும். பெலமில்லாத சுவர் முதலிய தடைகளிலே வெடியதிர்ச்சி தாக்குதலினுலும் அத்தடைகளும் விழுந்து சிதறும்.

சிதறுகிற கண்ணுடித்துண்டுகளைப்பற்றியும் இதற்கென்று தனியாக எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றுல் ஆகாயப் படையெடுப்பு வேளையிலே கண்ணுடியி னுலே மிகவும் மோசமான ஆபத்து விளைந்துவிடுகிறது. கண்ணுடி மிகவும் மென்மை யுள்ளது; இலேசாய் ஒடியத்தக்கது; வெடியதிர்ச்சியினுலே மிகவும் இலகுவிலே தாக்கப்பட்டுவிடுவது. வெடியதிர்ச்சியுள்ள இடத்திலே ஒரு நேரம் நேரடியான பெல மான அமுக்கம் இருக்கும். அடுத்த நொடிப் பொழுதிலே அந்த இடத்திலே திடீரென்று எதிரடியான உறிஞ்சுதல் இருக்கும். அதாவது காற்று வெகு வேகத் துடன் முன்னுக்கு ஊதப்படுவதும் உடனே பின்னுக்கு உறிஞ்சப்படுவதுமாயிருக்கும். கண்ணுடியின் ஒருபுறத்திலே காற்று வழக்கமான சாதாரண அமுக்கத்தோடிருக்கும் பொழுது மறுபுறத்திலே பெலமாக மோதுகிற அமுக்கம் அந்தக் கண்ணுடியை உள்ளே தள்ளிச் சிறிய துண்டுகளாய் வெகு வேகத்துடன் சிதறும்படிசெய்கிறது; அல்லது எதிரடியான உறுஞ்சுதல் அந்தக் கண்ணுடியை வெளியே சிறு துண்டுகளாய் வெடித்து வெகு வேகத்துடன் செல்லும்படி செய்துவிடுகிறது. இன்னும் விளக்கமாகச் சொல்லுவ தானுல், மூடியிருக்கிற கதவுகள் ஜன்னல்களின் கண்ணுடி சிலவேளை உள்ளே சிதறிப் பறக்கும்; சிலவேளை வெளியே சிதறிப் பறக்கும். இப்படிச் சிதறுகிற கண்ணுடித் துண்டுகள் மிகவும் அபாயகரமானவை. வெடியதிர்ச்சியைத் தாங்கக்கூடிய தடைகளாலே பாதுகாப்பு ஏற்பட்டிருக்குமிடங்களிலன்றி மற்றைய இடங்களிலே ஒருபோதும் கண்ணுடிக் குச் சமீபமாய் ஒதுங்கவேண்டாம். உங்கள் வீட்டிலே கதவுகளிலும் ஜன்னல்களிலும் பிறவற்றிலும் கண்ணுடியிருந்தால் அக்கண்ணுடியை முற்றுய் அகற்றிவிடுதலே மிகுந்த புத்திசாலித்தனமாகும்.

இதுவரையிலே கூறின அபாயங்களுள்ளே சத்துரு எந்த அபாயத்தை விளைவிக்கப் பெரிதும் விரும்புகின்றுனே, அதற்கேற்ற குண்டையே அவன் உபயோகிப்பான். அவன் தொழிற்சாலையைப்போன்ற கட்டிடங்களை நாசமாக்க விரும்பினுல், கட்டிடங்களி னுள்ளே வெடிக்கத்தக்கதாகத் தாமதித்து வெடிக்கும் பெலமான குண்டை உபயோகிப்பான் அல்லது கட்டிடங்களுக்குச் சமீபமாக விழுந்து சுவரைத் தன் வெடி

யதிர்ச்சியினலே விழுவிக்கக்கூடிய குண்டை உபயோகிப்பான். இந்தக் குண்டுகள் நிலத்தையோ கட்டிடத்தையோ சிறிது தூரம் ஊடுருவிச் சென்று வெடித்தலினலே இவைகளிலிருந்து கிளம்பிச் செல்லுகிற சிதறு துண்டுகள் அதிகம் அபாயகரமான வையாயிருக்கமாட்டா. அவ்வாறே இவைகளின் வெடியதிர்ச்சியும் சிறிது வலிமை குன்றியேயிருக்கும். வெடியதிர்ச்சியினலே நாசப்படுத்த விரும்பினல் ஏராளமான மூச்சுள்ள வெடிமருந்து திணித்த மெல்லிய கோதுள்ள கூடுடையதாய், மிகவும் பாரமுள்ளதாய், மோதுப்பட்டவுடன் வெடிக்கத்தக்கதாயிருக்கின்ற வெடிகுண்டை உபயோகிப்பான். இந்த இனத்திலே நிலக்கண்ணிகள் மிகவும் அபாயகரமானவை. இவைகள் பராசூட் குடைவழியாக வீசப்படுவன. ஆதலினலே இவைகளைக் குறிபார்த்து வீசுதல் சிறிதும் முடியாது. கடைசியாக, பொது ஜனங்களைச் சிதறு துண்டுகளினலே கொல்ல விரும்பினல் அவன் **ஆள்தாக்கிக் குண்டுகளை** உபயோகிக்கின்ருன். ஜப்பானியர் இதுவரையிலே இந்த விதமான குண்டுகளையே அதிகம் பயன்படுத்தியிருக்கின்றனர். இவை மிகவும் இலேசானவை. ஆதலினலே இவைகளின் சிதறு துண்டுகள் வெகு தூரம் செல்லமாட்டா ; நியாயமான மெல்லிய தடைகளையும் ஊடுருவிச் செல்லமாட்டா. இவைகளுடைய வெடியதிர்ச்சியும் வலிமையிற் குறைந்தவையே. இவைகளுடைய அமுக்க அலைகளும் சுவர்களை வளைந்துவிழப்பண்ணமாட்டா. வேறு விதமாகச் சொல்லு வதானல், இந்தக் குண்டுகள் வெடிக்கும்பொழுது இவைக்கு 50 அல்லது 60 யார் தூரத்திற்குள் அகப்பட்டவர்களுக்கு மோசமான அபாயம் வரும். ஆனல் ஒதுக்கிடங் களில் ஒதுங்கியிருப்பவர்களை இவை பாதிக்கமாட்டா. ஜெர்மனியர் 500 ருத்தல் நிறை யுள்ள பொதுநாசக் குண்டுகளையே பெரும்பாலும் உபயோகிக்கின்றனர். ஏனென்ருல் அந்தக் குண்டுகள் மேற்கூறிய அபாயங்களை உள்ளபடி ஓரளவுக்கு விளைவித்துவிடு கின்றன.

**நெருப்புப் பற்றிக்கொள்ளுதலும்** ஒரு அபாயமாகும். மூச்சுள்ள வெடிகுண்டு வெடித்த இடத்திலே நெருப்புப்பற்றி யெரியக்கூடிய பதார்த்தங்களிருந்தால் அவை களிலே நெருப்புப் பிடித்துவிடும். விசேஷமாக காஸ் (Gas) குழாயிருக்கிற இடத்திலே நெருப்பின் அபாயம் மிகவும் மோசமாயிருக்கும். ஆனபடியால் பகலிலே "அபாய ஒலி" கேட்டவுடனே காஸ் குழாயின் முக்கிய இணைப்பைத் தடைப்படுத்திவிட வேண்டும். இரவிலே அதை முற்ருய் நிற்பாட்டிப்போடவேண்டும். மின்சார இணைப்பையும் நிற்பாட்டிவிடல் வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அமுக்கத்தினலோ வெடியதிர்ச்சியி னலோ மின்சாரம் பாய்ந்து நெருப்புப் பற்றும்படி செய்துவிடும். சாதாரணமாக நெருப்புப் பற்றும்படி செய்யவிரும்பிய சத்துரு எரிகுண்டுகளை உபயோகிப்பது வழக்கம். இவை களிலே மூன்று விதமான குண்டுகளுண்டு. இவைகளைப்பற்றி இவைகளை யெதிர்த்துச் சமாளிக்கும் விதத்தைக் கூறுகின்ற ஆரும் அத்தியாத்திலே கூறுவோம். நெருப்பை அவசியம் அணைத்துக்கொள்ளவேண்டியதற்கு ஒரு காரணம் என்னவென்ருல், இரவிலே, அந்த வெளிச்சத்தைக்கொண்டு பகைவர் பிற பொருட்கள்மீது இலகுவிலே குறிபார்த்து மூச்சுள்ள வெடிகுண்டுகளை வீசுதல் கூடும். அயல் முழுவதும் வெளிச்ச மாகிவிடுகிறபடியால் குண்டுவீச்சு விமானங்கள் தங்கள் இலக்குப் பொருட்களை இலகுவிலே கண்டுபிடித்துவிடும்.

**சூ்ளொளியைப்பற்றியும்** ஒரு வார்த்தை கூறுவோம். இங்கே சூள் என்றது வெகு நேரம் நின்று எரியும்படியாகப் பராசூட்குடையிலே மாட்டிவிடுகின்ற ஒருவகைப் பந்தத்தை யாகும். இந்தப் பந்தங்களினலே ஆபத்தொன்றும் விளைவதில்லை. ஆனல் அது கொழுந்துவிட்டெரியும்பொழுது நல்ல வெளிச்சம் உண்டாதலினலே இரவிலே பகை

விமானத்திற்கு நாடு முழுவதும் நன்றாய்த் தென்படும். தென்படவே பகைவர் தாம், விரும்பிய பொருள்மீது இலகுவிலே குறிபார்த்துக் குண்டுவீசிக்கொள்வர். இந்தப் பந்தங்கள் நிலத்தைச் சேருவதற்கிடையிலே எரிந்துமுடிந்துவிடுகின்றன வாதலினாலே தாங்களாக ஒரு சேதமும் உண்டுபண்ணமாட்டா. இவைகளைக் கண்டு ஒருவரும் பயப்படவேண்டியதுமில்லை. இருந்தாலும், இவை பகைவர் சூச்சுள்ள குண்டுகளை வீசப்போகின்றனர் என்பதற்கு அறிகுறியாய் முன் வருதலினாலே இவைகளைக் கண்டவுடன் பகைவருடைய குண்டு வீச்சு நடைபெறப்போகிறது என்பதை யுணர்ந்து ஒதுக்கிடங்களுக்கு ஓடி ஒதுங்கிக்கொள்ளல் வேண்டும்.

இன்னொரு விதமான தாக்குதல் **இயந்திரத் துப்பாக்கியினாற் சுடுதலாகும்.** இதைப் பற்றி நினைக்கிற பொழுதும் பேசுகிறபொழுதும் இது மிகவும் அபாயகரமானது போலத் தோன்றும். ஆனால் ஆகாயக் கப்பல் பறக்கிற வேகத்தினாலே இந்தவிதமான தாக்குதலால் அவ்வளவு அபாயம் ஏற்படுவதில்லை. இந்தத் தாக்குதலைச்செய்கிறதற்கு விமானம் மிகவும் தாழப் பறந்து பெரும்பாலும் **சுழியோடிக் குண்டுவீச** வேண்டியிருக்கிறது. விமானம் சுழியோடும்பொழுது தான் பறந்து செல்லும் திசையை நோக்கிக் குண்டு வீசுதலினாலே மற்றும் வேளையிற்பார்க்க மிகவும் இலக்காகக் குறிபார்த்து வீசிக்கொள்ள முடியும். அது நிலத்துக்குச் சமீபமாக வந்தவுடனே அவ்விடமெங்கும் சன்னங்களைச் சிதறுவிக்கும். ஜனங்கள் கும்பலாயக் கூடி நின்றால் அந்தச் சன்னங்களால் அபாயமுண்டு. ஆனால் அச் சன்னங்களினும் பார்க்க இரைச்சல்தான் அதிகம் பயங்கரமாயிருக்கும். பயந்தோடுகிற ஜனங்கள் தெருக்களிலே கும்பலாய்க் கூடிநிற்பது சத்துருவுக்கு வாய்ப்பான இலக்காய்விடும். வெடியதிர்ச்சிக்கும் சிதறு துண்டுகளுக்கும் அகப்படாதபடி பாதுகாப்புச் செய்துகொண்டவர்கள் இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பயப்படவேண்டியதில்லை. ஏனென்றால் அந்தப் பாதுகாப்பே இதற்கும் பாதுகாப்பாகும். விசேஷமாக, ஒரு விமானம் உங்களையே நோக்கிச் சுழியோடி வருவதை நீங்கள் கண்டால் அதற்குப் பயந்தெழுந்து வெளியே ஓடமுயல வேண்டாம். தற்செயலாகத் திறந்தவெளியான இடத்திலேதான் நீங்கள் அகப்பட்டுக் கொண்டால் அந்த இடத்திலேயே குப்புறக்கிடவுங்கள். அப்படிச் செய்வதனாலே ஆபத்து மிகவும் குறைவாயிருக்கும்.

விமான எதிர்ப்புப் பீரங்கிகள் கிட்டடியிலிருந்தால் அவைகளாலே பகைவிமானங்களுக்கு அபாயம் அதிகமாயிருக்கும். ஆகையினால் அவ்விடங்களிலே அப்பகைவிமானங்கள் பெரும்பாலும் இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யமாட்டா. என்றாலும், குறித்த பொருளுக்குச் சமீபமாக வெடித்துச் சன்னங்களைச் சிதறுவிக்கக்கூடிய குண்டுகளைப் பகைவர் உபயோகிப்பராதலின் அவ்விதமான குண்டுகளின் சன்னங்களுக்கு அகப்படாதபடி ஜனங்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளல் வேண்டும். விமான எதிர்ப்புப் பீரங்கிகளிலிருந்து புறப்படுகிற குண்டுகள் ஆகாயத்திலே வெடித்து அநேக சிறு துண்டுகளாகச் சிதறும். அந்தத் துண்டுகள் நிலத்தை நோக்கி விழும். அவைகளுடைய வேகம் குறைந்திருத்தலினாலே, அவைகள் மற்றைய வெடிகுண்டுகளின் சிதறுதுண்டுகளைப்போல அபாயகரமுள்ளனவல்ல. என்றாலும் அவைகள் கீழே விழுதலினாலே, அவைகள் உங்கள்மீது விழாமலிருக்கும்பொருட்டு நீங்கள் ஒதுக்கிடங்களிலே கட்டாயம் ஒதுங்கிக்கொள்ளுவதுதான் மிகவும் நல்லது.

எல்லாவற்றையும் தொகுத்துச் சொல்லுவதானால், ஆகாயத் தாக்குதலின்போது, அதிலும் விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் வெடித்தீர்ந்துகொண்டிருந்தால், ஒரே பேரிரைச்சலாயிருக்கும். எதற்கும் தகுந்தபடி பாதுகாப்புக்களைச் செய்துகொண்டால் அபாயம்

மிகவும் அற்பமாய்விடும். வெடியதிர்ச்சி சிதறுதுண்டுகள் என்னுமிரண்டாலும் வருகிற அபாயத்தைத் தடுக்கக்கூடிய பாதுகாப்புக்களைச் செய்துகொண்டால் அபாயமொன்றுமில்லை. நேரடியான மோதுதலோ மிகவும் அபூர்வம். ஆனபடியால் அதற்கும் பயப்படவேண்டியதில்லை. விமானப் படையெடுப்பு நடக்கும்போது, நீங்கள் திறந்த வெளியிலே அகப்பட்டுக்கொண்டால் நின்ற இடத்திலேயே குப்புறப்படுத்துக்கொள்ளுங்கள். அப்படிச் செய்வதனாலே நேரடியான மோதுதல் ஒன்றைத் தவிர மற்றெவ்வகையான அபாயங்களும் குறைவாயிருக்கும். அப்படிச் செய்யாமல் எழுந்துநின்றால் அல்லது ஓடித்திரிந்தால் அபாயம் அதிகமாகிவிடும். எங்கேயாவது ஒதுங்கிக்கொள்ள வசதியிருந்தால் அங்கே ஒதுங்கிக்கொள்வது நல்லது. ஆனால் குண்டுகளின் இரைச்சலையோ அல்லது அவை வெடிக்கிறதையோ கேட்டால் உடனே நிலத்திலே குப்புற விழுந்து கிடக்கவேண்டும். ஒதுக்கிடத்திற்குப் போகவிரும்பினால், எழுந்து ஓடாமல் நிலத்திலே தவழ்ந்துதான் போகவேண்டும். விமானங்களிலிருந்து வீசின குண்டுகள் ஒருபோதும் நேரே செங்குத்தாக விழுவதில்லை. இவை இரண்டொரு மைலுக்காப்பாலிருந்து சாய்வாய்ச் சரிந்துதான் வரும். அது விமானம் பறக்கிற உயரத்தையும் வேகத்தையும் பொறுத்திருக்கிறது. ஆனபடியால் நேரே தலைக்குமேலே விமானமில்லாதபடியால் உங்களுக்குச் சமீபமாகக் குண்டு ஒன்றும் விழமாட்டாதாக்கும் என்று எண்ணிவிட வேண்டாம். எதற்கும் எங்கேயாவது ஒதுங்கிக்கொள்ளுவதே மகா விசேஷம். அபாயத்தினின்றும் உங்களைப் பாதுகாக்கக்கூடிய எதுவும் ஒதுக்கிடம் என்றே சொல்லப்படும். கட்டிடங்களின் சுவரும் நல்ல ஒதுக்கிடந்தான். ஆனால் கட்டிடத்தினுள்ளேயே ஒதுங்கிக்கொண்டால் அது வெளியே ஒதுங்குவதினும்பார்க்க மிகவும் நல்லது. ஏனென்றால் அது அக்கம் பக்கம் முன் பின் மேல் என்ற ஐந்து திசையிலும் பாதுகாப்பளிக்கும். கட்டிடத்தின் வெளிப்பக்கத்திலே அல்லது எல்லைச் சுவரருகே ஒதுங்கினால் ஒரு பக்கத்திற்குத்தான் பாதுகாப்பு ஏற்படும். சுவர் விழுவதானால் உங்களுக்குமேலே விழமாட்டாது. ஆனால் சுவர் பெலமில்லாததென்று நீங்கள் எண்ணினால் அதற்கு எதிரே அல்லது கட்டிட உயரத்தின் அரைவாசியளவு தூரத்துக்கு அப்பால் ஒதுங்குங்கள். அப்படிச் செய்தால் இடிந்துவிழுகிற கஞ்சலுக்கும் நொருங்கி விழுகிற ஓடுகளுக்கும் அகப்படாமற் பிழைத்துக்கொள்வீர்கள்.

இவைகளிலும் பார்க்க அகழிக்கிடங்கு அல்லது பள்ளமான வாய்க்கால் முதலிய வற்றிலே பாதுகாப்பு மிகவும் அதிகமுண்டு. நீங்கள் இவைக்குள்ளிருக்கும்போது நிலமட்டமாகச் சிதறுகிற துண்டுகளெல்லாம் உங்கள் தலைக்குமேலாகவே போய்விடும். வெடியதிர்ச்சியின் அமுக்க அலைகள் பின்வாங்கிச் செல்லுகிறபோதுண்டான அதைப்பு மாத்திரம் இருக்கும். அதனால் ஒரு கெடுதியும் வராது. நீங்கள் ஒதுங்கிய இடம் (அகழி முதலியன) கட்டிடங்கள் இடிந்து விழுந்து சிதறக்கூடிய தூரத்துக்கு அப்பால் இருக்குமானால், சரீரத்திலே மேலே வெளியாகத் தெரியும்படி விடப்பட்டிருக்கும் பாகத்தில் மாத்திரம் விழுகிற சிதறுதுண்டோ சன்னமோ உங்களை மோதுதல்கூடும். அகலமான அகழியானால் அங்கே குப்புறப்படுத்திருங்கள். ஒடுக்கமான அகழிக்கிடங்கானால், தலைமறைவாக நிற்கமுடியுமென்றால் நிற்கலாம். இல்லாவிட்டால் அதனுள்ளே குந்தியோ குனிந்தோ இருந்துகொள்ள வேண்டியதுதான். மேலே மூடப்படாத வெளியாய்கிடக்கிற அகழியானாலும் அங்கே அபாயம் குறைவாகவேயிருக்கும்.

எல்லாவற்றிலும் பார்க்க மிகவும் விசேஷமான பாதுகாப்பு வீட்டினுள்ளேயே அல்லது கட்டிடத்தினுள்ளேயே தங்கியிருத்தல் அல்லது உங்கள் ஒதுக்கிடங்களிலே ஒதுங்கியிருத்தலேயாம். அபாய ஒலி கேட்டவுடனே அல்லது குண்டு விழ ஆரம்பித்தவுடனே

நீங்களும் உங்கள் வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் சடுதியிலே ஓடி ஒதுங்கிக்கொள்ளத் தக்கதாக உங்கள் வீட்டினுள்ளேயே ஒரு அறையைப் பெலப்படுத்திப் **பாதுகாப்புக் கூடமாக** அமைத்துவைத்துக்கொள்ளல் வேண்டும். வீட்டினுள்ளே பாதுகாப்புக் கூடம் அமைத்துக்கொள்ள முடியாவிட்டால் கிட்டடியிலே ஒரு அகழியாவது வெட்டி வைத்திருத்தல் வேண்டும். இந்தப் பாதுகாப்பைப்பற்றி மூன்றாம் அத்தியாத்திலே விரிவாகக்கூறுவோம். பொது ஜனங்கள் சம்பந்தப்பட்டவரையிலே விமானப் படையெடுப்பின் பிரதானமான நோக்கம் என்னவென்றால் அவர்களைப் பயப்படுத்தி மூடத்தனமான காரியங்களைச் செய்வித்தலேயாம். மூடத்தனமான காரியங்களாவன வெளியான இடங்களுக்கு ஓடிப்போய்ப் பகைவருடைய குண்டுக்கு இலக்காகும்படி நிற்றல், விடுப்புப் பார்க்கிறதற்குத் தெருவிலே கும்பலாய்க் கூடுதல், பிற விடங்களைப் பாதுகாப்பான இடமென்று தப்பிதமாக எண்ணி இருந்தவிடத்திலுள்ள வேலையைக் கைவிட்டுப்போதல், பரிகாசத்துக்கு ஆளாதல் முதலியவைகளேயாம். உங்களைப் பொறுத்தவரையிலே நீங்கள் **மனங்கலங்காமல் அமைதியாய்ச் சாந்தமாய்** இருத்தல் வேண்டும். நீங்கள் புத்திசாலித்தனமாக நடப்பதாலேயே உங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் வீட்டிலுள்ள மற்றவர்களையும் திகிலடையாதபடி நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்குச் சுலபமான வழி நீங்களே கெடிக்கலங்காமலிருப்பதுதான். விசேஷமாக, **பெற்றோர் எப்படி நடக்கிறார்களோ பிள்ளைகளும் அப்படியே நடப்பார்கள்.** முந்தி எப்போதாவது குண்டு வீச்சைக் கண்டு அதிலே கஷ்டப்பட்டிருந்தாலல்லாமல் மற்றும்படிக்குப் பிள்ளைகள் விமானப்படையெடுப்புக்குப் பயப்படமாட்டார்கள். உங்களிலும் பார்க்க அவர்களுக்கு மனோபாவனை குறைவு. நீங்கள் பயப்படுத்தினாலன்றி அவர்கள் தாங்களாகப் பயப்படமாட்டார்கள். நீங்கள் அவர்களுக்கு ஒன்றையும் சொல்லாமல் ஒளித்து மறைக்கவேண்டாம். மற்றவர்கள் யாராவது அவர்களுக்கு ஒன்றைப் பத்தாய்ப்பெருக்கிச் சொல்லிவிடுதல் கூடும். அல்லாமலும் ஆகாயத்தாக்குதல் நடக்கிறபொழுது நீங்கள் வீட்டிலில்லாமல் எங்கேயாவது வெளியே போயிருந்தால், அந்த வேளையிலே அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாயிருக்க வேண்டும். அதற்கு நீங்கள் நேரத்துடனேயே அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டியதெல்லாம் சொல்லிவிட வேண்டும். விமானப் படையெடுப்புக்குத் தப்பிக்கொள்ள வேண்டுமானால் ஒதுக்கிடத்திலேயே ஒதுங்கியிருங்கள். மனங்கலங்காமல் அமைதியாயிருங்கள். விமானப்படையெடுப்பைச் சமாளிக்கிறதற்கு இதுதான் சிறந்த ஆயுதம். நீங்கள் இப்படி நடந்துகொண்டால், உங்களுக்கும் அபாயம் வராது ; பகைவருடைய எண்ணமும் பலிக்காமற்போய்விடும்.

**பின்வருவனவற்றை ஞாபகத்தில் வைத்திருங்கள்—**

1. ஒதுக்கிடத்தில் ஒதுங்கி அங்கேயே தங்கியிருங்கள்.
2. வெளியிலகப்பட்டால், அங்கே குப்புறக்கிடவுங்கள் அல்லது ஒதுக்கிடத்துக்குத் தவழ்ந்து போங்கள்.
3. கண்ணாடிக்குக்கிட்ட ஒதுங்கவேண்டாம்.
4. பீதிகொள்ளாமல் அமைதியாயிருங்கள்.

## அத்தியாயம் 2.

# எச்சரிக்கை.

ஏ. ஆர். பி. சேவையின் நோக்கங்களுள் ஒன்று என்னவென்றால் விமானப் படையெடுப்பு நடக்கப்போகும் வேளையிலே அதையறிந்து உங்களுக்கு அதைப்பற்றி எச்சரிக்கை பண்ணுதலாம். இதற்காக ஜனங்கள் எப்பொழுதும் தகுந்த ஆயுதங்களுடன் மிக்க விழிப்புடனிருக்கின்றனர். முக்கியமான எச்சரிக்கைகள் இரண்டு. அவையாவன அபாய வருகையின் எச்சரிக்கையும், அபாயம் நீங்கிய எச்சரிக்கையுமாம்—

**அபாய வருகையின் எச்சரிக்கை :** விமானப் படையெடுப்பு நடக்கப்போகிறது என்பதையறிந்தவுடனே அதை ஜனங்களுக்கு எச்சரிக்கைபண்ணி அறிவித்தற்கு அடையாளமாக அதிகாரிகள் மின்சார ஊதுகுழல் மூலமாக இரண்டு நிமிஷத்துக்கு உயர்த்தியும் தாழ்த்தியும் ஊளையிடுவதுபோல ஒலிசெய்வார்கள். இதைத் தவிர அந்தவேளையிற் கடமை செய்கிற வார்டன்மாரும் பொலீஸ்மாரும் தங்களிடமுள்ள (விஸிலேயும்) ஊதுகுழல்களையும் நீண்ட நேரம் ஊதி அபாயத்தைத் தெரிவிப்பார்கள். இதுதான் அபாய வருகையின் எச்சரிக்கை.

**அபாயம் நீங்கிய எச்சரிக்கை :** அதே மின்சார ஊதுகுழல்கள் இரண்டு நிமிஷத்துக்கு உயர்த்தாமலும் தாழ்த்தாமலும் ஒரே தொடர்பாய் ஊதுவது "பகை விமானங்கள் போய்விட்டன" அல்லது "அபாயம் நீங்கிவிட்டது" என்பதற்கு அடையாளமாகும். இதைவிட அந்த வேளையிற் கடமைசெய்துகொண்டிருக்கிற பொலீஸ்மாரும் வார்டன்மாரும் தங்கள் (விசிலேயும்) ஊதுகுழல்களையும் ஐந்து நிமிஷத்துக்கொருதடவையாக இரண்டுமுறை நீண்ட நேரம் ஊதுவார்கள் வார்கள். இதுதான் அபாயம் நீங்கிய எச்சரிக்கை.

சத்துரு விமானம் கிட்டடியிலே எங்கேயாவது நடமாடுகின்றது என்று சந்தேகமுண்டானாலும், உடனே அவ்விமானத்தைக் கண்ணாலே கண்டாலும்சரி காணாவிட்டாலும்சரி, "அபாய ஒலி" சப்தமிடப்படும். எப்போதாயினும் "அபாய ஒலி" கேட்டால் விமானப் படையெடுப்பு நடைபெறப்போகிறதென்றே நீங்கள் கருதிக்கொள்ளவேண்டும். சில வேளையிலே நேசநாடுகளின் விமானங்களே திடீரென்று வருதலுங்கூடும். அவசரத்திலே அவைகளைப் பகைவிமானங்களென்று தப்பிதமாக எண்ணி "அபாய ஒலி" சப்தமிடுதல் கூடும். அப்பொழுதும் நீங்கள் உண்மையாகவே அபாயம் வருகிறதென எண்ணிக் கண்டிப்பாக எச்சரிக்கைக்கிணங்க நடந்துகொள்ள வேண்டும். இடையிடையே நடக்கிற அப்பியாச எச்சரிக்கைகளைப்பற்றி நேரத்துடன் உங்களுக்கு அறிவிக்கப்பட்டாலன்றி மற்றும்படிக்கு "அபாய ஒலி" சப்தமிடும்பொழுதெல்லாம் நீங்கள் கட்டாயம் எச்சரிக்கையின்படி நடந்து தேவையான பாதுகாப்பு முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். நீங்கள் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாவிட்டால் மோசத்துக்காளாக நேரிடும்.

எந்த விஷயத்திலும் ஏதாவது குறையிருப்பது சகசம். எச்சரிக்கை செய்வதற்கென்று ஏற்பட்ட திறமான ஒழுங்குகளிலும் சில வேளையிலே விமானப்படையெடுப்பு நடக்கப்போகிறதென்னும் அபாயத்தைத் தெரிவிக்க முடியாமற்போதலும் கூடும். விசேஷமாகக் கடற்கரையையடுத்திருக்கும் பிரதேசங்களில் இப்படி நடப்பதுண்டு. சில வேளை பகைவிமானங்கள் கரைக்கு அப்பாலே கடலிலே இரண்டு மைல் தூரத்திலிருந்தே

குண்டுவீச ஆரம்பித்துவிடும். சிலவேளை அவை அதிக உயரத்திற் பறந்து தாங்கள் இலக்குவைத்த பொருள்மீது திடீரென்று சறுக்கி விழுவதுபோலக் கீழேவரும். அவை அப்படி வரும்பொழுது அவைகளுடைய இரைச்சலை ஒலிக்கருவிகளாலே அறிந்து கொள்ள முடியாமற் போய்விடுகின்றது. எச்சரிக்கை செய்யாமலிருக்கும்பொழுது குண்டு வெடியோ விமான எதிர்ப்புப் பீரங்கிவெடியோ நீங்கள் கேட்டால், (அவை அப்பியாச வெடியென ஏதாவது முன்னரே அறிவிக்கப்படாத வரையிலே), உடனே " அபாய ஒலி " யைக் கேட்டபொழுது கைக்கொள்ளுகிற பாதுகாப்பு முறைகளை நீங்கள் கட்டாயம் கைக் கொள்ளவே வேண்டும். அந்த வெடிச் சப்தங்களையே அபாய ஒலியாகக்கொண்டு நடவுங்கள். அபாய ஒலியை அறிவிக்கிற ஊதுகுழல்களில்லாத இடங்களிலும், குண்டு வீச்சு ஆரம்பித்தவுடனே நீங்கள் கட்டாயம் ஒதுக்கிடங்களிலே ஒதுங்கிக்கொள்ளவேண்டும்.

சத்துரு விமானம் வருவதானால் இன்ன திசையிருலிந்துதான் வரும் என்று உங்கள் மனம்போன போக்கின்படி துணிபு கூறலாகாது. பகைவர் கூடியவரையிலே தங்களுக்கு எங்கள் பீரங்கிகளாலும் போர் விமானங்களாலும் எதிர்ப்பு உண்டாகாதபடி அவைகளை விலக்கியே நடக்கமுயல்வர். ஆகையினாலே அவர்கள் வேண்டுமென்றே சில திசைகளை விலக்கிக்கொள்வர். விசேஷமாக, கொழும்பு, திரிகோணமலை முதலிய கரையோரப் பட்டினங்களில் வசிப்பவர் பகைவிமானங்கள் கடலிலிருந்துதான் வருமென்றெண்ண வேண்டியதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, பகைவிமானங்கள் " இராணுவப் பொருட்களையே " தாக்கும் என்று எண்ணிக்கொண்டிருக்கவேண்டாம். முதலிலே பொது ஜனங்களுக்குப் பயமுண்டாக்க எண்ணி அவர்களையே அவ்விமானங்கள் தாக்குதல் கூடும்.

அபாய ஒலியையோ விமானத்தாக்குதலையோ கேட்டவுடனே கீழே சொல்லியிருக்கிற படி நீங்கள் நடந்துகொள்ளவேண்டும் :—

(1) நீங்கள் வீட்டிலிருந்தால், வீட்டிலுள்ளவர்கள் எல்லோரையும் பாதுகாப்புக் கூடத்திற்காவது அகழிக்கிடங்குக்காவது அனுப்பிவிடுங்கள். காஸ் (Gas) மின்சாரம் இவைகளின் முக்கிய இணைப்பைக் கழற்றி இவைகளின் ஓட்டத்தைத் தடைப்படுத்திவிடுங்கள். உண்மையாகக் குண்டு விழும்பொழுது கண்ணாடி களுக்கருகே செல்லுதல் ஆபத்தை விளைவிக்கும். ஆகையால் அவ்வா றில்லாத மற்றும் வேளையிலே ஜன்னல்களையும் கண்ணாடிக் கதவுகளையும் திறந்துவிடுங்கள். அதன்பின்பு பாதுகாப்புக் கூடத்திலாவது அகழிக்கிடங்கி லாவது நீங்கள் ஒதுங்கிக்கொள்ளுங்கள்.

(2) நீங்கள் கந்தோரிலாவது பிற வேலைத்தலங்களிலாவது வேலைசெய்துகொண்டால், உடனே உங்கள் எஜமானருக்குக் கீழ்ப்படிந்து அவர் சொல்லுகிறபடி நடவுங்கள். என்ன வந்தாலும் உங்கள் வீட்டிலுள்ளவர்களைக் காப்பாற்றுதற்கென்று புறப்பட்டு வெளியே ஓடவேண்டாம். அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய விதத்தை அவர்களுக்கு நேரத்துடன் செவ்வனே சொல்லிவைத்திருந்தால் அவர்கள் ஒதுக்கிடங்களுக்குச்சென்று தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளுவார்கள். தங்களுக்காக நீங்கள் தெருவீதிகளிலே ஆபத்துக்காளாய்த் திரியும்படி உங்களை விடுவது அவர்களுக்கு நீதியன்று. தெருவீதியெங்கும் மரணமே தாண்டவமாடும்.

(3) நீங்கள் தெருவீதிகளிலாவது திறந்த வெளிகளிலாவது நின்றால் உடனே எங்கேயாவது ஒதுக்கிடத்திற்கு ஓடிப்போய் ஒதுங்கிக்கொள்ளுங்கள். அதை விரைந்து செய்யமுடியாவிட்டால், றோட்டுக்குச் சமீபமல்லாத தூரத்திலே குப்புறக்கிடந்து கொள்ளுங்கள். ஒருவிதமான பாதுகாப்புமில்லாமலிருப்பதிலும்பார்க்க ஒரு சுவரோ, வாய்க்காலோ, கானோ, அகழியோ, திட்டியோ, திடலோ, ஏதாவதொன்று அகப்பட்டாலும் அதை ஒதுக்கிடமாகப் பயன்படுத்திக்கொள்ளுதல் நல்லது. அது பலமாயில்லையே, அப்படியில்லையே, இப்படியில்லையே என்று குறையொன்றும் பாராட்டக்கூடாது.

(4) நீங்கள் மோட்டோர்க் காரையோ லொறியையோ செலுத்திக்கொண்டிருந்தால் அதைத் தெருவுக்கு அப்பால் ஓட்டிக்கொண்டுபோய் ஓரத்திலே நிறுத்தி, அதன் வெளிச்சங்களை அணைத்துவிட்டு, எங்கேயாவது ஒதுங்கிக்கொள்ளுங்கள்.

(5) நீங்கள் மாட்டுவண்டியாவது மிருகத்தினலிழுக்கப்படும் வேறெவ்விதமான வண்டியாவது செலுத்திக்கொண்டிருந்தால், அவ்வண்டியை றோட்டுக்கு அப்பால் ஓட்டிக்கொண்டுபோய் ஓரத்திலே நிறுத்திவிட்டு, மிருகத்தை அவிழ்த்து ஒரு மரத்தோடாவது கம்பத்தோடாவது கட்டிவிடுங்கள். ஒன்றுமகப்படாவிட்டால் அதைப் பின்வண்டியிலாவது கட்டிவிடுங்கள். அப்படிச் செய்யவேண்டியது மிகவும் அவசியம். இல்லாவிட்டால் அந்த மிருகம் குண்டு வெடிக்குப்பயந்து வெருண்டு வண்டியையுமிழுத்துக்கொண்டு வீதிவழியே ஓடித்திரியுமானல், அதனலும் அநேகர் ஆபத்துக்காளாதல் கூடும்.

(6) நீங்கள் நாடகக்கொட்டகையிலாவது வேறு சபைகளிலாவது இருந்தால், இன்னவிதமாக நடவுங்களென்று கட்டளை பிறக்கும்வரைக்கும் அங்கேயே தங்கியிருங்கள். வெளியே போகும்படி உங்களைக் கேட்டுக்கொண்டால் அல்லோலகல்லோலப்படாமல் ஒழுங்காய் விரைவிலே வெளியேறுங்கள். கெடிக்கலக்கம் ஏற்பட்டால் வெளியே போகமுயன்று பெரும் ஆபத்துக்காளாக வேண்டியிருக்கும். மற்றவர்கள் பீதியடைந்தால் நீங்கள் வெளியே போகாமல் இருந்தவிடத்திலேயே இருங்கள்.

தெருவீதிகள் அத்தியாவசியகம் வழியிலே இடைஞ்சலொன்றுமில்லாமல் வெட்டவெளியாயிருக்கவேண்டும். இராணுவ அதிகாரிகளுக்கும் ஏ. ஆர். பி. அதிகாரிகளுக்கும் தெருவீதிகள் தேவையாயிருக்கும். அதுவுமல்லாமல், கும்பலாய்க் கூடியிருக்கிற இடங்களிலே இயந்திரத்துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறதற்குப் பகைவருடைய குண்டு வீச்சு விமானங்களுக்கு வாயுறிக்கொண்டிருக்கும். வண்டிகளையும் வாகனங்களையும் தெருவினின்றும் அப்புறப்படுத்திவிடுவது மிகவும் நன்று. வேண்டுமானல் அவைகளை எங்கேயாவது ஒழுங்கை முதலியவற்றிற் கொண்டுபோய் விடுவதும் நல்லது. பிரதானமான தெருக்களிலே வண்டிகளையாவது வாகனங்களையாவது நிற்பாட்டிவைக்கவேண்டாம்.

**ஒதுங்குதல்.**

பாதுகாப்புக்கூடமிருந்தால் அங்கே குப்புறக் கிடவுங்கள் அல்லது குந்தியிருங்கள். அங்கே வாசித்தல், எழுதுதல், தையல் தைத்தல், பின்னுதல், சிறு விளையாட்டுக்கள் விளையாடுதல் முதலியவற்றிலே பொழுதுபோக்கலாம். இவ்விதமாகப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தால் விமானப்படையெடுப்பைப்பற்றிய எண்ணமோ பயமோ இல்லாமல்

3—J. N. 4855 (3/42)

ஒழிந்துவிடும். ஆனால் குண்டு வெடிகள் மாத்திரம் படையெடுப்பை ஞாபகமூட்டக்கூடும். காதுகளுக்கு வஸ்லீன் தோய்த்த பஞ்சேனும் கம்பளித்துண்டேனும் திணித்து அடைந்து வைத்திருந்தால் குண்டு வெடியாலும் பீரங்கி வெடியாலும் நரம்புக்கு ஏற்படுகிற கோளாறுகள் குறைந்துவிடும். அல்லாமலும் வெளியே அகப்பட்டுக்கொண்டால், இதனாலே வெடியதிர்ச்சியின் தாக்கலுக்கும் தப்பிக்கொள்ளலாம்.

அகழிக்கிடங்கில் ஒதுங்கியிருக்கும் பொழுது அதனுடைய ஆழத்திற்குத் தகுந்தபடி நிற்கினும் நிற்கலாம் அல்லது குந்தியிருந்துகொள்ளலாம். வெளியான இடத்திலும், மேலே திறந்தபடி கிடக்கிற அகழிக்கிடங்கிலும் குப்புறக்கிடத்தலே உத்தமம். காதுகளைக் கையினாலே பொத்திக்கொண்டு வாயைத் திறந்தபடி வைத்துக்கொள்ளுங்கள். அப்படிச்செய்வதனாலே காதும் சுவாசப்பையும் வெடியதிர்ச்சியினாலே பாதிக்கப்படாம லிருக்கும். கடும் நிலத்திலும் பார்க்க மிருதுவான நிலத்திலே கிடத்தல் நல்லது. ஏனென்றால் அப்பொழுது அதைப்பினால் வரும் ஆபத்து மிகவும் குறைந்துவிடும்.

என்ன காரணத்தை முன்னிட்டும் இராத்தாக்குதலின் போது நீங்கள் வெளிச்சம் காட்டக்கூடாது. பாதுகாப்புக்கூடம், எள்ளளவாவது வெளியே தெரியாதபடி பூரணமாய் அடைத்திருந்தால் அங்கே வெளிச்சம் வைத்திருக்கலாம். அது அரைகுறையாய் அடைத்திருந்தால் அங்கே வெளிச்சம் இருக்கவேகூடாது. வெளிச்சம் தெரிந்த இடத்திலே பகைவர் வீசுவது வழக்கமாதலின் வெளிச்சம் வெளியே தெரியும்படி வைத்திருப்பவர் நாட்டுக்கு முதலாம் சத்துரு ஆவர்.

பின்வருவனவற்றை ஞாபகத்தில் வைத்திருங்கள்—

1. எச்சரிக்கை அபாயத்தைக் குறிப்பதாகும்.
2. தெருவில் நில்லாமல் அப்பாற் போய்விடுங்கள்.
3. ஒதுக்கிடத்திலே ஒதுங்கினால் அங்கேயே தங்கிநில்லுங்கள்.
4. வெளிச்சம் காட்டவேண்டாம்.

அத்தியாயம் 3.

## வீட்டில் ஒதுக்கிடம்.

விமானப்படையெடுப்பு நடைபெறுவதானுல் அது இன்ன நாளுக்கு இன்ன நேரத்தில் நடைபெறும் என்பதை எங்களால் முன்கூட்டியே சொல்ல முடியாது. நீங்கள் அவ்வேளையிலே எங்கேயிருக்கிறீர்களோ, அங்கேதான் நீங்கள் ஒதுங்கிக் கொள்ளவேண்டும். உங்கள் மனைவி மக்கள் தாங்களிருக்குமிடத்திலேதான் ஒதுங்கிக் கொள்ளவேண்டும். நீங்களாவது உங்கள் குடும்பத்தவருட் சிலராவது வீட்டிலேயே தங்கியிருத்தல் கூடும். ஆதலினுலே நீங்கள் உங்கள் வீட்டிலே நல்ல ஒதுக்கிடமொன்று கட்டாயம் அமைத்துக்கொள்ளல் வேண்டும். அதை இன்றைக்கே இப்பொழுதே அமைத்துக்கொள்ளுங்கள். அதை வீட்டினுள்ளே பாதுகாப்புக்கூடமாகக் கட்டிக்கொள்ளலாம் அல்லது வளவுக்குள்ளே அகழிக்கிடங்காக வெட்டிக்கொள்ளலாம். இந்த இரண்டனுள் ஒன்றைச் செய்வது உங்கள் வீட்டின் அமைப்பைப் பொறுத்திருக்கிறது. உங்கள் வீடு நல்ல பலமான கட்டிடமாயிருந்தால், அங்கே பாதுகாப்புக்கூடம் அமைத்துக் கொள்ளுங்கள். பலமில்லாத வீடாயிருந்தால், வளவுக்குள்ளே அகழிக்கிடங்குவெட்டி வைத்திருங்கள். எல்லாம் சராசரியாயிருந்தால், பாதுகாப்புக் கூடத்தையே கட்டிக் கொள்ளுங்கள். அகழிக்கிடங்கிலே கூடின பாதுகாப்பு இருந்தாலும் அநேகர் வெளியே ஒதுங்கியிருக்க விரும்பமாட்டார்கள். ஆனுல் வீட்டிலுள்ளவர்கள் யாராயிருந்தாலும்சரி பயந்து வெருண்டு வெளியே ஓடக்கூடாது. ஆனபடியால் பாதுகாப்புக் கூடத்தையே விரும்பி யமைத்துக்கொள்ளவேண்டியதாகும்.

**உங்கள் வார்டன்.**

இந்த விஷயத்திலும் இதுபோன்ற பிற விஷயங்களிலும் நீங்கள் உங்கள் வார்டனுேடு கலந்தாலோசித்துக்கொள்ள வேண்டும். (வார்டனைப்பற்றி 8 ம் அத்தியாயத்திற் காண்க). அவர் உங்களுக்கு—

(*a*) நீங்கள் உதவிபெறுகிறதற்குப் போகவேண்டிய வார்டனுடைய நிலையம் இன்ன இடத்திலிருக்கிறது என்றும்,

(*b*) உங்களுக்கு இலேசான காயம் ஏற்பட்டால், அல்லது உங்களுக்கு வேறுவிதமான உதவி தேவையாயிருந்தால் உங்களுக்குக் கிட்டடியிலே நீங்கள் செல்லவேண்டிய பிரதம சிகிச்சைத்தலம் (முதலுதவித்தலம்) இன்ன இடத்திலிருக்கிறது என்றும்,

(*c*) அம்பியூலன்ஸ் வண்டி, நெருப்பணைக்கும் படை முதலிய ஏ. ஆர். பி. சேவைகள் உங்களுக்குத் தேவையானுல் அவைகளை நீங்கள் உங்கள் உதவிக்கு இன்ன விதமாக அழைப்பித்துக்கொள்ளல் வேண்டும் என்றும்,

(*d*) உங்கள் வீட்டிலே இன்ன அறையைப் பாதுகாப்புக் கூடமாக்கலாம் என்றும்,

(*e*) அகழிக்கிடங்கு இன்னவிதமாக வெட்டவேண்டும் என்றும்,

சொல்லுவார்.

**பாதுகாப்புக்கூடம்.**

உங்களொவ்வொருவருடைய வீடும் வெவ்வேறு விதமாக அமைந்திருக்குமாதலினுலே உங்கள் பாதுகாப்புக்கூடம் இன்ன விதமாகத்தான் அமைக்கப்படவேண்டும் எனத் திட்டமாக எழுதுவது முடியாத காரியமாகும். ஆகையினுலே இவ்விஷயமாக உங்கள் வார்டனுடைய புத்திமதியைக் கேட்பதுதான் மிகவும் நல்லது. என்றுலும் கீழே தரப்பட்டிருக்கும் குறிப்புக்கள் உங்களுக்குப் பிரயோசனப்படுமென்பது திண்ணம்.

சிதறுதுண்டுகளினின்றும் உங்களைக் காப்பாற்றிக்கொள்ளுவது எளிதான விதியாகும். சிதறுதுண்டுகளினின்றும் உங்களைக் காப்பாற்றிக்கொண்டால், அதுவே நேரடியான மோதுதல் ஒன்றைத்தவிர வெடியதிர்ச்சி, இயந்திரத் துப்பாக்கிச் சன்னம், கிட்ட வெடித்துச் சிதறுகிற துண்டுகள், இடிந்துவிழுகிற கஞ்சல் முதலியவையெல்லாவற்றினின்றும் காப்பாற்றிக்கொள்ளுவதாகும். உங்கள் வீட்டைச் சுற்றி நாலுபுறமும் குண்டுகள் விழுந்து வெடித்துச் சிதறுமென்றும், அப்படிச் சிதறுகிற துண்டுகள் நேரே உங்கள் வீட்டிலேதான் மோதுமென்றும், சில துண்டுகள் நிலமட்டமாகவும், சில குழியிலிருந்து மேல் நோக்கியும், சில ஆகாயத்திலெழுந்து வில்லுமாதிரி வளைந்து பின்பு கீழ் நோக்கியும் விழுமென்றும் நீங்கள் எண்ணமிட்டுக்கொண்டிருந்தால், என்னென்ன விதமான அபாயம் உங்களுக்கு வாராதபடி நீங்கள் உங்களைக் காப்பாற்ற வேண்டுமென்பது உங்களுக்கு நன்முய்த் தெரியும். கீழவரும் புத்திமதிகள் உங்களுக்கு உதவியாயிருக்கும் :—

(i.) கீழ் வீட்டிலேயே ஒரு அறையைத் தெரிந்தெடுத்துக்கொள்ளுங்கள். மேல் வீடிருந்தாலும் கீழ் வீட்டிலேயே அறையைத் தெரிந்தெடுக்க வேண்டும். ஏனென்ருல்—

(*a*) மேல் வீடும் கூரையும் கீழ்வீட்டுக்கு அதிகமான பாதுகாப்பாயிருக்கும்.

(*b*) சிதறு துண்டுகள் திறந்த வாசல் ஜன்னல் முதலியவைகளுக்கு ஊடாகவும் மேலே மச்சுப்பலகைக்கூடாகவும் பறக்கும் ;

(*c*) அதைப்பினுலாவது வெடியதிர்ச்சியினுலாவது வெளிச்சுவர் விழுந்தால், கீழ் வீட்டிலே யிருத்தல் நல்லது ;

(*d*) மேல்வீட்டு நிலம் நொருங்கிய கூரைமுதலியவைகளைக் கீழ்வீட்டின் விழாதபடி தாங்கிக்கொள்ளும்.

(ii.) நாலுபுறமும் சுவர்களாலே பாதுகாக்கப்பட்டிருக்கிற அறையொன்றை முழுவதையேனும் அதில் ஓர் பாகத்தையேனும் தெரிந்தெடுத்துக்கொள்ளுங்கள். அது நல்ல பாதுகாப்பு உள்ளதுதானே என்பதை ஜன்னல் கதவு முதலியவைகளைத் திறந்து வளவுக்குள்ளே சிறிது தூரம் போய் ஒரு பெரிய கல்லைக் குப்பையிலே வீசிப்பார்த்தும் இன்னும் இவைபோன்ற பிற பரீக்ஷைகளைச் செய்துபார்த்தும் அறிந்துகொள்ளலாம். மரக்கதவு, மரமூடியுள்ள ஜன்னல், மரப்பலகைகளால் அடைக்கப்பட்ட ஜன்னல் ஆகிய இவையெல்லாம் திருப்தியான பாதுகாப்பல்ல. உங்கள் வீட்டிலே பலமான மூலையொன்றுமில்லாவிட்டால் ஒன்றைப் புதிதாக ஆக்கிக்கொள்ளுங்கள். அப்படிச்செய்வது கஷ்டமான காரியமன்று. ஜன்னலையோ கதவையோ மண்மூடைகளாலும் மண்வெட்டிகளாலும் அடைத்துப் பெலப்புத் தேடிக்கொள்ளலாம். அல்லது வெளியே ஜன்னல் கதவுமுதலியவைக்குச் சமீபமாகச் சிதறுதுண்டுகளைத் தடுக்கக்கூடிய சுவர் எழுப்பிக்கொள்ளலாம். அப்படிச் செய்வதனுலே காற்றும் வெளிச்சமும் வருவதுமல்லாமல் வெடியதிர்ச்சி சிதறு துண்டு முதலியவைகளால் வருகிற அபாயமும் தடைப்பட்டுவிடும்.

(iii.) சுவர் பலமாயிருக்கிறதோவென்று சோதித்துப் பாருங்கள். 13½ அங்குலத் தடிப்புள்ள நல்ல செங்கற் சுவர் திருப்தியான பாதுகாப்பளிக்கும். இங்கே நல்ல செங்கல் என்றது சீமந்துக்கலவையிற் செய்த கெட்டியான கல்லேயாகும். சாதாரணமான செங்கல்லினாற் கட்டிய சுவரானால் அது 18 அங்குலம் தடிப்புள்ளதாயிருக்கவேண்டும். 50 அடிக்கு அப்பால் விழுந்து வெடிக்கிற 500 றுத்தற்குண்டினின்றும் காப்பதற்குக் கீழே குறித்திருக்கும் தடிப்புள்ள சாதாரணமான சாமான்கள் போதும் :—

| பொருள். | தடிப்பு. |
|---|---|
| இலேசான உருக்குத் தகடு .. .. | 1½ அங்குலம் |
| சீமந்துக்கலவையிற் செய்த நல்ல திறமான செங்கல் .. .. | 13½ ,, |
| பெலப்பிக்காத கொங்கிறீற் .. .. | 15 ,, |
| சாதாரணமாகப் பெலப்பித்த கொங்கிறீற் .. | 12 ,, |
| விசேஷமாகப் பெலப்பித்த கொங்கிறீற் .. | 10 ,, |
| மணலால் அல்லது மண்ணால் சுவர்போல எழுப்பின தடை .. .. | 30 ,, |

இந்தப் பாதுகாப்புக்கூடம் சம்பந்தமாக இன்னொரு காரியம் நீங்கள் அறிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், நீங்கள் தெரிந்தெடுத்துக்கொண்ட அறையிலே இரண்டு அல்லது மூன்று பக்கங்களிலே இரட்டைச் சுவர்வைத்துக் கொள்ளலாம் என்பதேயாம். அப்படிச் செய்துகொண்டால் அந்தப்பக்கங் களிலே தடிப்பு அதிகமாயிருத்தலினாலே பாதுகாப்பும் அதிகமாயிருக்கும். பெரும்பாலும் வளவுப்பக்கமாயிருக்கிற சுவரின் பெலப்பைப் பற்றித்தான் சந்தேகமும் கவலையும் உங்களுக்கு உண்டாகிவிடும். ஆனபடியால் அந்தப் பக்கத்தை நன்றாய்ப் பெலப்படுத்தவேண்டும். மணல் மூடைகளை அல்லது மணற்பெட்டிகளை அடுக்கிச் சுவர்போல எழுப்பிக்கொள்ளலாம். செங்கல்லி னாலேயே இன்னுமொரு படை எழுப்பிக்கொண்டால் அதிலும் பார்க்க விசேஷமாயிருக்கும். அந்தச் சுவருக்கு ஜன்னலோ வாசலோ இருந்தால் வெளியே அதிலிருந்து இரண்டு அடி தூரத்திலே சிதறுதுண்டைத் தடுக்கிற சுவரொன்றைக் கட்டிக்கொள்ளுதல் நன்று. ஆனால் நியாயமான கிட்டடி யிலே உயரமான எல்லைச் சுவர் அல்லது வேறு வீடு இருந்தால் அந்த எல்லைச் சுவரும் வீடும் போதிய பாதுகாப்பளிக்கும். அதாவது அயல்வீடு உங்கள் வீட்டுக்கும் உங்கள் வீடு அயல்வீட்டுக்கும் ஒன்றுக்கொன்று நல்ல பாதுகாப்பாயிருக்கும்.

(iv.) ஜன்னல்களைப்பற்றியும் கண்ணாடிக் கதவுகளைப்பற்றியும் விசேஷ கவனம் செலுத் தல் வேண்டும். சிதறிப்பறக்கிற துண்டுகளுள்ளே கண்ணாடித் துண்டு மிகவும் பொல்லாதது. கூடியவரையிலே கண்ணாடிக்கதவுள்ள அறையைத் தெரிந்தெடுக்கவேண்டாம். ஏனென்றால் சில வேளையிலே கதவைச்சாத்த வேண்டியிருக்கும். இயலுமானால் ஜன்னல்களை ஒருபோதும் சாத்தவேண்டாம். அவைகளைச் சாத்தவேண்டியிருந்தால், அவைகளிலுள்ள கண்ணாடியை அகற்றி அதற்குப்பதிலாக மரப்பலகையாவது தடித்த கடதாசிமட்டையாவது அடித்துவிடுங்கள். ஆனால் அவை வெடியதிர்ச்சியையாவது சிதறுதுண்டுகளை யாவது தடுக்கமாட்டா. படங்கள், முகம்பார்க்கிற கண்ணாடிகள், போத்தல்கள்

அலுமாரிக்கண்ணுடிகள் எல்லாவற்றையும் அந்த அறையினின்றும் அகற்றி விடுங்கள். காரணம் என்னவென்ருல், வெடியதிர்ச்சி தாக்கும்பொழுது காற்று மிகவும் சடுதியிலே உறிஞ்சப்பட்டுவிடுகிறது. கண்ணுடியின் ஒரு புறத்திலே சாதாரண அமுக்கமும் மறுபுறத்திலே காற்றின் உறிஞ்சுதலும் உண்டாஞல் அந்தக் கண்ணுடி வெடித்து வெளியே சிதறும். முகம்பார்க்கிற கண்ணுடி களிலும் அவைகளுக்கும் அவைகளுடைய சட்டத்துக்குமிடையேயுள்ள மெல்லிய இடைவெளியிலே காற்று உண்டு. ஆனபடியினுலேதான் அவைகளும் வெடித் துச் சிதருதபடி முன்னெச்சரிக்கையாக அவைகளை அகற்றிவிடவேண்டும்.

(v.) நீங்கள் தெரிந்தெடுத்துக்கொண்ட அறை வீட்டிலுள்ளவர்களெல்லோரும் நெருக்கமில்லாமல் ஒதுங்கியிருக்கத்தக்கதாகப் பெரிதாயிருத்தல் வேண்டும். இட்டடியிலே சுகாதார வசதிகளுமிருந்தால் மிகவும் நல்லது. குளிக்கிற அறை, (கக்கூஸ்) மலகூடம் முதலியவைகளிலுள்ள கண்ணுடிகளையும் ஜன்னல்களை யும் பாதுகாத்துக்கொள்ளல் வேண்டும்.


(vi.) நெருப்புப் பற்றியெரியக்கூடிய சாமான்களை அறையினின்றும் அகற்றிவிடுங்கள். பாதுகாப்புக்கூடத்திலே பின்வரும் சாமான்களைச் சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள்:—

- குடிக்கிறதற்குத் தேவையான தண்ணீர்.
- (பிஸ்கோத்து இனிப்பு முதலிய) தின்பண்டங்கள்.
- கோப்பை, வட்டில், கிண்ணம், முதலியன.
- முதலுதவி செய்தற்கான கருவிகள்.
- தண்ணீர் நிரப்பிய வாளிகள், மணல், நெருப்பணைத்தற்குத் தேவை யான பிற ஆயுதங்கள்.
- பிக்கான், தோண்டி, மண்வெட்டி, அலவாங்கு.
- மெழுகுதிரி, நெருப்புப்பெட்டியும் விளக்கும் அல்லது மின்சாரச் சூள் (டோச் Torch).
- பேசின் (Basin), தண்ணீர் ஜக் (Jug), ஸோப் (சவர்க்காரம்), துவாய், வாளி, முதலியன.
- பாய் அல்லது மெத்தை முதலிய படுக்கை.
- பத்திரிகைகள், கடுதாசிக்கூட்டம், குழந்தைகள் விளையாடும் பொம்மை கள், கிராமபோன் முதலியன.
- கடைசியாக, அந்த அறையினுள்ளே ஒதுங்கிக்கொள்ள வேண்டிய வர்களுடைய பெயரடங்கிய " டாப்பு " (நாமாவளி).


**சிதறுகிற கண்ணுடித் துண்டுகளினின்றும் பாதுகாத்தல்.**

உங்கள் பாதுகாப்புக் கூடத்திலே என்னத்திற்காகக் கண்ணுடிகள் சிதருவண்ணம் அவைகளை அவசியம் தடுத்தல் வேண்டும் என்பதை இதற்கு முந்தியே எடுத்துக் காட்டியிருக்கிறேம். கண்ணுடியை முற்ருய் அகற்றிவிடுதலே மிகவும் சிறந்த உபாயம். வீட்டிலே மற்றப் பாகங்களிலுமுள்ள கண்ணுடிகளும் சிதருதபடி காப்பாற்றிக்கொள்ள வேண்டும். சிலவேளையிலே கண்ணுடித்துண்டுகள் வெளியே பறக்கும்; சிலவேளையிலே உள்ளே பறக்கும். ஆனபடியால் நீங்கள் வளவுக்குள்ளே அகழிக்கிடங்கில் ஒதுங்கி யிருந்தால் அங்கே கண்ணுடித்துண்டுகள் பறந்து விழாதபடி உங்களைப் பாதுகாத்துக்

படம் 1.—வளவுக்குள் வெட்டின அகழிக்கிடங்கு.



## அகழியின் குறுக்குப் பார்வை.




படம் 2 A கடினமான நிலத்தில்

படம் 2 B மணற் பூமியில் (—ம் உதா மிருதுவான நிலத்தில்)

கொள்ளவேண்டும். திறந்திருக்கிற கண்ணாடிக் கதவுகளாலும் ஜன்னல்களாலும் விசேஷ ஆபத்து ஏற்படமாட்டாது. அவை வெடித்துத் தங்கள் சட்டங்களிலிருந்து விழக்கூடுமேயன்றிச் சிதறிப்பறக்கமாட்டா. சாத்தியிருக்கிற கண்ணாடிக்கதவுகளுக்கும் ஜன்னல்களுக்கும்தான் பாதுகாப்பு வேண்டும்.

கண்ணாடியைக் காப்பாற்றுதற்கு ஒரு உபாயத்தையாவது முற்றாய்த் திறமான தென்று சொல்லமுடியாது. என்றாலும் உள்ளதுக்குள்ளே விசேஷமானது கண்ணாடியை முற்றாகவும் அதன் சட்டங்களை அரைக்கரைவாசியாகவும் பலமான சீலைத் துணியாலே பசைகொண்டு ஒட்டி மூடிவிடுதலேயாம். டிறில், கலிக்கோ, கேஸ்மென்ற் துணி, சாக்குத்துணி முதலியவைகளே இதற்கு மிகவும் வாய்ப்பானவை. முதலிலே ஈரப்பசையைக் கண்ணாடி முழுவதிலும் நன்றாய்த் தடவி அதன்பின்பு சீலைத்துணியை மடிப்பும் நீக்கலுமில்லாதபடி அழுத்தமாய் ஒட்டவேண்டும். (நீக்கலிருந்தால் அங்கே காற்றிருக்கும். ஆபத்து வேளையிலே அந்தக் காற்று வெடியதிர்ச்சியின அழுக்கத்தி னுள்ள வித்தியாசத்தினுலே கண்ணாடியை வெடிக்கப்பண்ணிவிடும்). சீலைத்துண்டு களையோ கடதாசித்துண்டுகளையோ கோடு கோடாக ஒட்டிக்கொள்ளுவதிலே எள்ளளவும் பிரயோசனமில்லை.

ஒடுங்கிய அகழிக்கிடங்காவது திறந்தபடி கிடக்கும் சாதாரண அகழிக் கிடங்காவது செவ்வையாக வெட்டி வைத்துக்கொண்டால் அது சிதறுதுண்டுகள் வெடியதிர்ச்சி என்பவற்றினின்றும் காப்பாற்றிக்கொள்ள நல்ல ஒதுக்கிடமாகும்.

மிகவும் சுலபமாய் வெட்டிக்கொள்ளக்கூடியதும் மேலே மூடாமல் வெளியாய் விடப்பட்டதுமாகிய ஒடுங்கிய அகழிக்கிடங்கு ஒன்றை முதலாம் படத்திற் காணலாம். ஒரு பறவை பறக்கும்பொழுது அகழிக்கிடங்கு அதன் கண்ணுக்கு என்னமாதிரித் தோற்றுமோ அந்தத் தோற்றத்தையே படம் காட்டுகின்றது. தடித்த கோடுகள் சரியான அகழியின் உருவத்தைக் காட்டுகின்றன. அதன் தோற்றம் W என்னும் இங்கிலீஷ் எழுத்தைப்போலிருக்கிறது. பின் வரும் விஷயங்களை நன்றாய்க் கவனித்துக் கொள்ளுங்கள் :—

(i.) அகழியின் அகலம் $2\frac{1}{2}$ அடி.

(ii.) W என்னும் உருவத்திலே ஒன்றையொன்று அடுத்திருக்கின்ற புஜங்களால் உண்டாகிற கோணம் $80^\circ$க்கும் $100^\circ$க்கும் இடையிலிருக்கும். அதை 90 டிகிரியாக வைத்துக்கொள்ளுவது மிகவும் சுலபம்.

(iii.) புஜங்கள் ஒவ்வொன்றினுடைய நீளமும் 5 அடிக்குக் குறையாமலும் 25 அடிக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

படத்திலுள்ள மெல்லிய கோடுகள் அகழிக்குச் செல்லும் வழியைக் காட்டுகின்றன. உள்ளேபோகிறதற்கு மூன்று வழிகளுண்டு. அவை வாயிலாகவே வெளியேயும் புறப்படலாம். வழிகளுக்குப் படிகளில்லை. அவை ஒரே நீண்ட சரிவாயிருக்கின்றன. அவை ஆறடிக்கு ஓரடியிலும் பார்க்க இன்னும் சரிவாயிருப்பது மிகவும் நன்று. படிகளிலும் பார்க்கச் சரிவு விசேஷமானது. இரவிலும் மழைபெய்த வேளையிலும் அதுவே விசேஷமானது. அன்றியும் படிகள் மண்ணில் வெட்டப்பட்டிருப்பதனுலே ஆளினுடைய பாரம் தாங்கமுடியாமல் இடிந்து விழுந்துவிடுதல் கூடும். ஆனல் சரிவாக வெட்டுவதற்கு இடம்போதாதென்றால், படிகளையே அமைத்துக்கொள்ள வேண்டும்.

மழை பெய்திருந்தால் அகழியிலே வெள்ளம் தங்கிநிற்காதபடி அந்த அகழியின் புறத்தொங்கல் இரண்டிடத்திலும் ஆழமான குழிகள் வெட்டிவிடல் வேண்டும். அகழியின் வெள்ளம் அக்குழிகளில் விழுந்திருக்கும். அப்பொழுது அவ்வெள்ளத்தைச் சுலபமாக வெளியே இறைத்துவிடலாம்.

ஒவ்வொரு அகழியிலும் இரண்டொரு மலகூடமும் இருத்தல் வேண்டும்.

நிலத்திலே அகழிக்கிடங்கு தோண்டவேண்டிய விதம் இது என்பதையும் அக்கிடங்கு எவ்வளவு ஆழமாயிருத்தல் வேண்டும் என்பதையும் படம் 2A காட்டுகின்றது. மேலுக்கு உண்டாகும் மண் திடலினது நீளம், அகலம், பருமன், தோற்றம் முதலியவைகளையும் அந்தப் படத்திற் காணலாம். அகழியின் ஆழம் 4½ அடிக்குமேலே செல்லக்கூடாது. மண் திடலின் உயரம் 1½ அடியிருந்தாற்போதும். திடலின் மேற்பரப்பினது அகலம் குறைந்த பட்சம் 2½ அடியாயிருத்தல் வேண்டும். திடலானது அகழியின் வாயிலிருந்து ½ அடிக்கு அப்புறம் தள்ளியிருத்தல் வேண்டும்.

2A படத்தை 2B படத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது மணற்பூமியில் அல்லது மிருதுவான நிலத்திலே வெட்டுகிற அகழிக்கிடங்கின் பக்கங்கள் சரிவாயிருத்தல் வேண்டும் என்பதைக் காண்பீர்கள். அப்படியான அகழிக்கிடங்கை வெட்டும்பொழுது அதனுடைய வாய் 2½ அடிக்கு மேற்படக்கூடாது. ஆகையினால் அதனுடைய அடிப்பாகத்தின் அகலத்தை 2 அடியாக்கிக்கொள்ளல் வேண்டும்.

இந்த அகழிக்கிடங்கை மிகவும் சுலபமாகச் சுருங்கிய செலவிலே அமைத்துக்கொள்ளலாம். 500 ருத்தல் நிறையுள்ள குண்டுகள் விழுந்தாலும் இந்த அகழி நல்ல பாதுகாப்புள்ள ஒதுக்கிடமாகும்.

அகழியினுள்ளே நீங்கள் ஒதுங்கியிருக்கிற நிலையைப்பற்றியும் கவனமாயிருத்தல் வேண்டும். கூடியவரையிலே தலையை அகழிக்குமேலே தெரியவிடாமல் உள்ளே பணிய வைத்துக்கொள்ள வேண்டும். கையை நீட்டி முழங்கையின் மேலே தலையைச்சாய்த்து வைத்துக்கொண்டு நெஞ்சை நிலத்திற்படவிடாமல் இரண்டொரு அங்குலம் உயர்த்திக் கொள்ளலாம். ஆழம் குறைந்த அகழியானால் அங்கே தவழ்ந்த நிலையிலிருப்பது நல்லது.

இந்த விதமான அகழிக்கிடங்கு சுலபமானதுபோலவும் கரடுமுரடானதுபோலவும் தோன்றினாலும் எவ்வளவோ பாதுகாப்பளிக்கின்றது. இது பிறவிடங்களிலே ஆயிரக் கணக்கான ஆட்களைக் காப்பாற்றியிருக்கிறது. இதிலுள்ள பெரிய விசேஷம் என்னவென்றால் இந்தக் கிடங்கின்மீது இலகுவிலே இலக்குப்பார்க்கமுடியாது. அதுவுமல்லாமல் வெடியதிர்ச்சிக்கும் சிதறுதுண்டுகளுக்கும் அகப்படாமல் தப்பிப்பிழைப்பதற்கு இது மிகவும் வாய்ப்பான ஒதுக்கிடம். இங்கே மழைபெய்தால் நிலம் விரைவிலே காய்ந்துவிடும் ; வெய்யில் விழுகிறபடியால் விஷக்கிருமிகளில்லாமற் போய்விடும் ; காற்றும் தாராளமாய் வீசிக்கொள்ளும். ஆனால் இடிந்துவிழுகிற கஞ்சல் முதலிய வற்றையும், இலக்குப் பொருளை அடைவதற்கிடையிலே அதற்குச் சமீபமாக வெடித்துச் சிதறுகிற சன்னங்களையும், காற்று வெய்யில் மழை பனி முதலியவைகளையும் தடைப்படுத்த முடியாமலிருப்பது மாத்திரம் இந்தவிதமான கிடங்கிலுள்ள ஒரு பெருங்குறையாகும். ஆனால் இவ்வளவு சிறிய இடத்திலே குண்டு, கஞ்சல், மற்றும் சிதறு

சன்னங்கள் முதலியவை வந்துவிழுவது வெகு அபூர்வமாகவேயிருக்கும். என்றாலும், இடிந்துவிழக்கூடிய கஞ்சல் முதலியவற்றினின்றும் தப்பிக்கொள்வதற்கு இந்த அகழிக்கிடங்கை ஆகக் கிட்டவுள்ள சுவர் அல்லது கட்டிடத்திலிருந்து அந்தச் சுவரின் அல்லது கட்டிடத்தின் உயரத்தில் அரைப்பங்கினும் அதிகமான தூரத்திலே அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

(1) நீங்கள் பாதுகாப்புக்கூடம் அல்லது அகழிக்கிடங்கு கட்டாயம் அமைத்துவைத்துக் கொள்ளல்வேண்டும்.

(2) கண்ணாடிகளை அகற்றிவிடுங்கள் அல்லது அவை சிதறாதபடி பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

இவை இரண்டும் ஞாபகமிருக்கட்டும்.

## அத்தியாயம் 4.

# எரிகுண்டு.

எரிகுண்டு என்பது பொருட்கள்மீது நெருப்புப்பிடித்து எரியப்பண்ணுவதற்காக உண்டாக்கிய ஒருவகைச் சிறிய குண்டாகும். சத்துரு இவ்விதமான குண்டை உபயோகிப்பது முன்பு லண்டனில் நடந்ததுபோல ஒரு நகரத்தின் பாகம் முழுவதையுமோ அல்லது குறித்த சில கட்டிடம் முதலிய சொத்துக்களையோ நாசமாக்குவதற்காகவுமிருக்கலாம் ; அல்லது இரவிலே படையெடுப்பதற்கு வசதியாக வெளிச்சம் உண்டாக்கிக்கொள்ள எண்ணி, அதற்கேற்றபடி சில கட்டிடங்களை நெருப்புப்பிடித்து எரியும்படி செய்வதற்காகவுமிருக்கலாம். சில வேளைகளிலே எரிகுண்டுகள் மாத்திரமே உபயோகிக்கப்படும். ஆனால், பெரும்பாலும் மூச்சுள்ள வெடிகுண்டுகளுடனேயே இவைகள் உபயோகிக்கப்பட்டுவருகின்றன.

இவை சிறிய குண்டுகளாயிருத்தலினாலே, அற்ப நேரம் நடக்கிற படையெடுப்பிலும் இவைகளை ஏராளமாக வீசிக்கொள்ள முடியும். இவையொவ்வொன்றும் அங்கங்கே நெருப்பை உண்டாக்கிவிட்டால், அத்தனையிடங்களிலும் பற்றின நெருப்பை அணைப்பது நெருப்பணைப்புப் படைகளுக்கு அசாத்தியமாகிவிடும். அதோடு பலமான காற்று வீசுகிற வேளையானால், சிறு நெருப்பே எங்கும் பரந்து நகரம் முழுவதிலுமோ கிராமம் முழுவதிலுமோ பற்றிவிடுதல் கூடும். அப்படிப் பற்றிக்கொண்டால் ஜனங்கள் வீட்டைவிட்டு வெளியே தெருவுக்கு ஓடுவார்கள். ஓடவே அங்கே அவர்கள் பகைவருடைய மூச்சுள்ள வெடிகுண்டுகளுக்கும் இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகத்துக்கும் இலகுவான இலக்காகிவிடுவார்கள். ஆகையினாலே உங்கள் சொத்துக்களையேயன்றி உங்களையும் உங்கள் குடும்பத்தையும் காப்பாற்றிக்கொள்ளுவதற்காக இந்த எரிகுண்டுகளைச் சமாளிக்கும் வழிவகைகளை நீங்கள் அவசியம் அறிந்திருத்தல் வேண்டும். அதுமட்டோ, நீங்கள் உங்கள் அயலவர்களுக்கு உதவிசெய்யவும் சித்தமுடையராயிருத்தல் வேண்டும். அயலுக்குள்ளே மூச்சுள்ள வெடிகுண்டேனும் எரிகுண்டேனும் விழுந்தால், அதனால் அந்த அயலவர்களுக்கேயன்றி உங்களுக்கும் உங்கள் வீட்டுக்கும் சேமோசமும் பெரு நட்டமும் ஏற்படுமல்லவா ?

எரிகுண்டுகள் பல வகைப்படும். ஒவ்வொன்றையும் ஒவ்வொருவிதமாகச் சமாளிக்க வேண்டியிருக்கும். ஆனால் எந்த விதமான எரிகுண்டைச் சமாளிப்பதற்கும் ஸ்டிரப் பம்ப் (Stirrup Pump) என்னும் ஜல சூத்திரம் மிகவும் சிறந்த கருவியாகும். இந்தக் கருவி ஒரு சிறிய தோட்டத்துப் பம்பைப்போலவோ அல்லது மோட்டார்க் காரிலுள்ள டையருக்கு (Tyre) உபயோகிக்கிற பம்பைப்போலவோ இருக்கும். இதுவும் காலினாலுழக்கி யமத்திக்கொண்டு கைப்பிடியினால் இழுத்து அடிக்கப்படுவதாகும். இதற்கு 30 அடி நீளமுள்ள தண்ணீர்க்குழாய் உண்டு. குளாய் நுனியிலே 12 அடி முதல் 15 அடிவரைக்கும் தண்ணீரை எற்றி வீசத்தகுந்த (Nozzle)நொஸில் எனப்படும் துவாரக் கருவியொன்று பொருத்தப்பட்டிருக்கும். எரிகிற குண்டின் மீது இந்த ஸ்டிரப் பம்பினாலே தண்ணீர்த் துளியை எற்றி வீசிக்கொண்டிருந்தால், அந்தக் குண்டினருகிலே கிடக்கிற எரியக்கூடிய சாமான்களிலே பிடிப்பதற்கு அந்தக் குண்டின்

நெருப்பானது பரவாமலிருக்கும்; அதுவுமல்லாமல் சிலவேளையிலே அந்தக் குண்டே விரைவில் எரிந்து அணைந்துவிடும். அதை அணைத்துவிட்டால், பின்பு அங்கே வேறு நெருப்பு ஏதாவது எரிய ஆரம்பித்தால் இந்தக் குழாயிலுள்ள தெறியொன்றை அமுக்குவதனால் அக்குழாயிலிருந்து பீறிட்டுப்பாய்கிற தண்ணீரினலே அந்த நெருப்பை அணைத்துவிடலாம். இப்போதைக்குப் போதிய அளவு ஸ்டிரப் பம்புகள் கைவசமில்லை. ஆகையினலே வேறு உபாயங்களைத்தான் கைக்கொள்ள வேண்டும். அவ்வுபாயங்கள் பகைவர் உபயோகிக்கிற குண்டைப் பொறுத்திருக்கின்றன.

ஜப்பானியர் பிரதானமாக 40 றுத்தல் நிறையுள்ள எரிகுண்டுகளை உபயோகித்து வருகிறார்கள் போலத்தோன்றுகிறது. அந்தக் குண்டுகள் கூரையைத் துளைத்துக் கொண்டு உள்ளே போனவுடனே வெடித்து நாலுபுறமும் ஏராளமான றப்பர்த் துண்டுகளைச் சிதறுகின்றன. அந்தத் துண்டுகளுட் சில பந்தைப்போல உருண்டையாயும், சில பெனசிலைப்போல் நீட்டாயும், சில "டப்பி" யைப்போல வட்டமாயும் இருக்கும் அவை யெல்லாவற்றிலும் "எரியம்" (Phosphorus) என்னும் பதார்த்தம் சேர்ந்திருக்கிறது. "எரியம்" காற்றுடன் சம்பந்தப்பட்டவுடனே நெருப்புப் பிடிக்கும் தன்மையுள்ளது. ஆகையினலே "எரியம்" சேர்ந்த அந்த றப்பர்த்துண்டுகளும் குண்டிலிருந்து வெளியே சிதறிக் காற்றுடன் சம்பந்தப்பட்டவுடனே எரிய ஆரம்பித்து விடுகின்றன. அவை எரிந்துகொண்டே எங்கும் உருண்டு போகிறபொழுது வழியிலே எதிர்ப்படுகிற எரியக்கூடிய பொருள் எல்லாவற்றிலும் நெருப்புப்பற்றும்படி செய்து விடுகின்றன. ஆகையினலே "எரியம்" குண்டு உங்கள் வீட்டிலே விழுந்தால், ஒரே நேரத்தில் அங்குமிங்குமாக எத்தனையோ இடங்களிலே நெருப்பு உண்டாகிவிடும். அதிலும் பலகையடித்த நிலமானல் அது மிகவும் மோசமாயிருக்கும். நீங்கள் அத்தனை நெருப்பையும் சமாளிக்க வேண்டியிருக்கும். "எரியம்" என்னும் பதார்த்தத்தை அவ்விடத்திற் சிதறின றப்பர்த்துண்டுகளாலன்றி அந்நேரம் அதிலிருந்து கிளம்புகிற நாற்றத்தினலும் வெள்ளைப் புகையினலும் நன்குயறிந்துகொள்ளலாம். இது சம்பந்தமாக நீங்கள் கண்டிப்பாய்க் கவனித்துக்கொள்ளவேண்டியது ஒன்றுண்டு. அது என்னவென்றால், "எரியம்" என்னும் அந்தப் பதார்த்தத்தை என்ன காரணத்தை முன்னிட்டும் நீங்கள் தொடவேகூடாது. அது ஈரமாயிருக்கிறபொழுதென்றலும் அதைத் தொடலாகாது. ஏனென்றால் அது காய்ந்தவுடனே எரிய ஆரம்பித்துவிடும். தோலிலே பட்டால் அது தோலை யெரித்துவிடும். எரியத்தினல் வந்த புண் இலகுவில் மாறுவதில்லை. உடுப்பிலே பட்டால் உடுப்பு நெருப்புப்பிடித்து விடும்.

நல்ல வேளையாக "எரியம்" எரிகிறபொழுது அதற்கு உஷ்ணம் அதிகமில்லை. ஆனபடியால் அந்த எரிகிற றப்பர்த்துண்டுகளை அணைக்கும்பொருட்டு அவைகளுக்குக் கிட்டப் போய்க்கொள்ளலாம். ஆனல் அவைகளில் மிதிக்காவண்ணம் கவனமாயிருத்தல் வேண்டும். விசேஷமாக வெறுங்காலோடு நடமாடுகிறவர்கள் மிகவும் கவனமாயிருத்தல் வேண்டும். பெரும்பாலான எரிகுண்டுகளுக்கு (ஸ்டிரப் பம்பினலே துளியாய்த் தெளிப்பதைவிட) தண்ணீரை நீங்கள் உபயோகித்தல் கூடாது. ஆனல் "எரியம்" சேர்ந்த குண்டுகளைத் தண்ணீர்கொண்டு அணைப்பதுதான் மிகவும் சுலபமான உபாயமாகும். ஆதலினலே நீங்கள் அவைகள்மீது தண்ணீரையூற்றி அவைகளை ஏதாவதொரு உலோகத்தினற் செய்த ஆயுதத்தினலே எடுத்துத் தண்ணீருள்ள வாளியிலே போட்டுவிடுங்கள். இப்படியே எல்லா றப்பர்த்துண்டுகளையும் பொறுக்கித் தண்ணீருள்ள வாளிகளிலே போட்டுக்கொண்டால், நீங்கள் வீட்டிலே மற்றவிடங்களிலே

பற்றிக்கொண்ட நெருப்பைத் தண்ணீரேனும் மணலேனும்கொண்டு அணைக்கலாம். பின்பு " எரியம் " துண்டுகளை வாளியோடு கொண்டுபோய் வளவுக்குள்ளே எங்கேயாவது அபாயம் உண்டாகமாட்டாத இடத்திலே கொட்டிவிட்டால் அவை அங்கே கிடந்து எரிந்து தாமாகவே அணைந்துபோம். என்ன காரணத்தை முன்னிட்டும் அவைகளைத் தீண்டவே கூடாது என்பது ஞாபகத்திலிருக்கட்டும். தண்ணீர் அகப்படாவிட்டால் அதற்குப் பதிலாக மணலை உபயோகித்துக்கொள்ளலாம். அதுவும் நெருப்பையணைக்கும். அதாவது வேறுவிதமான எரி குண்டுகளை அணைப்பதற்கென்று வைத்திருக்கிற மணலை " எரியம் " சேர்ந்த சன்னங்களை யணைப்பதற்கும் நீங்கள் உபயோகித்துக்கொள்ளலாம்.

மிகவும் சாதாரணமாய் உபயோகிக்கப்பட்டுவருகிற எரிகுண்டு " கிலோ-மின்சார அணுக்குண்டு " (Kilo-electron Bomb) என்பதாகும். இதை ஜொமனியர் அதிகம் புழங்கிவருகிறார்கள். இதை ஜப்பானியரும் உபயோகித்தல்கூடும். இதற்கு வாலைத்தவிர எஞ்சியபாகம் முழுவதும் எரிபதார்த்தமே சேர்ந்திருக்கிறது. 5 அங்குல நீளமுள்ள வாலுட்பட இதன் முழு நீளம் 14 அங்குலமாகும்; குறுக்களவு 2 அங்குலம்; நிறை 2¼ ருத்தல். இதிலே மின்சார அணுச்சேர்ந்த உலோகத்தினற் செய்த குழாய் ஒன்றுண்டு. அதிலே அலூமினியமும் எரியக்கூடிய வேறு மருந்துச் சாமான்களும் திணிக்கப்பட்டிருக்கும். அந்த மருந்துக்கலவை ஒரு நிமிஷத்திற் குள்ளே எரிந்து கூட்டிலே நெருப்பும் பற்றும்படி செய்துவிடும். அது எரிகிறபொழுது அதன் பிரகாசத்தைப் பார்கக மிகவும் பயமாயிருக்கும். அந்தவேளையிலே தக்க பாதுகாப்பில்லாமல் அதையணுகமுடியாது. (அதற்குத் தகுந்த பாதுகாப்பைத் தேடிக் கொள்ள உங்களால் முடியாதென்றே தோன்றுகிறது.) பின்பு மின்சார அணுவிலுள்ள மக்னீஷியம் சிறிது குறைவான சூட்டிலே எரிந்துகொண்டிருக்கும். அப்பொழுது குண்டுக்குச் சமீபமாகப் போகிற் போகலாம். எப்படியென்றாலும் உடனே போவது புத்தியல்ல. இரண்டு நிமிஷமாவது பொறுத்திருக்கவேண்டும். ஏனென்றால், சில மின்சார அணுக்குண்டுகளினுள்ளே மூசசுள்ள வெடியும் திணிக்கப்பட்டிருப்பதுண்டு. அது வெடித்தால் அதிலிருந்து எல்லாத் திசையிலும் எரிகிற மக்னீஷியம் சிதறிப் பறக்கும். இரண்டு நிமிஷத்தின்பின்பு அது வெடிக்காவிட்டால், அது வெடிக்கக்கூடிய குண்டல்லவென்று நிச்சயித்துக்கொண்டு அதனருகே பயமில்லாமற்சென்று அதை யணைக்க முயலலாம்.

சாதாரணமாக மின்சார அணுக்குண்டு கூரையைத் துளைத்துப்போடும். ஆனால், சலாகைகளிலோ சட்டங்களிலோ அல்லது மேல்வீட்டுத் தரையிலோ தங்கிவிடும். ஆன படியால் மேல் வீடுள்ளவர்கள் தங்கள் மேல்வீட்டிலே என்ன நடக்கிறதென்பதையும் கவனித்துக்கொள்ளவேண்டும். கற்பூமியிலே விழுந்த மின்சார அணுக்குண்டைத் தானகவே எரிந்தணைந்துபோகும்படி விட்டுக்கொள்ளலாம். ஆனல் அதிலே வெடி மருந்து இருந்தால் நீங்கள் மிகவும் கவனமாய்த்தானிருக்க வேண்டும். ஏனென்றால் அந்த வெடியிலிருந்து சிதறியெரிகிற மக்னீஷியம் முதலியவற்றினலே அவ்விடத்திலுள்ள துண்டு துணிகளிலும் மரச்சாமான்களிலும் நெருப்புப் பற்றிவிடும். மரப் பலகையடித்த தரையிலோ அல்லது மற்றைய சாமான்களிலோ அந்தக் குண்டு விழுந்தால் அதை உடனே சமாளிக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் வீடு முழுவதும் நெருப்புப் பற்றிவிடும். என்ன வந்தாலும் இந்தக் குண்டுக்கு (ஸ்டிரப் பம்பிலிருந்து துளியாய்த் தெளிக்கிற தண்ணீரைத் தவிர வேறு) தண்ணீர் ஒருபோதும் உபயோகிக்கவே வேண்டாம். ஏனென்றால், தண்ணீரிலுள்ள பிராணவாயுவானது குண்டை மும்முரமாக எரிந்து வெடிக்கப்பண்ணிவிடும். ஆனபடியால் மணலை உபயோகியுங்கள்.

அரைகுறையாக நிரப்பின மணற்சாக்கை அந்தக் குண்டின்மீது ஒரு "மணற்போர்வை" யாகப் போடுங்கள். குண்டின் மீது அதைத் தொம்மென்று வீசப்படாது; மெதுவாக வைக்கவேண்டும். அப்படி வைக்கும் வரைக்கும் அதை உங்கள் கண்களுக்கு முன் பாகப் பிடித்துக்கொள்ளுங்கள். அந்த மணற்சாக்கு அந்தக் குண்டிலிருக்கும் நெருப்பைப் பிறவிடங்களுக்குப் பாவாதபடி தடுக்குமேயல்லாமல் அந்தக் குண்டை யணைத்துவிடமாட்டாது. மணற் போர்வை இல்லாவிட்டால், ஒரு வாளியிலிருந்தோ பெட்டியிலிருந்தோ வெறும் மணலையாவது குண்டின்மீது மெதுவாய்க் கொட்டுங்கள். இப்படியேதாவது செய்தபின்பு ஏதாவது உலோகத்தினுற்செய்த கருவியினுலே அந்தக் குண்டை அகற்றிவிடுங்கள். இதற்கு மிகவும் வாய்ப்பான ஆயுதம் நீண்ட கைப்பிடியுள்ள தோண்டியும் (குப்பைவாரிபோன்ற) வாரியுமாகும். தோண்டியிலே குண்டை வாரியினுல் இழுத்துப் போட்டுக்கொள்ளலாம். உதவிக்கு இன்னெருவரிருந்தால் மிகவும் நன்று. வீட்டிலுள்ள பெண்களாவது வளர்ந்த பிள்ளைகளாவது உதவி செய்தல் கூடும். எப்படியோ கவனமாகக் குண்டை வெளியே அபாயமில்லாதவிடத்திற் சேர்த்துவிட்டு, விரைவிலே திரும்பிவந்து வீட்டில் எங்காயினும் பற்றியிருக்கிற நெருப்பை அணைக்க முயலுங்கள். இப்பொழுது குண்டை வெளியே யகற்றிவிட்டபடியால் வீட்டிலே இனியணைக்கும் நெருப்புக்குத் தண்ணீரும் மணலும் தாராளமாய் உபயோகிக்கலாம்.

ஜெர்மனியர் ஜப்பானியர் இருவரும் "எண்ணெய்க் குண்டு" களும் உபயோகித்துவருகின்றனர். ஜப்பானியருடைய எண்ணெய்க் குண்டு "எரியம்" குண்டினும்பார்க்கக் கனமுள்ளது. அது மோதுப்பட்டவுடனே வெடித்து 20 யார் தூரத்திற்கு எரிகிற எண்ணெய்யைச் சிதறுகின்றது. உண்மையிலே அந்த எண்ணெய் ஒருவகை மெழுகாகும் (Paraffin Wax). அதைத் தண்ணீர்கொண்டு அணைக்கமுடியாது. தண்ணீர் அந்த நெருப்பை எங்கும் பரவச்செய்யும். திரைச்சீலை முதலியவற்றிலே நெருப்புப் பிடித்தால் அவைகளைப் பிடுங்கி அப்பாலெறிந்துவிடவேண்டும். மரப்பலகைத் தரையிலும் மரச்சாமான்களினும் நெருப்புப் பரவாமலிருப்பதற்கு மணலைக் கொட்டுங்கள். போதிய மணலிருந்தால் அதைக்கொண்டு எரிகிற மெழுகையும் அணைத்துவிடலாம்.

இதற்கதிகமாக வேறென்றும் சொல்லமுடியாது. ஒரு குண்டைச் சமாளிக்கிறவிதம் அந்தக் குண்டின் தன்மையையும், அது விழுகிற இடத்தையும் பொறுத்திருக்கிறது. உங்கள் வீட்டிலே எரிகுண்டு விழுந்தால் இந்த அத்தியாயத்திற் கூறிய விதிகளைப் பகுத்தறிவின்படி கைக்கொள்ளவேண்டும். உங்கள் வீட்டிலே வசதியான இடங்களிலே மணலும் தண்ணீரும் வைத்திருத்தல் வேண்டும். பகைவர் மூச்சுள்ள வெடிகுண்டுகளை வீசித் தாக்கும்போது சில வேளைகளிலே பிரதானமான தண்ணீர்க் குழாய்கள் வெடித்துப் பழுதுபட்டுவிடுதல் கூடும். அல்லது நெருப்பணைப்புப் படைகள் அவைகளிலிருந்து ஏராளமான தண்ணீரைத் தங்கள் சேவைக்கு உபயோகித்துக்கொண்டிருத்தல் கூடும். ஆகையினுலே உங்கள் வளவுக்குள்ளே ஒரு கிணறு இருப்பது நன்று. இல்லாவிட்டால் மழைநீரைச் சேர்த்து வைத்திருப்பதற்கு ஒரு பெரிய தொட்டியாவது கட்டிவைத்திருங்கள். (அப்படிச் செய்வதானுல் அதிலே நுளம்பு விருத்தியாகாதபடி தடைமுறைகளைக் கையாளல் வேண்டும்.) ஸ்டிரப் பம்பு (Stirrup Pump) இல்லாதவிடத்தில், மணலே மிகவும் பிரயோசனமானது. இருந்தாலும், தண்ணீரும் வைத்திருங்கள். ஏனென்றுல் அது சிறு நெருப்புக்களை அணைப்பதற்கு உதவும். அதுவுமல்லாமல் ஒருவேளை உங்கள் வார்டனிடம் ஸ்டிரப் பம்பு இருக்கு

மானால் அவர் அதை உங்கள் வீட்டு நெருப்பை அணைப்பதற்குக் கொண்டுவருவார். அப்பொழுது தண்ணீர் தேவையாயிருக்கும். கீழே தரப்பட்டிருக்கும் மேலதிகமான குறிப்புக்களையும் நன்றாய்க் கவனித்துக்கொள்ளுங்கள் :—

1. என்னபாடுபட்டும் நீங்களாகவே நெருப்பை அணைத்துவிட முயலவேண்டும். எடுத்தவுடனே நெருப்பணைப்புப் படையை அழைப்பிக்க வேண்டாம். ஏனென்றால் அது வெறேங்கேயாவது மிகவும் மோசமான பெரு நெருப்பை அணைத்துகொண்டிருத்தல் கூடும்.

2. உங்களால் நெருப்பை அணைக்கமுடியாவிட்டால் உடனே உங்கள் வார்டனுடைய நிலையத்துக்குச் செய்தியறிவித்து உதவி வரவழைப்பித்துக்கொள்ளுங்கள். உதவியாளர் வந்தவுடனே அவர்களுக்கு அபாயமுண்டான இடங்களை அப்படி அப்படியே காலதாமதமின்றிக் காட்டுவதற்காக அவ்விடங்களை அவதானித்துக்கொள்ளும்படி யாருடனாவது ஒழுங்குபண்ணிக்கொள்ளல் வேண்டும்.

3. வீட்டிலுள்ளவர்கள் எல்லோருடைய பாதுகாப்பையும் நீங்கள் கவனித்துக்கொள்ளல் வேண்டும். வீட்டுக்கு அபாயம் நேர்ந்தால் அவர்களை வெளியே அழைப்பித்து விடுங்கள்.

4. காஸ் குழாய்கள் சேதப்பட்டால் முக்கிய இணைப்பை (முந்தியே நிற்பாட்டாவிட்டால்) உடனே நிற்பாட்டிப்போட வேண்டும்.

5. புகையையும் சூட்டையும் தவிர்ப்பதற்கு நீங்கள் குப்புறக்கிடத்தல் வேண்டும். அல்லது தலையைப் பதிவாகத் தொங்கவிட்டுக்கொண்டு தவழ்தல் வேண்டும். ஜீவனைக் காப்பாற்றும்பொழுதும் நெருப்பணைக்கும்பொழுதும் இப்படித்தான் செய்தல்வேண்டும்.

6. படையெடுப்பின் பின்பு காற்றுவீசி நெருப்பை வளர்க்காமலிருக்கும் பொருட்டு ஜன்னல்களையும் கதவுகளையும் மூடிவைத்திருத்தல் வேண்டும்.

7. மேல்வீட்டுப் படிகளையாவது வழிகளையாவது உபயோகிக்கும்போதும், ஒரு அறையிலிருந்து இன்னொரு அறைக்குப் போகும்போதும் கூடியவரையிலே சுவரோடு செல்லுங்கள். ஏனென்றால் அந்த இடத்திலே நிலத்திற்கு அதிகம் பெலப்பு உண்டு.

8. கதவுக்கு ஒரு புறத்திலே நெருப்பெரிந்துகொண்டிருக்கும்போது அதன் மறு புறத்திலிருந்து அதைத் திறக்க வேண்டியிருந்தால், அது வெளியே திறக்கும் கதவானால், அதைத் திறப்பதற்குமுன் உங்கள் காலை அந்தக் கதவிலிருந்து சில அங்குலம் அப்பால் வைத்துக்கொள்ளுங்கள். திடீரென்று கதவு திறபட அதை உங்கள் கால் தடுத்துக்கொள்ளும். அல்லாமலும் அந்தக்கதவு உங்கள்மீது புகை, நெருப்பு, உஷ்ணமுள்ள வாயுக்கள் முதலியவைகள் படாதபடி உங்களுக்குப் பாதுகாப்பளிக்கும். வேண்டுமானால் நீங்கள் பின்பு அதைச் சாத்திக்கொள்ளலாம்.

9. உங்கள் உடுப்பிலே நெருப்புப் பிடித்துக்கொண்டால் கையினாலே வாயைப் பொத்திக்கொண்டு நிலத்திலே விழுந்து உருளல் வேண்டும். பிறருக்குச் சீலையில் நெருப்புப் பிடித்துவிட்டால் அவரை நிலத்திலே விழுத்தி, எரிகிற பாகம் மேலேவருமாறு கிடத்தி, ஒரு சாக்கு அல்லது பாய் அல்லது கம்பளி ஏதாவது அகப்பட்டதைக்கொண்டு அதனாலே அவரைச் சுற்றி நிலத்திலே உருட்டவேண்டும்.

**பின்வரும் விஷயங்கள் ஞாபகத்திலிருக்கட்டும்—**

1. வாளிகளிலோ வேறு பாத்திரங்களிலோ ஏராளமான மணலும் தண்ணீரும் வீட்டில் வைத்திருங்கள்.

2. எந்த எரிகுண்டையும் எந்த நெருப்பையும் அணைப்பதற்கு ஸ்டிரப் பம்ப் உபயோகித்துக்கொள்ளலாம். ஆனால் மின்சார அணுக்குண்டுக்கு மாத்திரம் அது எரிந்து முடியும் வரைக்கும் தண்ணீர்த் துளியையே தெளிக்கலாம்.

3. எந்த எரிகுண்டையும் எந்த நெருப்பையும் அணைப்பதற்கு மணலை உபயோகித்துக் கொள்ளலாம். (அரைகுறையாய் நிரப்பிய மணற் சாக்காகிய) மணற் போர்வையே மிகவும் விரைவில் நெருப்பணைக்க உபயோகமாகும்.

4. "எரியம்" குண்டுகளையணைக்கத் தண்ணீர் உபயோகியுங்கள். மின்சார அணுக் குண்டுகளுக்கும் எண்ணெய்க் குண்டுகளுக்கும் தண்ணீர் உபயோகிக்க வேண்டாம். எந்தக் குண்டையும் வெளியே அகற்றிவிட்டால் அல்லது அது தானாக எரிந்து அணைந்து விட்டால் அதன்பின்பு அணைக்கிற நெருப்புக்குத் தண்ணீர் உபயோகிக்கலாம்.

5. "எரியம்" சன்னங்களைக் கைகால்களினாலே தீண்ட வேண்டாம். அவைகளை உங்கள் உடையிலே படவும் விடவேண்டாம்.

6. மின்சார அணுக்குண்டுக்குக்கிட்ட (அது விழுந்த) இரண்டு நிமிஷத்திற்குள்ளாகப் போகவேண்டாம். அதை உங்கள் ஒதுக்கிடத்திலிருந்தே கவனித்துக்கொள்ளுங்கள்.

4— -J. N. 4355 (3/42)

அத்தியாயம் 5.

# படையெடுப்பின் பின்பு செய்யவேண்டியன.

“பகைவர் கழிந்தனர்” என்பதைக் குறிக்கிற ஒலி சப்தமிட்டபின்பு, காஸ், கட்டிடம் இடிந்து விழுவதனால் வரும் தூகள் கஞ்சல் முதலியவற்றினாலே இனி அபாயமில்லை என்பதை நீங்கள் நிச்சயித்தவுடன், ஒதுக்கிடத்திலிருந்த உங்கள் குடும்பத்தினரை அவ்விடத்தைவிட்டு வெளியேற நீங்கள் உத்தரவுகொடுக்கலாம். வீடு முழுவதையும் நீங்கள் நன்றாய்ச் சோதித்துப்பார்க்க வேண்டும். கீழே குறிக்கப்பட்டிருக்கிற விதிகளைக் கவனித்துக்கொள்ளுங்கள் :—

(1) காஸ் குழாய்களும் மின்சாரக் கம்பிகளும் சேதப்படவில்லையென்பதை நன்றாய் ஆராய்ந்தறிந்து நிச்சயித்தபின்பே காஸையும் மின்சாரத்தையும் முக்கிய இணைப்புகளினின்றும் குழாய்களுக்கும் கம்பிகளுக்கும் பாயவிடலாம். உங்கள் வீட்டிலோ வளவிலோ குண்டு விழாவிட்டால், மேற்படி குழாய்களும் கம்பிகளும் பாதிக்கப்படவில்லைத்தானே என்று எண்ணிக்கொள்ளவேண்டாம். எங்கேயாவது அயலிலே குண்டு விழுந்தாலும், அதனாலே காஸ் குழாய் வெடித்திருத்தல் கூடும். அக்குண்டின் வெடியதிர்ச்சியினாலே கம்பிகளிலே மின்சாரமும் ஏறியிருத்தல் கூடும்.

(2) வீடு சேதப்பட்டால், அதனாலே சுவர், ஓடு, கட்டிடம் முதலியன விழுமா விழாதா அதனால் அபாயம் உண்டா என்பதை ஆராய்ந்தறிந்துகொள்ளுங்கள்.

(3) வீட்டில் ஒரு பொருளிலும் நெருப்பு இல்லைத்தானோ என்பதையும் பார்த்தறிந்துகொள்ள வேண்டும்.

(4) வீட்டடியிலே ஏதாவது துவாரம் உண்டாகியிருந்தால் அதைப்பற்றி மிகவும் சாவதானமாயிருத்தல் வேண்டும். அந்தத் துவாரம் எலிகளின் வளையாயிருக்கலாம்; அல்லது அது வெடிக்காத குண்டினாலோ, விமான எதிர்ப்புப் பீரங்கியின் குண்டினாலோ, தாமதித்து வெடிக்கிற குண்டினாலோ ஏற்பட்டதாயிருக்கலாம். வெடிக்கமாட்டாத குண்டினுடைய சப்தம் ஒருவிதமான “அனுங்கல்” மாதிரியிருக்கும். வெடிகுண்டினுடைய இரைச்சல் “கீச்சல்” மாதிரியிருக்கும். உங்களுக்குக் கொஞ்சம் அனுபவம் உண்டானபின்பு இவைகள் இலகுவிலே தெரிந்துவிடும். இப்போதைக்கு எல்லாவற்றையும் வெடிகுண்டென்று எண்ணிக்கொள்ளுவதுதான் புத்திசாலித்தனம். தாமத வெடிகுண்டு சில நிமிஷத்திற்குள் வெடிக்கினும் வெடிக்கும். அல்லது சிலநாட் சென்ற பின்னரும் வெடிக்கும். ஆனபடியால் நீங்கள் கண்ட துவாரத்திலே வெடிகுண்டு உண்டு என்ற சமுசயம் உங்களுக்கு ஏற்பட்டுவிட்டால் நீங்கள் உங்கள் குடும்பத்தினரை உங்கள் வீட்டினின்றும் **உடனே** வெளியேற்றிவிட வேண்டும். கூடிய சீக்கிரத்திலே இவ்விஷயத்தை உங்கள் வார்டனுக்கும் அறிவித்துவிடுங்கள்.

(5) சிறிது நேரம் தெருவுக்குப் போகாமலிருங்கள். படையெடுப்பு நடந்திருந்தால், விபத்துக்கள் நடந்தவிடங்களிலே ஆட்களேயும் சொத்துக்களையும் காப்பாற்றுகிற தற்காக ஓடிப்போகிற அம்பியூலன்ஸ் வண்டிகள், நெருப்பணைக்கிற இயந்திரங் கள், முதலுதவிக் கோஷ்டிகள், இரட்சக வேலைசெய்யும் கோஷ்டிகள், பொது ஜன பாதுகாப்புப் படைகள் ஆகிய இவைகளுடைய நடமாட்டத்திற்குத் தெரு விலே இடைஞ்சலொன்றும் இருத்தலாகாது. இவைகளுக்குத் தெருவழியில் ஒரு தடையுமில்லாதபடி வெளியாயிருக்கவேண்டும். அதுவுமல்லாமல் இது ஜனங்கள் தெருவிலே கூடி விடுப்புப் பார்க்கக்கூடிய நேரமுமன்று.

(6) பொலீஸ் அதிகாரிகளுக்கோ பொதுஜன பாதுகாப்புச் சேவைகளுக்கோ அத்தியா வசியகம் அறிவிக்க வேண்டிய செய்திகளிருந்தாலன்றி மற்றும்படிக்கு நீங்கள் டெலிபோனை உபயோகிக்காதிருங்கள். இராணுவ அதிகாரிகளும், பொலீஸ் அதிகாரிகளும், பொதுஜன பாதுகாப்புச் சேவையாளரும் மிகவும் அவசியமான செய்திகளின்பொருட்டு டெலிபோனை உபயோகிக்க வேண்டியிருக் கும். எத்தனையோ ஆட்களையும் எவ்வளவோ சொத்துக்களையும் அவர்கள் காப்பாற்றவேண்டிக் கருமம் பார்க்கிற அந்த அவசர வேளையிலே, நீங்கள் உங்கள் அண்ணன் தம்பி மாமன் மாமி சினேகிதர் முதலியவர்களுடைய சுகம் விசாரிக்கிறதற்காக டெலிபோனை உபயோகித்து ஜீவமரண சம்பந்தமான அவசர காரியங்களுக்கு வினைக்கேடு செய்யவேண்டாம்.

(7) நீங்கள் வதந்திகளைக் கேட்கவும் வேண்டாம். கேட்டவைகளைப் பரப்பவும் வேண்டாம். ஆபத்துக்காலத்திற் பரம்புவன பெரும்பாலும் பொய். ஜனங் கள் தங்களுடைய அனுபவங்களையே கற்பனைபண்ணிக் சோடித்துப் பரப்புவார் கள். அவை பரவிப்பரவிச் செல்ல அவைக்கு உருவமும் பெருத்துவிடும். துரும்பாய்ப் புறப்பட்டது அதேயிடத்துக்குத் தூணாய்த் திரும்பிவரும். சொல் லுவார் சொன்னாலும் கேட்பார்க்கு மதியில்லையா? வதந்திகளை நம்ப வேண்டாம்.

(8) உங்கள் அயலோருக்கு உங்களாலான உதவியெல்லாம் செய்யுங்கள். அவர்க ளோடு சேர்ந்து நெருப்பணையுங்கள். அவர்களுக்குச் சாப்பாடும் ஒதுக்கிடமும் தேவையானால் அவைகளை அவர்களுக்குக் கொடுத்துதவுங்கள். அவர்க ளுக்காக வார்டனிடம் போய்ச் செய்தியறிவியுங்கள். இப்படியே தேவையான தெல்லாம் செய்யுங்கள். நாளைக்கு உங்களுக்கே அவர்களுடைய உதவி தேவையாயிருக்குமல்லவா?

(9) உங்கள் வீட்டுக்குச் சமீபமாகக் குண்டுவிழுந்தமையினாலே உங்கள் வீட்டிலுள் ளோர் யாருக்காவது நரம்புப் பெலவீனம் ஏற்பட்டால், அவர்கள் தங்கள் அனுபவங்களைப்பற்றிப் பிறருக்குச் சொல்லிச் சொல்லி எந்நேரமும் மிகவும் தாராளமாய்ப் பேசிக்கொண்டே யிருக்கட்டும். அப்படிச் செய்தால் இரண் டொரு கிழமையினுள்ளே அவர்களுக்குக் குணம் உண்டாகிவிடும். இது இங்கிலாந்திலே கண்ட அனுபவமாகும்.

(10) அடுத்த படையெடுப்பைச் சமாளிக்க ஆயத்தமாயிருங்கள்.

(11) உங்கள் வேலையைக் கைவிடாமற் செய்துகொண்டிருங்கள்.

அத்தியாயம் 6.

# இலகுவான முதலுதவிச் சிகிச்சை.

இந்த நாட்டின் பொதுஜன பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்ட ஸ்தாபனத்திலே "காயமடைந்தோர்க்குச் செய்யும் சேவை" எனவும் ஒரு உறுப்பு உண்டு. முதலுதவிச் சிகிச்சைத் தலம், முதலுதவிச் சிகிச்சைக் கோஷ்டி, முதலுதவிக் சிகிச்சைத் தலத்திற்குச் சிறு காயக்காரரைக் கொண்டுபோக மோட்டோர் வண்டிகள், கடுங் காயக்காரரை அவர்களுக்கென ஏற்படுத்தின ஸ்தானங்களுக்கும் ஆஸ்பத்திரி களுக்கும் ஏற்றிக்கொண்டுபோதற்கு அம்பியூலன்ஸ் வண்டிகள் ஆகிய இத்தனையும் அந்தச் சேவையில் அடங்கியிருக்கின்றன. சத்துரு விமானங்கள் மேலும் மேலும் தொடர்ந்து கடுமையாகத் தாக்கிக்கொண்டிருந்தால், காயமடைந்தோர் தொகை மிகவும் அதிகரித்துவிடும். அதற்குள்ளே முதலுதவிச் சிகிச்சைக் கோஷ்டி களுக்கோ சமக்க முடியாதபடி வேலையதிகமாகிவிடும். ஏராளமான காயக்காரரிடம் உடனுக்குடனே விரைந்து போவது அவைகளுக்கு மிகவும் கஷ்டமாகிவிடும். அப்படி யான வேளையிலே காயக்காரருக்கு அயலிலுள்ளவர்கள் தங்களாலான உதவிகளையோ சிகிச்சைகளையோ செய்வார்களேயானால் அதனால் எத்தனை பேருக்கு எவ்வளவு ஆறுதலாயிருக்கும். ஆனபடியால் டாக்குத்தர்மாருடைய திறமையான சிகிச்சை இட்டு வதற்கிடையிலே மற்றவர்களுடைய இலகுவான சிகிச்சையாவது கிடைப்பது நல்ல தல்லவா ? இந்த நன்மையை நீங்களேன் செய்யக்கூடாது ? இவைகளைச் செய்ய நீங்கள் அறிந்திருந்தால் உங்களுக்கும் நன்மைதானே. ஆனபடியால் இந்நாட்டிலுள்ளோர் ஒவ்வொருவரும் கீழே சொல்லப்பட்டிருக்கும் இலகுவான சிகிச்சைகளைக் கற்று அவைக ளைச் செவ்வனே செய்யவும் பழகிக்கொள்ளுவாராக.

அதிர்ச்சி

விமானப் படையெடுப்பின்போது ஏராளமான ஆட்கள் திகைத்துப்போகிறார்கள். இந்த ஏக்கத்தையே அதிர்ச்சி என்றும் சொல்லுகிறோம். எந்தக் காயம் ஏற்படும் பொழுதும் சொற்பமாகவோ முழுதாகவோ இந்த நிலைமை ஏற்பட்டுவிடுகிறது.

**அடையாளம் :** அறிவு மயங்கும். தேகம் வெளிறும். தோல் பிசுபிசுக்கும். நாடித்துடிப்பு விரைவாகித் தளர்ந்துவிடும். தேகச்சூடு திடீரென்று குறைந்து விடும். உடம்பு குளிர்ந்துவிடும். காயம் உண்டானபோதே இந்த அடை யாளங்களும் தோன்றினால், இந்த நிலைமை ஆரம்ப அதிர்ச்சி அல்லது கடுமையில்லாத அதிர்ச்சி எனப்படும். இதைப் பின்னே கீழே சொல்லி யிருக்கிறபடி கவனிக்கவேண்டும். இல்லாவிட்டால் இது உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய கடினமான அதிர்ச்சியாகிவிடும்.

**சிகிச்சை :** முதலிலே இதன் காரணத்தைக் கண்டுபிடியுங்கள். இது உண்டானது இரத்தம் பெருகினபடியினாலா, ஏதாவது எலும்பு முறிந்தபடியினாலா, உள்ளுக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறபடியினாலா அல்லது பயத்தினாலா என் பதைக் கண்டுபிடிக்க வேண்டும். ஏதாவதொரு உறுப்பிலிருந்து இரத்தம் பெருகிக்கொண்டிருந்தால் அதற்கு இரத்த நிறுத்து முடிச்சு (ரூணிக்கே) போட்டு இரத்தம் ஓடுவதை நிறுத்துங்கள். எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தால், நோவைத் தணிக்கிறதற்கு மட்டைவைத்துக் துணிபோட்டுக் கட்டுங்கள்.

எந்தக் காயக்காரருக்கும் சூடு குறையாமலிருப்பதற்கு அவர்களைக் கம்பளியினுலே னும் போர்வையினுலேனும் போர்த்துவிடுங்கள். இயலுமானுல், சுடுதண்ணீர்ப் போத்தலினுலே சூடு காட்டுங்கள். சுடுதண்ணீர்ப் போத்தலை ஒரு கம்பளியினுலாவது சீலைத்துண்டினுலாவது சுற்றிக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அது நோயாளியினுடைய தோலைப் பொசுக்கிவிடும். அவருக்கு இனிப்பான தேத்தண்ணீர் போன்ற பானம் கொடுப்பது நல்லது. பிறண்டி அகப்பட்டால் இரண்டு தேக்கரண்டி பிறண்டியை இரண்டு மடங்கு தண்ணீரிற் கலந்து கொடுக்கலாம். அதற்குமேலே அதிகமாகக் கொடுக்கவேண்டாம். ஒரு அவுன்ஸ் தண்ணீரிலே ஒரு தேக்கரண்டி ஸல்வோலற்றைல் (Salvolatile நவச்சியக்கரிகை) என்னும் மருந்தைக் கலந்து கொடுப்பதும் மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கும்.

(1) அறிவு மயங்கிக்கிடப்பவருக்குப் பானவகை யொன்றும் வலோற்காரமாகப் பருக்க வேண்டாம்.

(2) விபத்துக்குள்ளானவரைக் குலுக்காமல் மிகவும் மெதுவாகக் கையாளவேண்டும்.

**இரத்தம் பெருகுதல்.**

கடுமையில்லாத அதிர்ச்சியானுலும்சரி கடுமையான அதிர்ச்சியானுலும்சரி எதற்கும் பிரதானமான காரணங்களுள் ஒன்று இரத்தம் இழத்தலாகும். பெரிய சுத்த இரத்த நாடியிலிருந்து அதிக இரத்தம் வெளியே பாய்ந்துகொண்டிருந்தால் அதனுலே உயிருக்கு உடனே ஆபத்து நேரிடக்கூடும். சரீரத்தின் பலபாகங்களிலுமிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தாலும் அதற்கு உடனே சிகிச்சை செய்துகொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அறிவு மயங்கி இறுதியிலே மரணமும் ஏற்படக்கூடும்.

**இரத்தப் பெருக்கின் வகைகள்** : இரத்தப்பெருக்கானது வெளி இரத்தப்பெருக்கு உள் இரத்தப்பெருக்கு என இருவகைப்படும். வெளியே இரத்தம் பெருகும்பொழுது அதை எங்கள் கண்ணுற் காணமுடியும்; எங்கிருந்து இரத்தம் பாய்கிறதென்பதை அறிந்துகொள்ள முடியும். உள் இரத்தப் பெருக்கின்பொழுது உடம்பினுள்ளே உள்ள இரத்தக் குழாய்களால் இரத்தம் ஓடும்; ஓடுகிற இரத்தம் உடம்பினுள்ளேயுள்ள உறுப்புகளுக்குள் அல்லது மார்பு வயிறு முதலியவற்றின் அறை அல்லது குழிகளுக்குட் செல்லும். இருமுகிறபொழுது அல்லது வாந்திக்கிறபொழுது மாத்திரம் அந்த இரத்தம் வெளியே வரும். மற்றும்படிக்கு அந்த உள்ளிரத்தப்பெருக்கை எங்கள் கண்ணுற் காண முடியாது.

**இரத்தப்பெருக்கின் அடையாளம்** : வெளிப்பெருக்கானுலும் உட்பெருக்கானுலும் அடங்காமற் கடுமையாய்ப் பெருகுகிற இரத்தப்பெருக்கைப் பின்வரும் அடையாளங்களாற் கண்டுகொள்ளலாம் :—

(i.) பெலம் விரைவாகக் குறையும். தலைக்கிறுதியும் மயக்கமும் உண்டாகும். விபத்துக்குள்ளானவரை இருத்தினுல் அல்லது எழுப்பி நிற்பாட்டினுல் அப்பொழுது அவரிடத்தில் இந்தக் குறிகள் விசேஷமாய்க் காணப்படும்.

(ii.) முகமும் உதடுகளும் வெளிறிவிடும்; தோல் குளிர்ந்து பிசுபிசுப்பாயிருக்கும்.

(iii.) சுவாசிப்பது கஷ்டமாயிருக்கும். மூச்சு விரைவாயிருக்கும். மூச்சுவிடும்பொழுது கொட்டாவியும் பெருமூச்சும் வரும்.

(iv.) நாடித்துடிப்பு விரைவிலே பெலவீனப்படுவதாலும் கெதியாய் அடிப்பதாலும் அதை மணிக்கட்டிலே பிடித்துப்பார்த்து அளவிடமுடியாமற் போய்விடும்.

(v.) விபத்துக்குள்ளானவருக்குத் தாகமெடுக்கும்.

(vi.) சாதாரண அதிர்ச்சியடைந்தவர் உணர்ச்சியற்று மரக்கட்டைபோல ஆடாமலும் அசையாமலும் கிடப்பார். ஆனால் இரத்தப்பெருக்கால் வருந்துபவர் அமைதியின்றிக் கைகளை அங்குமிங்கும் வீசுவார், கழுத்திலுள்ள உடையைத் தாவிப் பிடிப்பார். (இதை, "சுவாசத் தாகம்" எனலாம்.)

(vii.) கடைசியிலே அவருக்கு அறிவு முற்றாய்க் கெட்டுவிடும்.

இந்த அடையாளங்களுள்ளவருக்கு வெளியாலே கண்ணுக்குத் தெரியக்கூடியதாய் இரத்தம் ஓடாவிட்டாமலும் அவர் கடினமான உள்ளிரத்தப் பெருக்கால் வருந்துகிறாரென நிச்சயித்துக்கொண்டு காலந்தாழ்த்தாமற் கருமமாற்றல் வேண்டும்.

**இரத்தப் பெருக்கிற்குச் சிகிச்சை :**

**வெளி இரத்தப் பெருக்கு :** காயக்காரர் உடகார்ந்திருந்தால் இரத்தம் குறைவான விசையுடன் பாயும்; படுத்திருந்தால் இன்னும் குறைவாகப் பாயும். ஆனபடியால் அவருடைய நிலையை இதற்கேற்றபடி சரிப்படுத்திக்கொள்ளவேண்டும். எலும்பு முறிவில்லாத காயக்காரருக்கு இரத்தம் பெருகிக்கொண்டிருக்கிற அவயவத்தை, இயலுமானால், உயர்த்திப்பிடித்தால் அந்த அவயவத்துக்கு இரத்தம் ஓடுவது குறையும். மெத்தைபோல் துணியைப்போட்டு இறுக்கி Bandage—(பான்டேஜ்) கட்டுக் கட்டினால், சாதாரணமாக அது ஓடுகிற இரத்தத்தை நிற்பாட்டிவிடும். அவயவத்திலே கிழிப்புக்காயம் ஏற்பட்டால், எலும்பு முறிவு உண்டென்பது நிச்சயமாய்த் தெரியாவிட்டாலும், இரத்தம் பெருகுவதைத் தடைப்படுத்துவதற்கு மட்டை வைத்துத் துணிபோட்டுக் கட்டிக்கொள்ளவேண்டும்.

**உள் இரத்தப் பெருக்கு :** உள்ளிரத்தப் பெருக்கிற்குச் சத்திர வைத்தியம் செய்தல் வேண்டும். இந்தக் காயக்காரரை விரைவிலே சத்திரவைத்தியசாலைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். இவரைத் தூக்கும் பொழுதும் கொண்டு போகும்பொழுதும் ஆட்டியசைக்காமலும் குலுக்காமலும் மெதுவாகக் கையாளவேண்டும். சூடேற்றுவதும், மேற்கூறியவாறு செய்தலும் ஆகிய இவைகளே இவருக்கு அவசியம் செய்யவேண்டிய முதலுதவிகளாம். உள்ளிரத்தம் பெருகுகிறதென்று சிறிதளவாவது சமுசயப்பட்டால், இவருக்கு என்ன காரணத்தை முன்னிட்டும் உண்ணக் குடிக்க ஒன்றும் கொடுத்தலாகாது.

**வயிற்றினுட் காயம்.**

வயிற்றினுள்ளே காயமுண்டானால் அந்தக் காயக்காரரை நிமிர்ந்து படுக்கவைத்து, பெட்டி, மடித்த சட்டை முதலியவற்றினமேல் முழங்காலை மடக்கிவைக்க வேண்டும்; அப்பொழுது இறுக்கம் குறைந்து வயிறு தொய்யும். தலையையும் தோள்களையும் உயர்த்தி வைத்துக்கொண்டால் அவரைத் தூக்கிச் செல்லும்பொழுது தீங்கு ஏற்படுவது குறைவாயிருக்கும். உறுப்பு ஏதாவது வெளியே நீட்டிக்கொண்டிருந்தால் அதை உரிய இடத்தில் வைக்க எத்தனிக்கக்கூடாது. அதை "லின்ட்" துணியால் அல்லது மெத்தை, கம்பளி முதலியவற்றால் மூடிப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். மூடுந் துணியை வெந்நீரிலே நனைத்துப் பிழிந்து உபயோகித்தல் நல்லது. வசதி

யானால், அந்த நீரிலே ஒரு பைன்ற் வெந்நீருக்கு ஒரு தேக் கரண்டி வீதம் மேசையுப்புக் கலந்துகொள்வது நல்லது. மூடுகிற "லின்ற்" துணி அல்லது துவாய் முதலியவைக்கு மேலே மிருதுவான கம்பளி அல்லது பஞ்சு சுற்றி, அகலமான கட்டுத் துணியால் இறுக்காமல் ஆனால் விலகாதபடி கெட்டியாகக் கட்டவேண்டும். வயிற்றினுள்ளே காயமுண்டானவருக்கு என்ன காரணத்தை முன்னிட்டும் உண்ணக் குடிக்க ஒன்றும் கொடுக்கக்கூடாது.

கால் முதலிய கீழ் அங்கங்களிலிருந்து பெருகுகிற இரத்தத்தைத் தடுப்பதற்குப் போடுகிற இரத்த நிறுத்த முடிச்சை (Tourniquet) தொடையைச் சுற்றிப் போடவேண்டும். மேல் அங்கங்களுக்குப் போடுகிற முடிச்சைப் புஜத்தைச் சுற்றிப் போடுங்கள். இரத்த நிறுத்தமுடிச்சை 15 நிமிஷத்துக்கு மேலே விடவேண்டாம். அதை அவிழ்த்துப்போடவேண்டும். தேவையானால் மீளவும் அதைக் கட்டிக்கொள்ளலாம். சுத்த இரத்தநாடியோரமாகக் காயத்துக்குமேலே நீளத்துக்கு மெதுவாக அமுக்குதலும் சாதாரணமாக நல்லது. **இரத்த நிறுத்த முடிச்சுப் போட்டிருந்தால் அப்படிச் செய்தது என்பதை முதலுதவிச் சிகிச்சைக் கோஷ்டிக்குக் கட்டாயம் தெரிவிக்க வேண்டும்.** அப்படித் தெரிவிக்காவிட்டால் பின்பு அந்த அங்கம் மரத்துப் போய் வெட்டியெறிய வேண்டியும் வரும்.

குறிப்பு.—இரத்தம் பெருகுகிற இடத்திலே அந்த அங்கத்தைச் சுற்றி ஒரு றப்பர்க் குழாயினாலோ நீண்ட பெலமான துணியினாலோ இறுக்கிக் கட்டவேண்டும். மேலும் மேலும் இறுக்க வேண்டுமானால் ஒரு சிறிய பிரம்புத் துண்டையோ தடியையோ முடிச்சுக்குள்ளே கொடுத்துச் சுற்றி சுற்றி முறுக்கவேண்டும். இரத்தம் தடைப்படத்தக்க அமுக்கம் வரும்வரைக்கும் முறுக்கினாற்போதும். இந்த முடிச்சே இரத்த நிறுத்தமுடிச்சு (Tourniquet) எனப்படும்.

**மூச்சடைப்பு :** சரீரத்துக்குப் போதிய பிராணவாயு போய்ச்சேராமல் விட்டால் அதனாலே மூச்சுக்குத் தடையேற்பட்டுவிடும். உடனே அதற்குச் சிகிச்சை செய்யாவிட்டால், ஆள் இறந்துவிடும். பூரண மூச்சடைப்பு ஏற்பட்டால் மூன்று அல்லது நாலு நிமிஷம் கழிந்ததும் இருதயத் துடிப்பும் நின்றுவிடும். புகை, நச்சுப்புகை, இடிந்ததுகள் நெஞ்சை அழுத்துதல் முதலியவைகளே இதற்குக் காரணம்.

**சிகிச்சை :** விபத்துக்குள்ளானவரை வசதிக்கேற்றபடி அபாயத்திலிருந்து அப்புறப்படுத்தவேண்டும் அல்லது அபாயத்தை விலக்கவேண்டும். இறுகக் கட்டியிருக்கிற உடை எல்லாவற்றையும் தளர்த்திவிட்டு, செயற்கைச் சுவாசாப்பியாசம் செய்யவேண்டும். "ஸ்காபரின்" முறையைக் கைக்கொள்ளுவது மிக நல்லது. ஏனென்றால் அதைப் பிறருடைய உதவியின்றித் தனியே ஒருவர் செய்துகொள்ள முடியும். அல்லாமலும் அது இலகுவானது. அதிலே களைப்பு ஏற்படாது.

**ஸ்காபர் முறை :** விபத்துக்குள்ளானவரை அவருடைய வயிறு பூமியிற் படக்கூடியதாகக் குப்புறக் கிடத்துங்கள். அவருடைய கைகளிரண்டையும் தலையின் ஒவ்வொரு பக்கத்திலும் முன்னே நீட்டி வையுங்கள். ஒரு கையை மடித்து அதன் மேல் ஒரு பக்கத்திற் கன்னத்தை வையுங்கள். அவருடைய தலைப்பக்கமாகப் பார்த்துக்கொண்டு உங்களுடைய கால்களுளொன்றை அவருக்குப் பக்கத்திலும் மற்றக் காலை அவருடைய கால்களிரண்டுக்குமிடையிலுமாகப் போட்டுக்கொண்டு உங்கள் முழந்தாளில் உட்காருங்கள். உங்கள் கைகளை விரித்து அவருடைய முதுகின் அடியிலே விலா எலும்பின் மேலே வையுங்கள். உங்கள் மணிக்கட்டுகள் கிட்டத்தட்ட ஒன்றையொன்று தொட்டுக

கொண்டிருக்கவேண்டும். கைப் பெருவிரல்கள் நெருங்கியிருக்க வேண்டும்; மற்ற விரல்கள் ஒவ்வொரு பக்கத்து இடுப்பின் மேலிருக்க வேண்டும். முழங்கால்களி லிருந்துகொண்டு கைகளைக் கெட்டியாகவும் நேராகவும் வைத்துக்கொண்டு உங்கள் உடம்பின் பாரம் அவருடைய வயிற்றை நிலத்துடன் அமர்த்தும்படி முன்னுக்குச் சாயுங்கள். கைகளின் நிலையை மாற்றுமல் பிடியைத் தளர்த்தி அமர்த்துதலைவிட்டு முன்னிருந்த நிலைக்குப் பின் நோக்கிச் சாயுங்கள். இப்படி நிமிஷத்துக்குப் பதினைந்து முறை செய்யுங்கள். வைத்திய சகாயம் கிட்டும் வரைக்கும் இப்படிச் செய்துகொண் டிருக்க வேண்டும்.

**எலும்பு முறிவு.**


*சாதாரண முறிவு:*—எலும்பு முறிந்து, தன்னைச் சுற்றியுள்ள தசையைக் கிழித்துக் கொண்டு வெளிவராவிட்டால் அல்லது அம் முறிவை உண்டுபடுத்திய கருவி தசையைக் கிழிக்காவிட்டால், அந்த முறிவு சாதாரண முறிவு எனப்படும்.

*கலப்பு முறிவு:* எலும்பு முறிந்து தோலிலிருந்து எலும்பு முறிந்த இடம் மட்டும் காயம் உண்டானுல் அந்த முறிவு கலப்பு முறிவு எனப்படும்.

என்ன பாடுபட்டும் சாதாரண முறிவைக் கலப்பு முறிவாகாதபடி தவிர்த்துக்கொள்ள வேண்டும். விபத்துக்குள்ளானவருக்கு மேன்மேலும் ஏதாவது ஆபத்து வரப்போகிற தென்று கண்டாலல்லாமல் அவரை அசைக்கவேண்டாம். பயிற்சியுள்ள வைத்திய சகாயம் வந்து சேருவதற்கிடையிலே அவரை அவசியம் அப்புறப்படுத்தவேண்டி யிருந்தால், முறிந்த இடத்துக்குப் பாதுகாப்பை முதலிலே செய்துகொள்ளவேண்டும். கடுமையான இரத்தப் பெருக்கு இருந்தால் அதைத் தடைப்படுத்த வேண்டும். அதிர்ச்சியை மாற்றுவதற்குக் கம்பளி அல்லது சட்டையினுலே அவரைப் போர்த்துச் சுற்றி அவருக்குச் சூடேறப்பண்ணவேண்டும். அதிர்ச்சிக்குச் சிகிச்சை செய்யுங்கள்.

**சமயத்துக்குத் தகுந்த மட்டை:** முறைப்படி செய்யப்பட்ட மட்டை உங்களிடமில்லா விட்டால், பயிற்சிபெற்ற சிகிச்சைக்காரர் மட்டைகளும் பிற கருவிகளும் கொண்டு வந்து சேருவதற்கிடையிலே நீங்கள் தருணத்துக்குத் தகுந்தபடி உங்கள் வீட்டிலகப்படும் சில பொருட்களையே கெட்டித்தனமாக மட்டையாய் உபயோகிக்கலாம். கீழே உதாரணங் காட்டி விளங்கப்படுத்தி வரைந்திருக்கும் படங்களிலே சுலபமான சில வழிகளைக் காணலாம்.


படத்திற் காட்டியிருக்கிற அளவு போதிய (பன்டேஜ்) கட்டுத் துணிகள் அகப்படா விட்டால், முறிந்த இடம் நேராய்க் கெட்டியாயிருப்பதற்காக முறிந்த இடத்துக்கு மேலும் கீழும் பிரதானமான இடங்களில் அவசியம் துணிக்கட்டுப் போட்டுக்கொள்ள வேண்டும்.



படம் 1.—வலது தொடை நடுப்பகுதியிலே ஒரு சாதாரண முறிவு.


முறிந்த தொடை எலும்புக்கு நெடுந்துடைப்பம் மட்டையாகக் கட்டப்பட்டிருக்கிறது. கைபிடி தொடையோடும் துடைப்பம் பாதத்தோடும் இருக்கின்றன. கணைக்கால்களுக்கு இடையிலும், முழங்கால்களுக்கு இடையிலும், இடுப்பிலும், புதினப் பத்திரிகை போன்றவைகளைத் தொய்ய மெத்தைபோல் மடித்துக் கட்டலாம்.

முக்கோணத் துணிக்கட்டுகள் போடப்பட்டிருக்கின்றன. கழுத்துக்குக் கட்டுகிற "டை," "பெல்ற்", சால்வை முதலியவைகளைப்போன்ற நீளமுள்ள பொருட்களாலுங் கட்டலாம்.



படம் 2.—முன்காலில் உண்டான சாதாரண முறிவு.

முறிந்த காலுக்குக் குடை மட்டையாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது. கணைக்கால்களுக்கு இடையிலும், முழங்கால்களுக்கு இடையிலும் புதினப்பத்திரிகை மெத்தை போலத் தொய்ய மடித்து வைக்கப்பட்டிருக்கிறது.



படம் 3.—முன்கை எலும்புகளுள் ஒன்றோ இரண்டுமோ முறிந்திருப்பது.

புதினப்பத்திரிகை மடித்து மட்டையாகக் கட்டப்பட்டிருக்கிறது. மடித்த கடதாசி முறிந்த கையை நேராகப் பிடித்திருக்கிறது.

**காயம்.**

சிறு காயங்களை (பொட்டாசியம் பேர்மங்கனேற்) கொன்டிஸ் உப்பு என்பதைத் தண்ணீரிற் கலந்து, அந்தத் தண்ணீரினுலே கழுவலாம், அல்லது போரிக் மருந்துத் தண்ணீரினுலே கழுவலாம். அப்படிக் கழுவினுல் அந்தக் காயத்திலுள்ள தூசு முதலியன போய்விடும்; காயம் சுத்தமாயிருக்கும். காயத்தைக் கழுவித் துடைத்த பின்பு, மெல்லிய சீலைத்துண்டை இந்த மருந்துத் தண்ணீரிலே அல்லது கிருமிகளைக் கொல்லுகிற மஞ்சல் மருந்துத் தண்ணீரிலே (ஆயிரத்தி லொன்றுகக் கலந்த கலவையிலே) நனைத்து அந்தக் காயத்தை அத்துண்டினுலே கட்டவேண்டும். கட்டுப்போட முந்தி இரத்தப் பெருக்கை நிற்பாட்டிப்போடவேண்டும். சிறு காயங்களுக்கு அயோடீன் போடலாம். ஆனுல் அது எரியும். பெரிய காயங்களுக்கு அயோடீன் போடவேண்டாம். அதையும் உபயோகித்துக் கட்டும்போட்டால், கொப்புளம் அல்லது எரிபுண் உண்டாகிவிடும்.

சுத்தப்படுத்துவதற்கும் விஷக்கிருமிகளைக் கொல்லுவதற்கும் ஒரு பைன்ற் தண்ணீருக்கு ஒரு தேக்கரண்டி டெற்ரேல் மருந்தும் அல்லது ஒரு பேணி தண்ணிருக்கு ஒரு தேக்கரண்டி மில்ற்றன் மருந்தும் கலந்து உபயோகிக்கலாம். கொன்டிஸ் உப்புக் கலவையிலே அந்த உப்பை அதிகம் போட வேண்டாம். கலவையின் நிறம் கருஞ் சிவப்பாகாமல் இளஞ் சிவப்பாயிருந்தாற் போதும்.

**தீப்புண் கொதிப்புண்.**

இவைகளும் மரணம் உண்டாக்கக்கூடிய அதிர்ச்சியேற்படுதற்கு முக்கிய காரணங்களுள் ஒன்றும். நெருப்பு, சூடான உலோகப் பொருள், திராவகப் பதார்த்தங்கள், மரவுப்புத்தன்மையான பதார்த்தங்கள் முதலியவற்றுல் தோல் சுடப்பட்டுத் தீப்புண் உண்டாகும். நீராவி, கொதிநீர், கொதி எண்ணெய் முதலியவற்றுல் தோல் சுடப்பட்டு கொதிப்புண் உண்டாகும்.

இவை சம்பந்தமாகக் கீழே கூறப்பட்டிருக்கும் பொது விதிகளைக் கவனித்துக் கொள்ளவேண்டும் :—

(a) சுடுபட்ட புண்ணிலே காற்றுப்படுவதைக் கூடிய சீக்கிரம் தடுக்க வேண்டும். தண்ணீருக்குள்ளே புண்ணைத் தாழ்த்திப் பிடிக்கவேண்டும் : உடம்புச் சூடும் நீர்ச்சூடும் சமமாகக் இருந்தால் நல்லது. அல்லது பஞ்சு, "லின்ற்," சுத்தமான வஸ்திரம் முதலியவைகளாலே மூடித் துணிக்கட்டுப் போட வேண்டும். தகுந்த முதலுவிச் சிகிச்சை ஆயத்தப்படுத்தும் வரைக்கும் தற்காலிகமாகத்தான் இப்படிச் செய்வதாகும்.

(b) உடையைக் களையவேண்டுமானுல் (உடுப்புக் கழற்றவேண்டுமானுல்), மிகவும் கவனமாகக் களைய வேண்டும். வஸ்திரம் புண்ணில் ஒட்டிப்பிடித்துக்கொண்டிருந்தால் ஒட்டின பகுதியைவிட்டு மிகுதியைக் கத்தரிக் கோலால் வெட்டியெடுக்க வேண்டும். கொப்புளம் உண்டாகிவிட்டால் அதைக் குத்தி உடைக்கக் கூடாது. கூடிய வரையிலே அதைத் தீண்டாமலே பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

(c) சுத்தமான சிறு புண்களுக்கு (Burnol) பேர்னெல் என்னும் மருந்து அகப்படுமானுல் அதைப் போட்டுக்கொள்வது நல்லது. இதைச் சூடான தேத்தண்ணீராற் கழுவுவதும் நல்லது. அதிகமான இடம் எரிந்திருந்தால் அதற்குத் தேத்தண்ணீர் மிகவும் சிறந்தது. "லின்ற்" துணியைத் தேத் தண்ணீரிலே நனைத்துக் காயத்தைச் சுற்றிக் கட்டிக் காயவிடுங்கள்.

(*d*) சுத்தமான வெந்நீரிலே அப்பத்துக்கு உபயோகிக்கும் சோடாவைக் கலந்து அந்தக் கலவையிலே துணியை நனைத்துக்கட்டுவது எவ்வளவோ ஆறுதலைக் கொடுக்கும். கட்டிய பின்னும் இந்தக் கலவையினாலே கட்டை அடிக்கடி நனைத்துக்கொள்ளவேண்டும். ஒரு பைன்ற் நீருக்கு இரண்டு தேக்கரண்டிச் சோடா போடவேண்டும்.

(*e*) முதலுதவிச் சிகிச்சையாக (Tannic) ரானிக் திராவக ரசம் பூசிக் கட்ட வேண்டாம். எண்ணெய்ச் சாமான்களும் போட்டுக் கட்ட வேண்டாம். ரானிக் ரசம் பூசுவதற்கு முன்பு மெல்லிய மயக்க மருந்து கொடுத்துப் புண்கழுவ வேண்டியிருக்கும். அது முதலுதவிச் சிகிச்சைத் தலத்திலே அல்லது ஆஸ்பத்திரியிலே டாக்குத்தர் செய்யவேண்டியதாகும்.

**மின்சாரத் தாக்கலிலிருந்து மீட்டல்.**

மின்சாரம் தாக்கிக்கொண்டிருந்தால், இயலுமானால் மின்சாரத்தை முக்கிய இணைப்பிலிருந்து தடுத்து நிற்பாட்டவேண்டும். மின்சாரத்தை நிற்பாட்ட முடியாவிட்டால், முதலுதவி செய்பவர் தமக்கு மின்சாரம் ஏறுவண்ணம் முதலிலே தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். அவர் தமது கால்களுக்கும் பூமிக்குமிடையிலே மின்சார மேறாத பொருட்களைப் போடவேண்டும். அப்படிச் செய்து கொண்டால் அவர்மீது மின்சாரம் ஏறாது. றப்பர், லினோலியம், மரம், கண்ணாடி, உடை, கடதாசி (பத்திரிகை) ஆகிய இச்சாமான்களில் மின்சாரம் ஏறமாட்டாது. ஆதலால் முதலுதவி செய்வோர் தங்களை மின்சாரத்தினின்றும் பாதுகாப்பதற்கு இவைகளை உபயோகிப்பது நன்று.

வளைந்த கைப்பிடியுள்ள கைப்பிரம்பால் (உலாத்துக்கோல்) அல்லது தடம்போட்ட உலர்ந்த கயிற்றால் விபத்துக்குள்ளானவரை மின்சாரத்திலிருந்து இழுக்கலாம்; குடையிலுள்ள இரும்புக் கம்பி முதலிய உலோகப் பொருளிலே மின்சாரம் ஏறுமாதலினாலே குடை உபயோகிக்கவேண்டாம். உலோகப் பொருளிலும் ஈரத்திலும் மின்சாரம் நன்றாய் ஏறும். ஆகையால் உதவிசெய்வோர் விபத்துக்குள்ளானவருடைய கை, அக்குள், ஈர உடை, ஆணியுள்ள சப்பாத்து, உலோகப் பொருள் ஆகிய இவைகளைத் தொடக்கூடாது.

**அறிவு மயக்கம்.**

அறிவு மயங்கினவரை நிமிர்த்திக் கிடத்தவேண்டும். கம்பளியால் அல்லது சட்டையால் அவனைப் போர்த்து அவருடைய தலையை ஒருபக்கம் திருப்பிவைக்கவேண்டும். பொய்ப்பல்லு கட்டியிருந்தால் அதை எடுத்துவிடவேண்டும். திடீரென்று முகம் சிவத்திருந்தால் தலையையும் தோள் மூட்டுகளையும் உயர்த்திவைக்க வேண்டும்; முகம் வெளிறியிருந்தால் தலையையும் தோள் மூட்டுகளையும் கீழே பணித்து வைக்க வேண்டும். இறுகிய உடையை, விசேஷமாக கழுத்து மார்பு அரை என்னுமிடங்களிலுள்ளவற்றை, தளர்த்திவிட வேண்டும். அறிவு சிறிதாகவேனும் முற்றாகவேனும் மயங்கிக் கிடப்பவருக்கு வாய் வழியாக ஒன்றும் உள்ளே செலுத்தக்கூடாது. அவரை அப்புறப்படுத்த வேண்டுமானால் குலுக்காமல் மிகவும் கவனமாகத் தூக்கிச் செல்லவேண்டும்.

பொழிப்பு.

இலகுவான முதலுதவியின் முக்கியமான அம்சங்கள் :—

(1) கடுமையான இரத்தப் பெருக்கு உண்டானல் அதைத் தடுப்பதற்குக் கூடிய சீக்கிரம் சிகிச்சை செய்யவேண்டும். அதற்காக ஒவ்வொரு காயத்தையும் தனித்தனி உடனுக்குடனே கவனிக்கவேண்டுமென்பது கருத்தன்று. ஆனல் உயிருக்கு ஆபத்து உண்டுபண்ணக்கூடியதாய் ஓடிக்கொண்டிருக்கிற இரத்தப் பெருக்கை எல்லாவற்றிற்கும் முதலாகக் கவனிக்க வேண்டும்.

(2) விபத்துக்குள்ளானவர் சாதாரணமாகச் சுவாசிக்கக்கூடியதாய் இருக்க வேண்டும். மூச்சுவிடுதற்குக் கஷ்டமாயிருந்தால் அதன் காரணத்தைக் கண்டு பிடித்துக் கஷ்டத்தை நீக்க வேண்டும். வேண்டுமானல் சிறிதேனும் காலம் தாழ்த்தாமல் செயற்கை முறைப்படி சுவாசிக்கச் செய்யவேண்டும்.

(3) வேறு காரணத்தினலே உயிருக்கு ஆபத்து உண்டாகுமென்று கண்டாலன்றி மற்றும்படிக்கு, எந்த அங்கத்திலாவது கடுங்காயம் உண்டானலும், மூட்டுகளிலே காயம் உண்டானலும், எலும்பு முறிந்திருப்பது தெரிந்தாலென்ன தெரியாவிட்டாலென்ன, விபத்துக்குள்ளானவரை அப்புறப்படுத்துவதற்குமுன் காயப்பட்ட இடத்தை இலகுவான முறைகளினலே தாங்கிப் பாதுகாத்துக் கொள்ளல்வேண்டும்

(4) இடிந்த கட்டிடத்தினுள் அகப்பட்டோ அல்லது இடி துகள் முதலியவற்ருல் மூடப்பட்டோ இருப்பவருக்குக் கடுங்காய மிருப்பதாக எண்ணிக்கொண்டே சிகிச்சை செய்யவேண்டும். அவருக்குத் தொடையெலும்பு, இடுப்பெலும்பு, முதுகுத்தண்டு முதலியவைகளுள் ஏதாவது முறிந்திருத்தல் கூடும்.

(5) கொஞ்சமாகவோ முற்ருகவோ அறிவு மயங்கியிருப்பவருக்கும், உள்ளே நோவுண்டு என்று சமுசய மேற்பட்டவருக்கும் உண்ணக் குடிக்க ஒன்றும் கொடுக்கக்கூடாது.

(6) முதலுதவியிலே கண்டபடி குடிவகை கொடுப்பது மோசம் விளைவித்தல்கூடும். டாக்குத்தரொருவருடைய உத்தரவில்லாமல் குடிவகை யொன்றும் எவ்வித மான காயக்காரருக்கும் கொடுக்கவே வேண்டாம்.

(7) காயப்பட்டோர் எவரும் சாதாரண அதிர்ச்சியினல் வருந்துவர். காயம் அடைந்து சிறிது நேரங் கழிந்தபின் வருகிற கடினமான அதிர்ச்சியினலே மரணமும் சம்பவிக்கும். முன்பு கூறின இலகுவான முறைகளினலே கடினமான அதிர்ச்சியைத் தடைப்படுத்த முடியும். முரட்டுத்தனமாகவேனும் முறை கேடாகவேனும் கையாளுதலினலே கடினமான அதிர்ச்சி வருவதும் மோச மாவதும் ஏற்பட்டுவிடும்.

(8) விபத்துக்குள்ளானவருக்கும் குளிர்பிடிக்காதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். அவரை எப்பொழுதும் மிகவும் மெதுவாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

அத்தியாயம் 7.

# கொழும்பு ஏ. ஆர். பி. ஸ்தாபனம்.

புது டெல்ஹியிலுள்ள பொதுஜனபாதுகாப்பு ஸ்தாபனத்திலே இருத்தியங்களுக்கும் பயிற்சிக்கும் மேலதிகாரியாயிருக்கின்ற லெப்டினண்ட் கேணல் ஏ. ஜே. றீவ் அவர்கள் கொழும்பு ஏ. ஆர். பி. திட்டமொன்று வகுக்கலானுர். அது இயன்றவரை யிலே அவர் வகுத்தபடியே நடைபெற்றுவருகிறது.

அந்த ஸ்தாபனம் வளர்ந்து பூரணமாக அமையுங்காலத்திலே தொழிற்படும் முறைமையைப் பின்வரும் விபரங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம் :—

(1) விமானப் படையெடுப்பு எச்சரிக்கைக் கிரமம்.

(2) கண்காணிப்பு அறிக்கைத் தலங்கள்.

(3) வெளிக்கருமத் தூதர் சேவை.

(4) ஏ. ஆர். பி. வார்டன் சேவை—வார்டன் நிலையங்கள்—தெருவீதி நெருப்பணைப்புக் கோஷ்டிகள்.

(5) ஊறடைந்தோர்க்குச் சேவை—முதலுதவிக் கோஷ்டிகள்—முதலுதவி நிலையங் கள்—அம்பியூலன்ஸ் சேவை—அவசரகால ஆஸ்பத்திரித் திட்டம்.

(6) இரட்சக சேவை—இரட்சக கோஷ்டிகள் (சிறியதும் பெரியதும்)—ஏ. ஆர். பி. நிலையங்கள்.

(7) நெருப்பணைப்புச் சேவை—உப நெருப்பணைப்புப் படை.

(8) பொதுஜன பாதுகாப்பு.

(9) வெளிச்சக் கட்டுப்பாடு.

(10) வெடிக்காத குண்டுகளுக்கு முடிவுகாணல்.

(11) சேதத்தினின்றும் இரட்சித்தல்.

(12) இடி துகள் அகற்றலும் பொதுஜனத்துக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய கட்டி டங்களைச் சிதைத்தலும்.

(13) குண்டு வீசிய இடத்துள்ளோர் வெளியேற்றமும் அனுதைகள் பரிபாலனமும்.

(14) யுத்தத்தாலேற்படும் பொதுஜன மரணம்.

(15) இயக்கத்திற்குதவி.

(16) காஸ், தண்ணீர், மின்சாரம், சாக்கடை, போக்குவரத்துச் சாதனம் முதலிய முக்கிய சேவைகளின் நிருவாகம்.

(17) வியாபாரஸ்தலம் தொழில் ஸ்தலம் முதலியவற்றில் ஏ. ஆர். பி.

(18) (i.) நெருப்பணைப்புச் சேவை.
(ii.) வைத்திய சேவை.
(iii.) பண்டமும் படையும் பிறவும் போக்குவரத்துச் செய்தற்கு வாகனசேவை.
(iv.) இடிதுகள் அகற்றும் சேவை, ஆகிய இந்தச் சேவைகளுக்குத் தேவையான புதுப்பலம் அளிப்பதற்கு இராணுவ அதிகாரிகள் கடற்படையதிகாரிகள், விமானப்படையதிகாரிகள், விமானப்படைப் பாதுகாப்பு அதிகாரிகள், பொதுஜன எ. ஆர். பி. அதிகாரிகள் ஆகிய இவர்கள் தங்களுக் கிடையே ஒருவருக்கொருவர் உதவி செய்தல்.

(19) எ. ஆர். பி. சட்ட நிரூபணம்.

கொழும்பு மியூனிசிப்பல் எல்லைக்குள்ளே இந்த ஸ்தாபனம் வளர்ந்து பூர்ணமாகி வரும் விதத்தைக் கீழ்வரும் விபரம் சுருக்கமாகக் கூறுகின்றது.

**வார்டன் சேவை.**—இந்தச் சேவையிலே பிரதம எ. ஆர். வார்டன் ஒருவர், உப பிரதம எ. ஆர். வார்டன் ஒருவர், முழுநேர வேலைசெய்யும் அதிகாரி ஒருவர், அந்த அந்த எல்லைக்குரிய பெரும் பிரிவுத் தலைமை எ. ஆர். வார்டன்மார் 9 பேர் பெரும் பிரிவு உப தலைமை எ. ஆர். வார்டன்மார் 14 பேர், சிறு பிரிவு எ. ஆர் வார்டன்மார் 42 பேர், நிலைய வார்டன்மார் 125 பேர், இவர்களைத் தவிர்ந்த மற்ற வார்டன்மார் கிட்டத்தட்ட 2,200 பேர் ஆகிய இத்தனைபேர் அடங்கி யிருக்கின்றனர்.

சத்துரு விமானங்கள் படையெடுத்துவந்து தாக்கினால் அதனாலேற்பட்ட கஷ்டத்தையும் சேதத்தையும் உடனுக்குடனே பூரணமாக அறிந்துகொள்ளவேண்டியவர் எ. ஆர். பி. கண்காணிப்பு அதிகாரி. அவர்தான் தேவைக்கேற்றபடி சகல சேவைகளையும் தொழிற்படப்பண்ணுகிறவர். இவையெல்லாம் தொழிற்படுவ தற்கு அவருக்குச் செய்தியறிவிப்பவர் வார்டன்மாரே. எனவே பயிற்சிபெற்ற திறமையான வார்டன் சேவை தக்கவாறு பூரணமாய் அமைந்து நடக்க வேண்டியது மிகவும் அவசியமும் முக்கியமானதுமாகும்.

**தெருவிதி நெருப்பணைப்புக் கோஷ்டி** யானது வார்டன் சேவை விருத்தியடைந்ததனால் வந்த விளைவுகளுளொன்றாகும். பகைவருடைய முயற்சியினாலே உண்டான சிறு நெருப்புக்களை நெருப்பணைப்புப் படைகள் வந்து சமாளிக்கும்படியான பெரு நெருப்புக்களாக வளரவிடாமல் அவ்வப்பொழுது அங்கங்கே சமீபத்தி லுள்ளோரே அணைத்துவிடத்தக்கதாக ஒவ்வொரு வார்டனும் மும்மூன்று பேரடங்கிய கோஷ்டிகளைத் தெரிந்தெடுத்து நன்றாய்ப் பயிற்சியளித்து வைத் திருக்கின்றார்.

**இரட்சக சேவை.**—இது, தலைவர், அவருடைய உப தலைவர், முழுநேர உத்தியோக அதிகாரி ஒருவர், சிறிதும் பெரிதுமுட்படச் சகல தளவாடங்களோடுங்கூடிய இரட்சக கோஷ்டிகள் 22, எ. ஆர். பி. நிலையங்கள் 5, குண்டு வேவுபார்க்கும் கோஷ்டிகள் 5, சுத்திசெய்யும் படை 10 ஆகிய அம்சங்களுடையது.

கண்காணிப்பு அதிகாரியினுடைய உத்தரவின்படி விபத்து நடந்த இடத்துக்கு முதன் முதல் ஓடிப்போவது இரட்சக கோஷ்டிதான். அது காயமடைந்தோரை இடிதுகள் முதலியவற்றினின்றும் வெளியே இழுத்தெடுத்துவிடும். அதன் பின்னரே முதலுதவிக் கோஷ்டி தங்கள் சேவையைச்செய்து, உட்காரக்கூடிய காயக்காரரை கார்களிலும், ஏனையோரை அம்பியூலென்ஸ் கார்களிலும் ஏற்றி முதலுதவி நிலையங்களுக்கு அல்லது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வர்.

**ஊறடைந்தோர் சேவை.**—இது, தலைவர், முழுநேர (வைத்திய) உத்தியோகஸ்தர் 2, முழு நேர அம்பியூலன்ஸ் அதிகாரி 1, முதலுதவித் தலங்கள் 12, முதலுதவிக் கோஷ்டி 60, அம்பியூலன்ஸ் வண்டி 30, உட்காரக்கூடிய காயக்காரரை ஏற்றிச் செல்லும் மோட்டோர்க்கார் 30, இயங்கித்திரியும் முதலுதவிக் கோஷ்டி 2 ஆகிய அம்சங்களுடையது.

**ஊறடைந்தோருக்கு அவசர வைத்தியசாலை.**—இது சத்திரவைத்தியம், ஜீவனைக் காப்பாற்றுதற்குரிய பிற சிகிச்சைகள் முதலியன செய்தற்கு ஏற்பட்டது. இது அவசரகால ஆஸ்பத்திரித்திட்டத்தின் ஓர் பகுதியாகும். இந்தத் திட்டத்திற்கு வைத்திய சுகாதாரத் தலைவரே பொறுப்பாளி.

**நெருப்பணைப்புச் சேவை.**—இது கொழும்பு நெருப்பணைப்புப் படையும் உப நெருப்பணைப்புப் படைகளும் கொண்டது. பிரதம அதிகாரி, உப அதிகாரி, அதிகாரி 1 பெரும்பிரிவு (டிவிஷனல்) அதிகாரி 3, நெருப்பணைப்புப் படை நிலையங்கள் 14 ஆகிய அம்சங்கள் இப்பொழுது உண்டு. (பெரிய) கோஷ்டியும் 30 இனிமேல் ஏற்படும்.

விமானப் படையெடுப்பினால் வந்த மோசமான பெரு நெருப்புக்களை இந்த நெருப்பணைப்புப் படைகள் சமாளிப்பதற்கு அனுகூலமாக, சிறு நெருப்புக்களை சமாளிக்க வீட்டு நெருப்பணைப்புக் கோஷ்டிகளை வார்டன்மார் திறமையாய் அமைப்பது மிகவும் பிரயோசனமாகும்.

**செய்திப் போக்குவரத்து.**—இதிலே தலைவர், முழுநேர (டெக்னிக்கல் Technical) இயந்திரக்கலை விற்பன்ன உத்தியோகத்தர் 1, முழுநேரச் சமாச்சார உத்தியோகத்தர் 1, கண்காணிப்பு அறிக்கை நிலையம் 1, புறம்பான அறிக்கை நிலையம் 1, தூதர் சேவை ஆகிய அம்சங்களுமுண்டு.

எதிரியினுடைய செய்கையினால், ஏ. ஆர். பி. சேவையிலுள்ளோர் ஏனைய சேவைகளுடன் டெலிபோன் மூலம் பேச முடியாவிட்டால் தூதர் சேவையே மிகவும் பிரதானமான தொழிலைச் செய்யக் கடமைப்பட்டவர்களாவர்.

**பழுதுபார்க்கும் சேவை.**—தெரு, தண்ணீர், காஸ், மின்சாரம், சாக்கடை முதலியவைகள் பழுதுபட்டால் அவைகளைத் தேவையான இடத்திற்சென்று சீர்ப்படுத்துவதற்குச் சித்தமாய் அங்கங்கே இதற்கெனக் கோஷ்டிகள் எந்நேரமுமிருக்கின்றன.

**ஏ. ஆர். பி. ஆகார சேவை.**—வார்ட் ப்ளேஸிலுள்ள ஆகார சேவைத் தலைமைக் கந்தோரிலே மோட்டோர் வான் (Van) வண்டி, லொறி முதலியன சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. விபத்து நடந்த இடத்துக்கும் தேவையான பிறவிடங்களுக்கும் அவ்வப்பொழுது தேவைக்கேற்றபடி இவை அனுப்பப்படும்.

**திட்டம் வகுத்தலும் பொது விஷயமும்.**—இதன் தலைவர் பொதுவான திட்டம் வகுத்தலுக்கும் பிற ஏ. ஆர். பி. ஸ்தாபித்தலுக்கும் பொறுப்பாளியாய் உப ஏ. ஆர். பி. கண்காணிப்பு அதிகாரியாய்க் கருமம் ஆற்றுவர்.

**ஏ. ஆர். பி. வார்டன் பயிற்சி.**—குறுகிய காலத்தினுள்ளே மிகுந்த திறமையுள்ளோராகும்படி வார்டன்மாருக்குப் பயிற்சியளிப்பதும், அடிக்கடி அப்பியாசங்களும் வகுப்புகளும் நடத்துவதும் தலைவரையும் ஏ. ஆர். பி. போதகாசிரியர்களையும் பொறுத்துள்ள மகத்தான பொறுப்புக்களாம்.

விரிவான நுட்பமான திட்டம் வகுத்தலுக்கும், பல ஏ. ஆர். பி. சேவைகளையும் அமைத்து அவைகளை ஒத்து வேலை செய்விப்பதற்கும், ஏ. ஆர். பி. சேவை திறமையாகத் தொழிற்படுதலுக்கும். ஏ. ஆர். பி. கண்காணிப்பு அதிகாரியே பொறுப்பாளி. "அபாய ஒலி" கேட்டவுடனே அல்லது பகைவருடைய முயற்சி ஆரம்பித்தவுடனே அங்கங்கே தோன்றுகிற அந்த அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அந்த அந்தத் தேவையைப் பூர்த்திசெய்தற்கும் ஏற்றபடி சகல சேவைகளுக்கும் அவ்வவற்றிற்குத்தக்க உத்தரவுகளிட்டுக் காரியம் முழுவதையும் கண்காணிப்பது இந்த அதிகாரியினுடைய பொறுப்பாகும்.

**(ஸிவில்) பொதுஜன பாதுகாப்புப் பகுதி.**—கொழும்பு ஏ. ஆர். பி. திட்டத்துக்குத் தலைவர் (ஸிவில்) பொதுஜன பாதுகாப்புக் கொம்மிஷனர்.

கொழும்பு மியூனிசிப்பல் எல்லைக்குள் இவ்விஷயமாக அக்கொம்மிஷனருக்குப் புத்திமதி கூறுபவர் கொழும்பு மேயர்.

பொதுஜன பாதுகாப்பு விஷயங்களைக் கவனிக்கிற அரசாங்க அதிகாரி கௌரவ பிரதம காரியதரிசி.

**ஒருவருக்கொருவர் உதவி.**—இராணுவ, கடல், ஆகாயப் படைகளின் அதிகாரிகள் பொதுஜன ஏ. ஆர். பி. அதிகாரிகளுக்கு வேண்டிய நெருப்பணைப்பு, வைத்திய போக்குவரத்து வாகன உதவி செய்வார்கள்.

## ஏ. ஆர். பி. தொழிற்படும் முறைமை.

இது வரையிலே ஸ்தாபனத்தின் பல சேவைகளுடைய விபரம் சுருக்கமாகக் கூறப்பட்டது. இனி இது தொழிற்படும் முறைமையும் இவ்விஷயமாகப் பொது ஜனங்கள் ஒத்துழைக்க வேண்டிய முறைமையும் சுருக்கமாகக் கூறப்படும்.

இரவிலோ பகலிலோ எப்போதாயினுமொரு நேரத்திலே "அயாப ஒலி" கேட்கிறதென்று வைத்துக்கொள்வோம். உடனே இந்த ஸ்தாபனம் முழுவதும் தொழிற்பட்டுக்கொண்டிருக்கும். அவ்வப்பகுதிகளிலுள்ள வார்டன்மார் தங்கள் நிலையங்களிலே எல்லோரும் சரியாயிருக்கின்றனரோ என்று பார்த்து, வீதிகளெங்கும் போய்ச் சுற்றித்திரிந்து பொதுஜனங்களெல்லோரையும் ஒதுக்கிடங்களில் ஒதுங்கிக் கொள்ளப்பண்ணுவர். ஏ. ஆர். பி. நிலையங்களிலே அம்பியூலன்ஸ் வண்டிகளும், முதலுதவிக் கோஷ்டிகளும் இரட்சக சேவைக் கோஷ்டிகளும் ஆயத்தமாயிருக்கும். டெலிபோன்காரர் டெலிபோனிலே மத்திய கண்காணிப்பு நிலையத்துக் கட்டளைகளையும் செய்திகளையும் ஏற்றுத் தேவையான விபரங்களைக் கூறுவதற்கு ஆயத்தமாயிருப்பர். உதவி மோட்டோர்க்காரர்கள் முதலுதவிக் கோஷ்டியினரையும் காயமடைந்தவரையும் ஏற்றிச் செல்லுவதற்குத் தங்களுக்குக் குறிக்கப்பட்ட நிலையங்களைச் சேரும். முதலுதவித் தலங்களிலே டாக்குத்தர், தாதிமார் முதலியவர்கள் தலத்திலே சிகிச்சைவேலை நடத்த ஆயத்தமாய் நிற்பர். அறிக்கை நிலையங்களிலே டெலிபோன்காரரும், அறிக்கைக் கிளாக்குமாரும் தங்கள் வேலையைச் செய்ய ஆயத்தமாயிருப்பர். அவ்வச்சேவைத் தலைவர்கள் கொழும்புப் படத்திலே விபத்திடங்களைக் குறித்து விபரங்களையறிந்து தேவையான இடங்களில் விரைவாகக் கருமம் நடைபெறக் கட்டளையிடுவர். நெருப்பணைப்புப்படை இரவுபகல் எந்நேரமும் எந்த இடத்திலும் தொழிற்படும்படி மிகுந்த ஆயத்தத்துடனிருக்கும்.

அபாய ஒலியின் கடைசி ஊளை மங்குவதற்கிடையிலே எல்லாம் ஆச்சரியகரமான ஆயத்தநிலையிலிருக்கும். இந்த ஏ. ஆர். பி. படைகளெல்லாம் தங்கள் தங்கள் கருமத்தைச் செய்யும் நேரம் உண்மையாகவே வந்துவிட்டதென்பர். இதுதான் சோதனைக்காலம். பொதுஜனங்கள் ஒதுக்கிடங்களில் ஒதுங்கியிருந்து உயிர் பிழைக்கப்போகிறார்களா அல்லது வெளியே திரிந்து கலவரமுண்டாக்கிக் கருமத்தைக் கெடுத்து உயிரிழக்கப்போகிறார்களா என்பதைச் சோதிக்கும் காலம் இதுவேயாகும். இந்த ஸ்தாபனம் அவசரகாலத்திலே தன் பொறுப்பைத் தாங்குமா தாங்கமுடியாமல் முறிந்துவிடுமா என்பதைச் சோதிக்கும் காலமும் இதுவேயாகும்.

எப்படியோ திடீரென்று சத்துரு விமானங்கள் வீசின நாசக் குண்டு விழுகிற சப்தம் கேட்கிறதென்று வைத்துக்கொள்வோம். காவற்கடமை செய்துகொண்டிருந்த வார்டன் மாருட்பட எல்லோரும் அகப்பட்ட ஒதுக்கிடங்களில் ஓடிப்போய் ஒதுங்கிக்கொள்ளுவர். நேரம் போவதுமோ ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகம் மாதிரித்தானிருக்கும். தூரத்து விமானங்களின் இரைச்சலைத்தவிர வேறொன்றுமில்லையென்று கண்டவுடனே வார்டன்மார் இருவர் ஒதுக்கிடங்களைவிட்டு வெளியே குண்டு விழுந்த திசையை நோக்கிச் செல்வர். அந்த இடத்தைக் கண்டுபிடிப்பர். பிற விபத்துக்களையும் விரைவிலே கண்டு கொள்வர். காயப்பட்டவர்களைக் கவனிக்கிறதற்கு ஒருவர்விபத்து நடந்த இடத்திலேயே நின்றுகொள்ள, மற்றவர் வார்டன் நிலையத்துக்கு ஓடோடியுஞ்சென்று விபத்து விபரங்களை டெலிபோன் மூலமாக அறிக்கை நிலையத்திற்கு அறிவித்துவிடுவர். அவருடைய முதல்வேலை முடிந்தது. இனி மற்றதெல்லாம் விபத்து நடந்த இடத்திற் செய்ய வேண்டியன. ஆதலினாலவர் அங்கே போய், வருந்துவோருக்கு ஆறுதல் கூறியும், பல விதமான உதவிகள் செய்கிற கோஷ்டிகளைக் கண்காணித்தும் அவைகளைத் தேவைக் கேற்றபடி தொழிற்பட உதவிசெய்வர். முதலுதவிக் கோஷ்டியினர் ஊறடைந்தோரைக் கட்டிடங்கள் முதலியவற்றினின்றும் இழுத்தெடுப்போர், முதலியவர்கள் அம்பியூலன்ஸ் கார் முதலியவைகளும் கொண்டு விபத்து ஸ்தலத்துக்கு வந்து தங்கள் கடமையைச் செய்துகொண்டிருப்பர். சிறிது நேரத்தினுள்ளே காயமடைந்தவர் எல்லோரும் தங்கள் காயத்துக்குத் தகுந்தபடி முதலுதவித் தலத்திலோ ஆஸ்பத்திரியிலோ சிகிச்சை செய்யப்படுவர்.

அந்த வேளையில் அலுவல்கள் முடிந்தவுடனே வார்டன்மார் மீண்டும் தங்கள் காவற்கடமையைச் செய்ய ஆரம்பித்துவிடுவர். படையெடுப்பு நடக்குமிடமெங்கும் இப்படித்தான் நடந்துகொண்டிருக்கும்.

கடைசியிலே " இனி அபாயமில்லை " என்ற ஒலி கேட்டதும், முன்பு " அபாய ஒலி " கேட்டவுடனே ஸ்தம்பித்து ஒடுங்கிப்போயிருந்த நகர சீவியம் பழையபடி உயிர்த்தெழுந்து வழக்கம்போல இயங்க ஆரம்பித்துவிடும்.

5 ——J.N. 4855 (3/42)

**வார்டன் சேவை**

தலைவரும் பிரதம ஏ. ஆர். வார்டனும் :
Col. ஜே. ஜீ. வண்டர்ஸ்மாற் V.D., J.P.

உத்தியோக அதிகாரி :
வீ. ஈ. சரவணமுத்து J.P.

உப பிரதம ஏ. ஆர். வார்டன் :
என். சரவணமுத்து, J.P., M.M.C.

9 பெரும் பிரிவுத் தலைமை ஏ. ஆர். வார்டன்மார்

14 பெரும்பிரிவு உப தலைமை ஏ. ஆர். வார்டன்மார்

42 சிறு பிரிவு ஏ. ஆர். வார்டன்மார்

125 நிலைய வார்டன்மார்

2,200 வார்டன்மார்

வீட்டு நெருப்பணைப்புக் கோஷ்டிகள்
(125 குடிசனத்துக்கு மூவரனமைந்த கோஷ்டியொன்று)

**இரட்சக சேவை**

தலைவர் :
Lt. Col. ஸ்டான்லி பெர்ணன்டோ M.B.E.

உப தலைவர் :
சீ. ஸ்டீவாட் ஓர்

உத்தியோக அதிகாரி :
டபிள்யு. ஜீ. மக்காத்தி

22 இரட்சக கோஷ்டி

5 ஏ. ஆர். பி. நிலையம்

5 நிலையத் தலைவர்

5 குண்டுவேவுக் கோஷ்டி

10 நச்சுகாத்து சுத்தி செய்யும் படைகள்

**ஊறுனை**

டக்டர் 

உத்தியோ
டக்டர் ஏ.
டக்டர் ஏ.

அம்பியூ
சீ.

12 முத
60 முதலு
30 
30 காயக்
2 
முதலு

அத்தியாயம் 8.

# கொழும்பு ஏ. ஆர். பி. திட்டம்.

ஸிவில் (பொதுஜன) பாதுகாப்புக் கொம்மிஷனர்.

ஓ. ஈ. குணத்திலக்க அவர்கள், C.M.G.

அட்வைஸர் : கொழும்பு மேயர், டாக்டர் ஆர். சரவணமுத்து

ஏ. ஆர். பி. கண்காணிப்பு அதிகாரி : டாக்டர் டீ. எம். ட சில்வா.

**...டைந்தோர் சேவை**

தலைவர் :
...ர் ஸீ. எச். குணசேகர

...யோக அதிகாரிகள் :
...ர. டபிள்யு. இராசையா
...ஏ. ஸீ. பேர்னண்டோ

...யூலன்ஸ் அதிகாரி :
...ஸீ. வீ. ஒந்தாச்சி

...முதலுதவித் தலம்
...தலுதவிக் கோஷ்டி
...0 அம்பியூலன்ஸ்
...யக்கார மோட்டோர்க்கார்
...2 இயங்கித்திரியும்
...தலுதவிக் கோஷ்டி

**நெருப்பணைப்புச் சேவை**

தலைவர் :
பி. ஈ. வீரசிங்ஹ

உபதலைவர் :
ஜீ. டபிள்யு. பேர்டினன்ஸ்

உத்தியோக அதிகாரி :
எஸ். ஜே. கதிர்காமர்

பெரிய பெரும்பாக நெருப்பணைப்பதிகாரியும் பயிற்சி உத்தியோகத் தலைவரும் :
ஏ. பீ. கூல்மேயர்

(தென்) பெரும்பாக நெருப்பணைப் பதிகாரியும் தனிக்கட்டிட நெருப் பணைப்பு பாதுகாப்பதிகாரியும் :
காள் மெண்டிஸ்

14 நெருப்பணைப்புத்தலம்

30 பெரிய கோஷ்டி

நெருப்பணைப்புத் தொண்டர்படை

**செய்திப் போக்குவரத்து**

தலைவர் :
டீ. லஸ்க்

(டெக்னிக்கல்) உத்தியோக அதிகாரி :
ஸீ. ஈ. விக்கிரமநாயக

உத்தியோக அதிகாரியும் தூதர் சேவைத் தலைவரும் :
St. எல். எச். ட சில்வா

ஒன்றுக்கப்பட்ட கண்காணிப்பு அறையும் அறிக்கை நிலையமும் :
புறம்பான அறிக்கை நிலையம்

தூதர் சேவை

ம்.

| | | | |
|---|---|---|---|
| ...ரத்து | திட்டம் வகுத்தலும் பொது விஷயமும் | ஏ. ஆர். வார்டன் பயிற்சி | ஏ. ஆர். பி. ஆகார சேவை |
| | தலைவர் : Rev. எஸ். சீ. தெக்ஸ்றன் | தலைவர் : ஈ. ஜீ. ரீ. ஹொல்சிங்கர் | தலைவர் : ஜீ. சி. சிலேற்றர் |
| ...ாக அதிகாரி : ...ாயக | உத்தியோக அதிகாரி : (காலி) | ஏ. ஆர். பி. போதகாசிரியர் : சீ. டீ. தில்லைவாசம் | உப தலைவர் : ரீ. எ. ட மெல் |

...பும் தூதர்
...ரும் :
...ில்வா

...ப்பு அறையும்
...மும் :
நிலையம்

...ப

## ஏ. ஆர். பி. சேவைத் தல விபரம்.

| எல்லை. | 1. தலைமை வார்டன். 2. உப தலைமை வார்டன் | வார்டன் நிலையங்கள். | முதலுதவித் தலம். | நெருப்பணைப் புக்கோஷடித் தலம். |
|---|---|---|---|---|
| 1. முகத்துவாரம் | 1. ரீ. ஈ. பீரிஸ் ஜே.பீ. "குட்ஹோப்," டானியல்ஸ் ரோட், மாதம்பிட்டிய, டெலிபோன் : 3177<br>2. பி. ஆர். த சில்வா, வாட் டேர்ஸ்மீற், முகத்துவாரம் டெலிபோன் : 4852 | 1A1 3, பஸ்பெற்றல் ரோட்<br>1A2 பாம் க்ரேவ், மத்திய ரோட், மட்டக்குளி<br>1A3 42, மட்டக்குளி, சோச் ரோட்<br>1B1 207, மோதர தெரு<br>1B2 வைன் தெரு, பம்பிங் ஸ்டேஷன்<br>1B1 "குட்ஹோப்" டானியல்ஸ் ரோட்<br>1D2 211, மஹாவத்தை ரோட்<br>1D3 றெயில் ரோட்டுச்சந்தி, நாகலகம் தெரு<br>1E1 அலுத்மாவத்தை ஸென்ற் ஜேம்ஸ் தெருச் சந்தி<br>1E2 134, முகத்துவாரத்தெரு<br>1E3 எலிஹௌஸ் பாக் வாசலுக்கெதிரே<br>1F1 350, அலுத்மாவத்தை ரோட்<br>1F2 டொக்லன்ட் ஹோட்டல் | மியூனிசிப்பல் டிஸ்பென் ஸரி, ராஜமல்வத்தை, மோதர<br>டக்டர் டானியல் டி அல்விஸ் "ராணி", டெலிபோன் : 4695, (கந்தோர்) ஸ்பாதோடியா அவென்யூ ஹவலொக் டவுண் டெலி : 8424 (சொந்த) | மாதம்பிட்டி ரோட், மோதரப் பொலிஸ் ஸ்டேஷனுக் கெதிரே |
| 2. கொட்டாஞ் சேனையும் பாலத்துறையும் | 1. ஜீ. ஆர். த ஸில்வா J.P., M.M.C. இறீன் லொட்ஜ், ஸ்கின்னேர்ஸ் ரோட்டு, வடக்கு, டெலிபோன்: 5006 | 2A1 மியூனிசிபல் லோண்டரி, பன்சலை ரோட்டு<br>2A2 கொலீஜ் தெரு, 16 ம் லேன்சந்தி<br>2B1 79, பிக்கரிங்ஸ் ரோட்<br>2B2 கதீட்ரல் கொலீஜ், கொட்டாஞ் சேனைத் தெரு | 78, கொலீஜ் தெரு டக்டர் ஈ. ஏ. பெறீரு, 63 கணத்தை ரோட்<br>**மியூனிசிப்பல் டிஸ்பென் ஸரி, பிரின்ஸ் ஒவ் வேல்ஸ் அவன்யூ** | 20, சென்ற் லூசியா தெரு கொட்டாஞ் சேனை |

| எல்லை | 1. தலைமை வார்டன்<br>2. உப தலைமை வார்டன் | வார்டன் நிலையங்கள் | முதலுதவித் தலம் | நெருப்பணைப் புக்கோஷ்டித் தலம் |
|---|---|---|---|---|
| 2. கொட்டாஞ் சேனையும் பாலத் துறையும்—(தொடர்பு) | 2. இறிஸ்றி அபசுந்தர, "டில்லறி" கொட்டாஞ் சேனைத் தெரு, கொட்டாஞ் சேனை, டெலிபோன்: 3647 | 2C2 டாளிங்டன் தோட்டம், வால் ரோட் | | |
| | | 2D1 81, ஜம்பெற்று தெரு<br>2D2 கல்பொத்த தெரு, ஸ்கின்னேர்ஸ் ரோட் சந்தி<br>2D3 இறீன் ரோட்டுப்பள்ளிக்கூடம்<br>2E1 மோலவத்தை லேன்<br>2F1 பீ. ஓ. தோட்டம், சென்ற் ஜோசேப் தெரு<br>2F2 குப்பை மோள் கந்தோர், பிறின்ஸ் ஒவ் வேல்ஸ் அவென்யு<br>2G1 பட்டித் தோட்டம், 241, லேயாட்ஸ் ப்ரோட்வே<br>2G2 லேயாட்ஸ் ப்ரோட்வே 29 ம் நம்பருக்கு எதிரே<br>2G3 132, பாலத்துறை | டக்டர் ஆர். டபிள்யு. எப். அல்லிஸ், 10, பாண்ஸ் பிளேஸ்<br>டெலி : 4454 (கந்தோர்), 9200 (சொந்த) | |
| 3. ஸென்ற் போல்ஸ் & ஹல்வ்ஸ்டோப் | 1. என். சரவணமுத்து, J.P., M.M.C., 375, டாம் தெரு, டெலிபோன் 2613<br>2. எஸ். டபிள்யு. டயஸ் பண்டாரநயக, இறீன் தெரு, டெலி : 4750 | 3A1 59, கொச்சிக்கடை மியூனிசிப்பல் வீடுகள்<br>3A2 57, செட்டியார் செரு<br>3A3 166 கடற்கரைத் தெரு<br>3A4 52, கன்னதெரு<br>3A5 79, பள்ளிவாசல் லேன் | **மியூனிசிப்பல் டிஸ் பென்சரி, ஜிந்துப்பிட்டித் தெரு**<br>டக்டர் சி. ஜீ. எஸ். த ஸில்வா, 11, லேயாட்ஸ் ரோட், ஹவலொக்டவுண் | பிறைஸ் பாக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3A7 குவாறிரேட்டு., மார்க்கட்<br>3A8 111, தட்டார ஒழுங்கை பெல்மென்ற் ரேட்டடி | டெலி : 3826 (கந்தோர்), 8079 (சொந்த) | |
| 4. புறக்கோட்டை | A.<br>1. டீ. எல். எப். பீரிஸ், J.P., 8 அல்பிரெட் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, டெலி : 4409<br>2. டீ. ஈ. டீ. எஸ். கருணா ரத்ன, 8 அல்பிரெட் பிளேஸ், கொள்ளுப்பிட்டி<br>பி. சி. செல்வராஜா, காவரட் விடுதி, டாம் தெரு | 4B1 15, சைனு லேன்<br>4B3 எப். எக்ஸ். பெரைராஸ், 1 ம் குறுக்குத்தெரு<br>4B6 மக்கீஸ் ஸ்டோர்ஸ், மக்கலம்ரேட்<br>4C2 சிட்டி மிஷன் டாம் தெரு<br>4C4 பௌத்த தலைமைக்கந்தோர், நொறிஸ் ரேட்<br>4C5 பொலிஸ் பராக்ஸ், ஸன் செபஸ் தியன் | **கசரோக வைத்தியசாலை, ஸன் செபஸ்தியன்**<br>டக்டர், சீ. ஐ. த சில்வா, றீட் அவெனியூ டெலி: 2524 (கந்தோர்) 8256 (சொந்த)<br>டக்டர் எம். டீ. டீ. ஜய வர்தன, 10 பொலிஸ் பாக் அவெனியூ | றிக்ளமேஷன் தெரு நெருப் பணைப்புப் படைத்தலை மைநிலையம் |
| 4A. கோட்டை .. | B.<br>1. எச். சீ. ஹான்ஸ்போட், றீஜன்ற் ஃபிளாற்ஸ், டெலி : 4973<br>2. எஸ். ஏ. பி. பின்ரே, 88 சதாம் வீதி, டெலி : 4756 | 4A2 ஜீ. பீ. ஓ. கராஜ்<br>4A3 மத்திய வை. எம். சீ. ஏ.<br>4A4 அரசாங்க சபை | | நொறிஸ் ரேட்டிலே சமாச்சாரக் கந்தோருக் கருகில் |
| 5. கொம்பெனித் தெரு | 1. ஆர். எப். எஸ். த மெல், J. P., M. M. C. கறுன் வோத், ஹோட்டன்பிளேஸ் டெலி : 9437<br>2. சீ. ஐ. மத்தேயு, அன் டேர்சன் கொலீஜ், ஸ்டீ வார்ட் பிளேஸ் | 5A2 கிளென்னிதெருத் தோட்டம்<br>5A3 வவுக்ஸோல் நியூ ரேட் சந்தி<br>5A4 அம்பாலத்தையில், வோக் ஸோல் வீதி<br>5B1 ஹோலி ரேசரி ஸ்கூல், சேர்ச் தெரு<br>5B2 அண்டேர்சன் கொலீஜ், ஸ்டீவார்ட் தெரு | **மியூனிசிப்பல் டிஸ்பென் சரி, கொம்பெனித்தெரு**<br>டக்டர், ஏ. ஆர். எம். வாஃபான், 49, குறுவே தெரு, டெலி: 4693 (கந்தோர்), 3498 (சொந்த) | பொலிஸ் ஸ்டேஷன் கொம்பனித் தெரு |

| எல்லை | 1. தலைமை வார்டன்<br>2. உப தலைமை வார்டன் | வார்டன் நிலையங்கள் | முதலுதவித் தலம் | நெருப்பணைப் புகசோஷடித் தலம் |
|---|---|---|---|---|
| 5. கொம்பனித் தெரு—(தொடர்பு) | | 5B3 எம்பிளோய்மென்ற் எக்ஸ்சேஞ்ஜ் ஸ்டேப்பிள் ரோட்<br>5B4 மூசாஜிஸ் போரேஜ் சாலை, அல்ஸ்டன் பிளேஸ்<br>5B5 றிச்சாட் பீரிஸ் லிமிட்டெட், ஹைட் பாக் மூலை | | பைபிள் ஹௌஸ், 360, யூனியன்பிளேஸ் |
| 6. மருதானை, டெமற்றகொட, வெலிக்கடை | 1. ரீ. சதாசிவம், J.P.,U.M., M.B.E. "சுவர்ண," கமெல் பிளேஸ், டெலி : 9957<br>2. ஆர்தர் ஜயவர்தன, 284 பேஸ்லைன் ரோட், டெமற்றகொட<br>எச். என். ஜெய்னுதீன், "கிங்ஸ்லின்," கமெல் பிளேஸ், ஜே. டீ. பீ. பெரீரு, லொறென்ஸ் கொலீஜ், ஸ்கின்னேர்ஸ் ரோட் | 6A2 றெயில்வே கந்தோர் வாசல், 1 ம் டிவிஷன்<br>6A3 அபயசிங்கமார ரோட்<br>6B1 50, மாளிகாவத்தைரோட்<br>6B2 211, மாளிகாவத்தைரோட்<br>6B3 54, மாளிகாவத்தை லேன்<br>6B4 640, பேஸ்லைன் ரோட்<br>6C1 சென்ற் ஜோசப் கொலீஜ்<br>6C3 அரிசிக்குதம், சைமண்ட்ஸ் ரோட்<br>6C4 53, பொஸ்றர் லேன்<br>6C5 135, ஸ்டாபோட் பிளேஸ்<br>6D1 189, டெமற்றகொட ரோட்<br>6D2 ஸென்ற் அந்தோனிஸ் சேர்ச்<br>6D3 ஆனந்த கொலீஜ்<br>6D4 எலியாஸ் பிளேஸ்<br>6E1 26, கென்ற் ரோட்<br>6E2 136, கொலன்னுவ ரோட்<br>6E3 153, பழைய கொலன்னுவ ரோட்<br>6F1 14, கமெல் அவென்யூ | மியூனிசிப்பல் டிஸ்பென்சரி மாளிகாவத்தை<br>டக்டர் எல். டீ. பீ. தர்மரத்ன, "டெல்மர்" எலிபாங் ரோட், டெலி: 8475 (சொந்த)<br>மியூனிசிப்பல் டிஸ்பென்சரி, கமெல் அவென்யூ<br>டக்டர் எம். டீ. கரோலிஸ் 10, டொன் கரோலிஸ் ரோட், ஜாவத்தை டெலி : 8539 (சொந்த)<br>மியூனிசிப்பல் மிருக வைத்திய ரசாயன சாலை, மகவீன் ரோட் பொறளை | றெயில்வே ஸ்போட்ஸ் பூமி மருதானை<br>பரடைஸ் பிளேஸ், பரடைஸ் ஃபெரிரோட்<br>மகவீன்ரோட் பொறளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 6F2 913, 3 ம் டிவிஷன்<br>6F3 வெஸ்லி கொலீஜ்<br>6F4 லேடி ஹவலொக் ஆஸ்பத்திரி<br>6F5 பிட்டணி, மவுண்ட் மேறீஸ் ரோட்<br>6G1 பாக்டீரியோ லொஜிக்கல் ஸ்தாபனம்<br>6G2 50, வனத்தமுல்லே ரோட்<br>6G4 87, கொட்டா ரோட்<br>6G5 கோதமிரோட், கொட்டாரோட் சந்தி | டக்டர் ஆர். ஜே. விற்றின், டெலி: 9539 (கநதோர்) 9717 (சொந்த) | |
| 7. கொள்ளுப் பிட்டி, கறுவாக் காடு | 1. ஈ. ஸீற், 90/91, ஹோட்டன் பிளேஸ், டெலி : 9946<br>2. ஸேர் ஜோன் டாபர்ட், "கெஸ்ரன்," டொரிங்ரன் பிளேஸ் | 7A1 ஸ்டீவாட் ஹௌஸ், கொள்ளுப்பிட்டி<br>7A2 230, காலி ரோட், கொள்ளுப்பிட்டி<br>7A3 சென்ற் மைக்கல்ஸ் ரோட் அல்விஸ் பிளேஸ் சந்தி<br>7B1 348, காலிரோட், கொள்ளுப்பிட்டி<br>7B2 726, காலிரோட், கொள்ளுப்பிட்டி<br>7B3 பல்மோரா அவென்யூ, காலிரோட்சந்தி<br>7C1 டரெட் ரோட், கிறீன்பாத் சந்தி<br>7C2 173, இன்னர் பிளவர் ரோட்<br>7C3 டீல் பிளேஸ், (பிரசித்த டெலிபோனுக்கருகே)<br>7C4 9, சாள்ஸ் சேக்கிள்<br>7D1 26, பாகத்தல ரோட்<br>7D2 புல்லர்ஸ் ரோட் டச் பேகர் கிளப்புக்குப் பின்னலே<br>7E1 57, வார்ட் பிளேஸ்<br>7E3 51, பாண்ஸ் பிளேஸ்<br>7F1 கேம்பிரிஜ் பிளேஸ், 10 ம் நம்பருக் கெதிரே | மியூனிசிப்பல் டிஸ்பென் சரி, கொள்ளுப்பிட்டி<br>டக்டர் ஜே. ஜீ. கன்னங் கரா, 22 திக்கெல்ரோட், பொறலே | எடின்பரோ வளைவு, (முள்வீட்டுக் கெதிரே) |

| எல்லை | 1. தலைமை வார்டன்<br>2. உப தலைமைவார்டன் | வார்டன் நிலையங்கள் | முதலுதவித் தலம் | நெருப்பணைப் புக்கோஷடித் தலம் |
|---|---|---|---|---|
| 7. கொள்ளுப் பிட்டி, கறுவாக்காடு—(தொடர்பு) | | 7F2 இறெகறி, மக்காதி றேட் சந்தி | | |
| | | 7F3 யூனிவேர்சிட்டிக் கட்டிடம் | | |
| | | 7F4 கெஸ்றறன், டொரிங்டன் பிளேஸ் | | |
| | | 7G1 ஙவ. எம். பி. ஏ. கணத்தைறேட் | | |
| | | 7G2 காசில் றேட், பம்பிங் ஸ்டேஷன் | | |
| | | 7G3 புல்லர்ஸ் றேட் கொட்டாறேட்சந்தி | | |
| 8. திம்பிரிகஸ்யாய பம்பலப்பிட்டி, வெள்ளவத்த | 1. டீ. எஸ். பொன்சேகா, J.P., M.M.C., ஹவலொக் றேட், டெலி : 8288 | 8A1 பொலீஸ் ஸ்டேஷன், பம்பலப்பிட்டி | பொலிஸ் றிறெயினிங் ஸ்கூல், பம்பலப்பிட்டி | |
| | 2. எப். எச். பீ. கோமேஸ், "மாட்ரிட் ஹவுஸ்," காலி றேட், வெள்ளவத்தை | 8A2 லோறிஸ் பிலேஸ், ஜோசப்லேன் சந்தி | டக்டர் லியோ எச். பீரிஸ், "டெல்மார்," எலிபாங்க் றேட், | |
| | டீ. த இறெஸ்றறர், "எப்சம்," பசெல்ஸ் லேன் | 8A3 ஹவலொக்றேட், கவர்றேட்சந்தி | டெலி : 8299 (கந்.) 8475 (சொந்த) | |
| | | 8B1 ஸ்டான்மூர் வளைவு, மக்கன்சி றேட் சந்தி | | |
| | | 8B2 இன்ஸ்பெக்டர்ஸ் மெஸ், டிரெயினிங் ஸ்கூல் றேட் | | |
| | | 8C1 புல்லர்ஸ் றேட், புல்லர்ஸ் லேன் சந்தி | | |
| | | 8C2 166, நாரம்பிட்டி றேட் | | |
| | | 8C3 | | |
| | | 8C4 451, திம்பிரிகஸ்யாய றேட் | | |
| | | 8C5 151/5, கிரிலப்பனை றேட் | | ஹவலொக் றேட் (வெள்ளவத்தை மோருக் கருகே, |
| | | 8D1 32. றிற்றிறீற் றேட், பம்பலப்பிட்டி | | |
| | | 8D2 14 ம் லேன், டிக்மன்ஸ் லேன் சந்தி | | |
| | | 8D3 அன்டேர்சன் றேட், டிக்மன்ஸ் றேட் சந்தி | | |

| | |
|---|---|
| 8E1 288, காலி ரேட் பம்பலப்பிட்டி | மியூனிசிப்பல் டிஸ்பென்சரி, வெள்ளவத்தை |
| 8E2 3, கென்சிங்றன் தோட்டம் | டக்டர் வீ. கே. பரமநாயகம், 54, 34 ம் லேன், வெள்ளவத்தை, டெலி : 8223 (கந்.) |
| 8E3 41, எலிபாங்க் ரேட் | |
| 8F1 81, கிறீன்லண்ட் ரேட் | |
| 8F2 வாலேஸ் லாயம், திம்பிரிகஸ்யாய | |
| 8G1 38, காலி ரேட், வெள்ளவத்தை | |
| 8G2 வெள்ளவத்தை மோள் | |
| 8G3 568, ஹவலொக் ரேட் | |
| 8H1 207, காலி ரேட், வெள்ளவத்தை | |
| 8H2 351, காலிரேட் வெள்ளவத்தை | |
| 8J1 24, ஹம்டன் லேன் வெள்ளவத்தை | |
| 8J2 776, ஹவலொக் ரேட் | |
| 8K1 328, காலிரேட் வெள்ளவத்தை | |
| 8K2 472, காலி ரேட், வெள்ளவத்தை | |

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.

S. N. Kulandavel
School Master
oodoowerre Tamil mxd School
DEMODERA
CEYLON.

Padukka 1-2.46 - 1.11-46
oodoowerre 1.10.47. 1-